அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2015 - 2016

**மானியக் கோரிக்கை எண். 42**

**திரு. எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

# <u>பொருளடக்கம்</u>


| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | ஊராட்சி நிர்வாகம் | 12 |
| 3. | மாநில அரசுத் திட்டங்கள் | |
| 3.1 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் | 82 |
| 3.2 | முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 93 |
| 3.3 | நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 100 |
| 3.4 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 100 |
| 3.5 | கிராம ஊராட்சி தெரு விளக்குகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சூரிய சக்தி பயன்பாட்டினை மேம்படுத்துதல் | 114 |
| 3.6 | ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | 115 |
| 3.7 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 118 |
| 3.8 | தன்னிறைவுத் திட்டம் | 126 |
| 3.9 | சுகாதாரதிட்டங்கள் | 131 |
| 3.10 | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல் | 133 |
| 3.11 | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களின் பராமரிப்பு | 134 |
| 3.12 | ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் | 136 |
| 3.13 | உயிர் செரிமானி இணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சமூக பசுமை சுகாதார வளாகங்கள் | 137 |
| 3.14 | தூய்மையான கிராம இயக்கம் | 138 |
| 3.15 | மாநில அளவில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் மூலம் திறந்தவெளி மலம் கழித்தலை ஒழித்தல் | 140 |
| 3.16 | தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் மேற்கொள்ளபடும் உத்திகள் | 141 |
| 3.17 | ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 149 |
| 3.18 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 155 |

| | | | |
|---|---|---|---|
| | 3.19 | தானே வீடு வழங்கும் திட்டம் | 155 |
| 4 | | **மத்திய அரசுத் திட்டங்கள்** | |
| | 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 159 |
| | 4.2 | இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் | 182 |
| | 4.3 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் | 186 |
| | 4.4 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 187 |
| | 4.5 | பதிமூன்றாம் நிதி ஆணைய மானியம் – சாலைப் பணிகள் | 188 |
| | 4.6 | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) | 189 |
| | 4.7 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் | 194 |
| | 4.8 | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் | 197 |
| | 4.9 | சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பு | 197 |
| 5 | | **மனிதவள மேம்பாடு** | 201 |
| | 5.1 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 201 |
| | 5.2 | பொறியியல் பணியமைப்பு | 203 |





| | | | |
|---|---|---|---|
| | 5.3 | முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல் | 205 |
| | 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 206 |
| | 5.5 | காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்ட விவரம் | 208 |
| | 5.6 | ஊராட்சி செயலர்கள் மற்றும் ஊராட்சியில் இதர ஊழியர்களுக்கான சலுகைகள் | 209 |
| | 5.7 | திறன் மேம்பாடு | 210 |
| 6 | | புது வாழ்வு திட்டம் | 223 |
| 7 | | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | 242 |
| 8 | | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | 283 |
| 9 | | வரவு செலவுத் திட்டம் 2015–16 | 296 |
| 10 | | முடிவுரை | 298 |

## 1. முன்னுரை



# ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2015–16

### 1. முன்னுரை

***"ஊரகப் பகுதிகளில், இந்த அரசால் வடிவமைத்து செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள், கட்டமைப்பு மற்றும் தரமான சேவை வழங்குதலில், நாட்டின் எந்தப் பகுதியிலும் கண்டிராத வகையில் அதிகபட்ச தரத்திற்கான வரையறையினை நிர்ணயித்துள்ளது ".***

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, ஊரகப் பகுதிகளின் வளர்ச்சி இன்றியமையாததாகையால், இந்த அரசின் தலையாய முன்னுரிமைகளில் ஒன்றாக ஊரக வளர்ச்சி இடம் பெற்றுள்ளது. ஊரகப் பகுதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, கடந்த நான்காண்டுகளில் செலவிடப்பட்ட பெருமளவிலான நிதி மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்களைப் போன்று, இதற்குமுன் எப்போதும் தமிழகம் கண்டதில்லை. இந்த சாதனை, நமது தன்னிகரில்லா மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையினால் சாத்தியமாயிற்று.

அனைத்து குக்கிராமங்களுக்கும் சம அளவிலான நிதி வழங்குதலோடு ஊரக மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில், ஊரகப் பகுதிகளில் ஒரு

முன்னோடித் திட்டமாக, ''குக்கிராமங்களை'' அடிப்படை அலகாகக் கொண்டு **''தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்'' (தாய் திட்டம்)** இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. ''குக்கிராமங்களை'' வளர்ச்சிக்கான அடிப்படை அலகாகக் கொண்டு திட்டம் செயல்படுத்தக்கூடிய முதல் மாநிலம் தமிழ்நாடு தான். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் உள்ள 79,394 குக்கிராமங்களிலும் அடிப்படைத் தேவைகளை ஒரு விரிவான கணக்கெடுப்பின் மூலம் கண்டறிந்து, அவ்வாறு கண்டறியப்பட்ட தேவைகள் 'தாய்' திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. பெரு மற்றும் சிறு நகரப்பகுதிகளில் உள்ள அத்தியாவசிய அடிப்படை வசதிகள், தமிழகத்தில் உள்ள அனைத்து ஊரக குக்கிராமங்களிலும் ஏற்படுத்தப்படுவதை 'தாய்' திட்டம் உறுதி செய்கிறது.

கிராமப்புற மக்களுக்கு உகந்த சுற்றுச்சூழல் கொண்ட குடியிருக்கத்தக்க பரந்த இடவசதியுடன், தேவையான அனைத்து வசதிகளுடன், சூரிய மின் சக்தி விளக்குகளையும் கூடுதலாகக் கொண்ட கண்ணியமான வீடுகள் கிடைப்பதற்கு வழிவகை செய்ய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள **முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்,** நம் நாட்டின் வளர்ச்சித் திட்ட வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைக்கும் மற்றுமொரு முன்முயற்சியாகும். மேலும், இத்திட்டமானது கிராமப்பகுதிகளில் தூய்மையான



சுற்றுச்சூழலை உருவாக்கவும், மாசுபடாத மின்னாற்றலைச் சேமிப்பதற்கும் வழிகோலுகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்றிடும் நோக்கில், தேவையான கட்டமைப்பு வசதிகள், நிதி ஆதாரங்கள் மற்றும் தகவல், கல்வி, தொடர்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, இந்த அரசு ஊரக சுகாதாரத்திற்கு ஒரு புது உத்வேகத்தை அளித்துள்ளது. அனைத்து ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களும் புனரமைக்கப்பட்டு, குக்கிராம அளவிலான பயன்படுத்துவோர் குழுக்கள் மூலம் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும், பயன்படுத்தப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது. இதே அடிப்படையில் ஆண்கள் சுகாதார வளாகங்களும் 2012–13 ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்டு வருகின்றன. **அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து, அவர்களை மக்கள் இயக்கமாக மாற்றி திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை வேரோடு ஒழித்து, திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன், பல்முனை செயல் திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

அனைத்து குக்கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்துதல் இந்த அரசின் மற்றுமொரு முன்னுரிமையாகும். இதனைக் கருத்திற் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கு பெருமளவில் நிதியினை ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். அரசின் இந்த தொடர் முயற்சியின்

காரணமாக 2010–11ஆம் ஆண்டில் 1.03 இலட்சம் கி.மீ. ஆக இருந்த ஊரகச் சாலைகள், 2015–16ஆம் ஆண்டில் 1.47 இலட்சம் கி.மீ. ஆக உயர்ந்துள்ளது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சுற்றுச்சூழல் பாதிப்படைவதை குறைக்கவும், தார்ச்சாலைகளின் தரத்தினை மேம்படுத்தவும், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி தார்ச்சாலைகள் அமைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. எந்த ஒரு பகுதியின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் நன்கு நிர்மாணிக்கப்பட்ட ஊரக இணைப்புச் சாலைகள் இன்றியமையாததாகும். மண் சாலைகளை தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், சேதமடைந்த சாலைகளை வலுப்படுத்துதல், பாலங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டதன் மூலம் தொலைதூரப் பகுதிகளையும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை புதிய உத்வேகத்துடன் திறம்பட செயல்படுத்த பின்வரும் முனைப்பான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. i) ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை மேற்கொள்ளுதல். ii) செயற்கைக்கோள் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு நீர் நிலை ஆதாரப்பணிகளைத் தேர்வு செய்தல், iii) தொழிலாளர்கள் முழு ஊதியத்தையும் பெறுவதற்கான



தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். iv) வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல். v) பணித்தள பொறுப்பாளர்கள் மூலம் தொழிலாளர்களிடையே இணக்கமான சூழ்நிலையினை ஏற்படுத்துதல். vi) குக்கிராமங்கள் வாரியாக தொழிலாளர்கள் பங்கேற்பை உறுதி செய்யும் பொருட்டு தொடர்ந்து இணையதள வாயிலாக கண்காணித்தல். மேலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு/குறு விவசாயிகள், நிலச் சீர்திருத்த திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளோர் ஆகியோர் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய அளவில் அதிகபட்ச மனிதசக்தி நாட்களை உருவாக்குவதன் மூலம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நிலையான சொத்துக்களை உருவாக்குவதை அதிகரிக்கும் நோக்கத்தோடு பொருள் கூறு தொடர்பான வேலைகளும் 2014–15ம் ஆண்டு முதல் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் கீழ் பொதுச் சொத்துக்களான கிராம ஊராட்சி சேவை மையங்கள், வட்டார சேவை மையங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், அங்கன்வாடி

கட்டடங்கள், தானிய சேமிப்புக் கிடங்குகள் மற்றும் தனிநபர் இல்ல கழிப்பிடங்கள் போன்றவை எடுக்கப்பட்டுள்ளன.

உடல் மற்றும் மன அளவிலான மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக, தனித்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் அவர்கள் பங்கேற்றிட ஏதுவாக சிறப்பு விலை விகித அட்டவணை வெளியிடப்பட்டது. இம்முயற்சி மத்திய அரசாலும் அங்கீகரிக்கப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ன் திருத்திய அட்டவணை I ல் சேர்க்கப்பட்டுள்ளது.

2012–13ம் ஆண்டு தேசிய அளவில், சிறந்த செயல்பாட்டுக்காக **"சமூக பங்களிப்பு" என்ற தலைப்பின் கீழ் "சிறந்த மாநிலத்திற்கான விருது" பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே.** மேலும், 2013-14 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தேனி மாவட்டம், சிறந்த மாவட்ட விருதினையும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், F.கீழையூர் கிராம ஊராட்சி, சிறந்த ஊராட்சிக்கான விருதினையும் பெற்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க வழிகாட்டுதலில் மகளிர் சுய உதவிக்குழு இயக்கம் தமிழ்நாட்டில் மாபெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் வாழும் பெண்களின், குறிப்பாக கிராமப்புற ஏழை மகளிரின் வாழ்க்கைத் தரத்தில், சுய உதவிக்குழு இயக்கம் விரைவான மாற்றத்தைக்



கொண்டு வந்துள்ளது. 1983ம் ஆண்டு மகளிர் மேம்பாட்டிற்காக துவக்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகிய இரு திட்டங்களின் மூலம், பயிற்சி, வாழ்வாதார உதவிகள் மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்கி, அவர்களின் வளமான வாழ்வுக்கு வழி காட்டி வருகிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் சுய உதவிக் குழுவினரிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தி, அவர்கள் கடன் சுமையில் விழாமல் பாதுகாக்கிறது. மேலும் அவர்கள் வங்கிக் கடன் பெற்று வருமானம் ஈட்டக்கூடிய தொழில்கள் தொடங்கி, தங்கள் வாழ்வாதாரத்திற்கான வருவாயினை ஈட்டவும் ஊக்குவிக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் வங்கிக் கடனாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 20,270 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2014–15 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் 272 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பெற்று 83,686 வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்கள் 2,525 தனியார் நிறுவனங்களில் 5,000 ரூபாய் முதல் 12,000 ரூபாய் வரையிலான மாத ஊதியத்தில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

விடுபட்ட ஏழை மக்கள் – குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் ஆகியோரை சுய உதவிக்குழு இயக்கத்திற்கு கொண்டு வருதல், சமுதாய நிறுவனங்களை வலுப்படுத்துதல், சமூக மூலதனத்தை மேம்படுத்துதல், நிதி

உள்ளாக்கத்திற்கு உதவிடுதல், ஏழைகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் நிலைத்த வாழ்வாதார வாய்ப்புக்களை அளித்தல் ஆகியவையே தமிழ்நடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலையாய நோக்கங்களாகும். இத்திட்டம், தமிழ்நாட்டில் 265 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2005ம் ஆண்டு உலக வங்கி உதவியுடன் கூடிய தமிழ்நாடு புது வாழ்வுத்திட்டம் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டு தற்பொழுது 120 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிகரில்லா முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை மக்களை இலக்காகக் கொண்டு செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் (VPRC) மூலம் கிராம மக்களின் வறுமையை முற்றிலுமாக நீக்கும் முயற்சி மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. எனவே, பல்வேறு மாநிலங்கள் மற்றும் நாடுகளில் இருந்து பல்வேறு குழுக்கள் தமிழ்நாட்டிற்கு இத்திட்டச் செயல்பாடுகளை அறிந்து கொள்ள வருகை புரிவதில் வியப்பேதுமில்லை என்பதோடு, இது போன்ற திட்டத்தை தங்கள் பகுதியிலும் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர். புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் இளைஞர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் திறன் பயிற்சி சிறந்த நிறுவனங்கள் மூலம் பல்வேறு துறைகளில் வழங்கப்படுகிறது. இத்தகைய பல்வேறு தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதால்



இளைஞர்களின் வாழ்க்கைத்தரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்பாடு அடைந்துள்ளது. சுயஉதவிக் குழு இயக்கம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புது வாழ்வுத்திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளின் மூலம் தமிழ்நாட்டில் மகளிரின் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

## 2. ஊராட்சி நிர்வாகம்



## 2. ஊராட்சி நிர்வாகம்

தமிழ் நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டதற்கான உறுதியான வரலாற்றுச் சான்றுகளாக சோழர் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரிலுள்ள ஸ்ரீ வைகுண்டப்பெருமாள் கோவில் கல்வெட்டுகள் விளங்குகின்றன. இத்தகைய மக்களாட்சி அமைப்பில் கிராமக்குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர். மன்னராட்சி அமைப்பில் மக்களாட்சி தோற்றம் கொண்ட இம்முறையில் கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

நாடு விடுதலை அடைந்த பின்னர், அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு 40ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்ட தனது அறிக்கையில் மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திட பரிந்துரைத்தது.

மதராஸ் அரசு இயற்றிய, 1958–ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் ஆகியவற்றில் அடங்கிய முக்கிய அம்சங்களாவன:

1. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் என்ற இரண்டு அடுக்கு முறை
2. ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டு சமுதாய வளர்ச்சி வட்டாரங்களாக ஒருங்கிணைக்கப்பட்டன.
3. கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியக் குழுவின் பெருந்தலைவராகவும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல்.
5. மாவட்ட போர்டுகளை கலைத்தல்
6. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிர்வாகத்தில் ஆலோசனை வழங்க மாவட்ட வளர்ச்சி மன்ற குழு ஏற்படுத்தப்பட்டது.

### 2.1. 73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243 ஜி–ன்படி



ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் 11–வது அட்டவணையில் 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ‘மாவட்ட திட்டக் குழு’ உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 22.4.1994ல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21, 1994) தமிழ்நாடு அரசு நடைமுறைக்கு கொண்டு வந்தது.

### 2.2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன்படி தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.

i) தமிழ்நாட்டில் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ii) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் காலியிடம் ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பதவியிடங்கள் நிரப்பப்படுதல்.

iii) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பதவியிடங்கள் (வார்டு உறுப்பினர்கள்) மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு (ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் / ஊராட்சித் தலைவர்) சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு கொண்டு வருதல்.

iv) மொத்தப் பதவி மற்றும் தலைமைப் பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு செய்யும் முறையை கொண்டு வருதல்.

v) ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்ந்து தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்ற தன்னாட்சி அமைப்பினை ஏற்படுத்துதல்.

vi) மாநில நிதி ஆதாரங்களை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரை செய்யும் வகையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தினை ஏற்படுத்துதல்

vii) மாவட்ட அளவில் விரிவான வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திட ஏதுவாக ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்துள்ள திட்டங்களைத் தொகுத்திட மாவட்ட திட்டக்குழுவினை ஏற்படுத்துதல்.



viii) கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய . ‘கிராம சபை’ என்ற அமைப்பினைக் கொண்டு வருதல்.

## 2.3. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் கீழ் வெளியிடப்பட்ட முக்கிய விதிகள்

**1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்புடைய அனைத்து விதிகளையும் வெளியிட அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசால் வெளியிடப்படும் விதிகள் **1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அம்சங்களை செயல்படுத்த தொடர்புடைய அமைப்புகளுக்கும், அலுவலர்களுக்கும் உறுதுணையாகத் திகழ்கின்றன.

i) **தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சி கூட்டத்தினை நடத்துவதற்கான குறைவெண் வரம்பு மற்றும் நடைமுறைகள்) விதிகள், 1999:**

ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்கிடையிலான கால இடைவெளி, கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பு மற்றும் பொருள்கள், குறைவெண் வரம்பு, வருகைப் பதிவு, தீர்மானம் இயற்றுதல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் தயார் செய்தல் மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ii) **கிராம சபை நடத்துவதற்கான விதிகள்:**

தமிழ் நாடு கிராம சபை (கிராம சபை கூட்டுதல் மற்றும் நடத்துவதற்கான நடைமுறைகள்) விதிகள் **1998**

மற்றும் அவ்விதிகளுக்கு 2006–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருத்தங்களில் கிராம சபை கூட்டுவதற்கான நடைமுறைகள் மற்றும் நடத்துவதற்கான வழிமுறைகள் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விதிகளின்படி, ஆண்டுக்கு 4 முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபை நடத்த வேண்டியது அவசியமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை நடத்துவதற்கான குறைவெண் வரம்பு, கூட்டப்பொருள், வருகைப் பதிவு, தீர்மானங்கள் இயற்றுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளைத் தயார் செய்தல் ஆகியவை குறித்த நெறிமுறைகள் இவ்விதிகளில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

iii) **தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995:**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்களை நடத்துவது குறித்து இவ்விதிகள் விளக்குகின்றன. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், வாக்குப்பதிவு, வாக்குகளை எண்ணுதல், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் செலவினங்கள், தேர்தல் வழக்குகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



iv) **தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை) விதிகள், 1995:**

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சிமுறை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

v) **தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997:**

ஊரகப் பகுதிகளில் மனைப் பிரிவுகள் அங்கீகாரம் மற்றும் கட்டட வரைபடங்களை அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கான விதிமுறைகள் இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி, ஊராட்சி மன்றத்தலைவர் சில வரைமுறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி அளிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட பரப்பளவிற்கு மிகையான கட்டட வரைபடங்களுக்கும், அனைத்து மனைப்பிரிவுகளுக்கும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அனுமதி அளிக்க இவ்விதிகள் வகை செய்கிறது.

vi) **தமிழ்நாடு ஊராட்சிகள் (வரிவிதிப்பு மற்றும் வசூலித்தல்) விதிகள், 1999:**

கிராம ஊராட்சிகளில் வீட்டுவரி நிர்ணயித்தல், வீட்டு வரி செலுத்துவோர் பட்டியல் தயாரித்தல், வீட்டு வரி விதிப்பின் மீதான மேல்முறையீடு, வீட்டு வரியை வசூல்

செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

vii) **தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) விதிகள், 2007:**

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் பொது நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் பெறப்படும் திட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

viii) **தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்) விதிகள், 2015:**

ஊரகப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள், குழாய் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக் கிணறுகள் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்போது எதிர்பாராத விதமாக குழந்தைகளுக்கு நேரக்கூடிய விபத்துக்களை தவிர்த்திட மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிணறு தோண்டுவதற்கான அனுமதியினை விண்ணப்பதாரருக்கு வழங்குதல், கிணறு தோண்டும் நிறுவனங்களுக்கு பதிவுச்



சான்று வழங்குதல், அதற்கான பதிவேட்டினை பராமரித்தலுக்கான படிவங்கள் மற்றும் மாதாந்திர அறிக்கைகள் அனுப்புதல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4. மாநிலத் தேர்தல் ஆணையம்

அதிகாரப் பரவலாக்கம் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் **1994–**ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கிராம ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல், அதனைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

**1994–**ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **239** உட்பிரிவு **(3)–**ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்த விதிகளை ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். மாநிலத் தேர்தல் ஆணையராக

நியமிக்கப்பட்டவருக்கு 65 வயது நிறைவடையும் நிலையில் அவருக்கு ஓய்வளிக்கப்பட வேண்டும். மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பணியிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

### 2.5. உள்ளாட்சித் தேர்தல்

தமிழ்நாட்டில், 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996–ம் ஆண்டு நடத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2001–ம் ஆண்டும், அதேபோல மூன்றாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2006–ம் ஆண்டும் நடத்தி முடிக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான நான்காவது சாதாரண தேர்தல் அக்டோபர் மாதம் 2011–ம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்பட்டன. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள்



நடத்தப்பட்டன. 2011ம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியிடம் குறித்த விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| மொத்தம் | | 1,19,399 |

### 2.6. கிராம ஊராட்சிகளில் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டாக மாற்றியமைத்தல்

2006–ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஓர் உறுப்பினர் வார்டுகள் அடிப்படையிலும், கிராம ஊராட்சிக்கு பல உறுப்பினர் கொண்ட வார்டுகள் அடிப்படையிலும் தேர்தல் நடைபெற்று வந்தது.

கிராம ஊராட்சியில் வழக்கத்திலிருந்த பல உறுப்பினர் வார்டு முறையினால் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வார்டுகளில் இட ஒதுக்கீடு செய்வதில் மிகுந்த சிரமங்கள்

இருந்தன. மேலும், இந்த முறையால் கிராமத்திலுள்ள வாக்காளர்களுக்கு வாக்கு சீட்டுக்களில் குழப்பமும், வாக்கு எண்ணிக்கையின்போது அலுவலர்களுக்கு சிரமங்களும் ஏற்பட்டன. பல உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாததால் ஒவ்வொரு வார்டு உறுப்பினருக்குரிய பகுதி தெளிவு படுத்தப்படவில்லை. எனவே, 2009–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 20, 2009)–ன்படி, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 12–க்கு திருத்தம் செய்யப்பட்டது. ஆனால், அச்சட்ட திருத்தத்திற்கு தொடர்பான விதி திருத்தம் வெளியிடப்படாததால் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டாக மாற்றி அமைக்கும் பணி நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அரசாணை எண்.63 ஊரக வளர்ச்சி (பரா 2) ஊராட்சித் துறை நாள்.14.9.2011–ன்படி, 2011ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகளை பிரித்தல்) விதிகள் 1995–ல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, கிராம ஊராட்சியில் ஒரு உறுப்பினர் வார்டு முறை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். எனவே, தேர்தல் நடைமுறைகள்



தங்குதடையின்றி நடைபெறும் வகையிலும், கிராம ஊராட்சி வார்டுகளின் எல்லைகளை தெளிவாக வரையறை செய்யும் பொருட்டும், கிராம ஊராட்சியில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. 2001ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி வார்டுகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 99,333 ஆக அதிகரித்து அதே எண்ணிக்கையிலான வார்டுகளும் ஏற்படுத்தப்பட்டன. கிராம ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்களுக்கான சாதாரண தேர்தல் ஒரு உறுப்பினர் வார்டு முறையில் அக்டோபர் 2011–ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

### 2.7. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் 11, 20, 32, 57 மற்றும் 1995–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் ஆகியவற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2.**
**2011–ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தல் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விபரம்**

| வ.எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவி இடங்கள் | மகளிருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு | ஆதிதிராவிடருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு | பழங்குடியினருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 | 11 | 35 | 7 | 24 | 0 | 0 |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36 | 87 | 23 | 4 | 1 |
| 3 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 | 4,289 | 34 | 3,136 | 25 | 156 | 1 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 655 | 228 | 35 | 154 | 24 | 8 | 1 |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,471 | 2,286 | 35 | 1,526 | 24 | 64 | 1 |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 99,333 | 33,121 | 33 | 25,360 | 26 | 1,039 | 1 |



## 2.8. கிராம ஊராட்சி

31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ளன. கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப்பின்னர் நடைபெறும் முதற்கூட்டத்திலிருந்து 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார்.

## 2.9. கிராம சபை

கிராம சபை என்பது ஒவ்வொரு கிராம ஊராட்சியில் உள்ள ஜனநாயகத்தின் ஆணிவேராகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான, வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களை செயல் படுத்துதல் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரித்தல் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுத்திட செயல்திறன் மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது. சட்டப்படி, இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கிராம

ஊராட்சியிலும் ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் அரசு கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு நிர்ணயம் செய்துள்ளது.

**அட்டவணை 2.3.**

**கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு**

| வ. எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்



4. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
5. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
6. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

## 2.10. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஊராட்சிவாரியான மக்கள் தொகை விபரம்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, 31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் கீழ்கண்டவாறு கிராம ஊராட்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## அட்டவணை 2.4.
## 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்

| வ. எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2 | 501–1000 | 833 |
| 3 | 1001–3000 | 6,821 |
| 4 | 3001–5000 | 2,781 |
| 5 | 5001–10000 | 1,753 |
| 6 | 10,000க்கு மேல் | 290 |
| **மொத்தம்** | | **12,524** |

மாவட்ட வாரியாக தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் உள்ளடக்கிய ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.5.
## மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | பெண்கள் | பழங் குடியினர் | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 18,61,789 | 9,24,124 | 29,706 | 6,24,458 | 33.54 |
| 2 | திருவள்ளூர் | 15,85,280 | 7,90,170 | 37,708 | 5,04,115 | 31.80 |
| 3 | கடலூர் | 18,00,133 | 8,91,507 | 10,082 | 6,25,788 | 34.76 |
| 4 | விழுப்புரம் | 29,12,960 | 14,45,062 | 71,289 | 9,19,308 | 31.56 |
| 5 | வேலூர் | 24,82,556 | 12,41,612 | 65,230 | 6,05,248 | 24.38 |
| 6 | திருவண்ணாமலை | 20,39,049 | 10,14,486 | 87,096 | 5,02,044 | 24.62 |
| 7 | சேலம் | 19,57,105 | 9,45,014 | 1,12,334 | 3,54,545 | 18.12 |
| 8 | நாமக்கல் | 10,87,895 | 5,37,918 | 55,417 | 2,48,100 | 22.81 |
| 9 | தர்மபுரி | 12,90,530 | 6,24,646 | 60,609 | 2,13,538 | 16.55 |
| 10 | கிருஷ்ணகிரி | 14,65,743 | 7,17,175 | 20,980 | 2,20,945 | 15.07 |
| 11 | ஈரோடு | 11,30,722 | 5,59,797 | 19,084 | 2,16,689 | 19.16 |
| 12 | திருப்பூர் | 11,39,466 | 5,68,772 | 1,947 | 2,63,539 | 23.13 |
| 13 | கோயம்புத்தூர் | 10,21,359 | 5,10,409 | 19,565 | 2,13,492 | 20.90 |
| 14 | நீலகிரி | 3,10,591 | 1,59,447 | 22,767 | 91,446 | 29.44 |
| 15 | தஞ்சாவூர் | 16,67,809 | 8,46,926 | 1,465 | 3,84,291 | 23.04 |
| 16 | நாகப்பட்டினம் | 12,61,288 | 6,37,194 | 2,214 | 4,60,876 | 36.54 |
| 17 | திருவாரூர் | 10,06,482 | 5,06,528 | 939 | 3,88,740 | 38.62 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14,71,945 | 7,39,563 | 14,519 | 3,05,109 | 20.73 |
| 19 | கரூர் | 6,68,360 | 3,36,684 | 201 | 1,59,718 | 23.90 |
| 20 | பெரம்பலூர் | 4,68,017 | 2,34,113 | 2,136 | 1,50,504 | 32.16 |
| 21 | அரியலூர் | 6,71,100 | 3,37,847 | 9,946 | 1,63,770 | 24.40 |
| 22 | புதுக்கோட்டை | 13,41,111 | 6,75,896 | 845 | 2,51,552 | 18.76 |
| 23 | மதுரை | 13,00,481 | 6,44,431 | 4,896 | 2,72,494 | 20.95 |
| 24 | தேனி | 5,75,394 | 2,84,527 | 1,377 | 1,43,589 | 24.95 |
| 25 | திண்டுக்கல் | 14,57,412 | 7,25,917 | 4,580 | 3,34,064 | 22.92 |
| 26 | இராமநாதபுரம் | 10,09,270 | 5,01,016 | 526 | 2,13,583 | 21.16 |
| 27 | விருதுநகர் | 12,86,543 | 6,44,603 | 1,197 | 3,15,796 | 24.55 |
| 28 | சிவகங்கை | 9,52,610 | 4,77,215 | 518 | 1,88,454 | 19.78 |
| 29 | திருநெல்வேலி | 16,45,509 | 8,32,916 | 4,099 | 3,58,487 | 21.79 |
| 30 | தூத்துக்குடி | 9,71,273 | 4,92,268 | 1,921 | 2,48,752 | 25.61 |
| 31 | கன்னியாகுமரி | 6,46,441 | 3,25,257 | 3,893 | 26,546 | 4.11 |
| | மொத்தம் | 404,86,223 | 201,73,040 | 6,69,086 | 99,69,580 | 24.62 |



## 2.11. ஊராட்சி வாரியான பரப்பளவு விவரம்

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஊராட்சிக்கான மொத்த மக்கள் தொகை, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்கள் தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு அடிப்படையில் ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பகிர்வு மானியத்தினை வழங்க நான்காவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையினை மாநில அரசு ஏற்றுக்கொண்டு, அதனடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கான பகிர்வு மானியத்தினை விடுவித்திட ஆணையிட்டுள்ளது. ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு **1,04,149.61** சதுர கி.மீ. ஆகும். மாவட்டவாரியான பரப்பளவு விவரம் பின்வருமாறு:

### அட்டவணை 2.6.

### மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம்

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 633 | 3,512 | 6 | 3,851.45 | 6.08 |
| 2 | திருவள்ளூர் | 526 | 3,862 | 7 | 2,859.84 | 5.44 |
| 3 | கடலூர் | 683 | 2,403 | 4 | 2,942.24 | 4.31 |
| 4 | விழுப்புரம் | 1,099 | 3,487 | 3 | 6,509.43 | 5.92 |
| 5 | வேலூர் | 743 | 6,109 | 8 | 4,022.30 | 5.41 |
| 6 | திருவண்ணாமலை | 860 | 4,267 | 5 | 4,826.27 | 5.61 |
| 7 | சேலம் | 385 | 5,109 | 13 | 4,561.41 | 11.85 |
| 8 | நாமக்கல் | 322 | 2,520 | 8 | 3,119.43 | 9.69 |
| 9 | தர்மபுரி | 251 | 2,835 | 11 | 4,407.43 | 17.56 |
| 10 | கிருஷ்ணகிரி | 333 | 3,983 | 12 | 4,965.73 | 14.91 |
| 11 | ஈரோடு | 225 | 3,199 | 14 | 2,626.99 | 11.68 |
| 12 | திருப்பூர் | 265 | 2,455 | 9 | 4,545.50 | 17.15 |
| 13 | கோயம்புத்தூர் | 228 | 1,200 | 5 | 2,534.24 | 11.12 |
| 14 | நீலகிரி | 35 | 1,282 | 37 | 1,170.39 | 33.44 |
| 15 | தஞ்சாவூர் | 589 | 2,260 | 4 | 3,657.67 | 6.21 |
| 16 | நாகப்பட்டினம் | 434 | 2,054 | 5 | 2,400.31 | 5.53 |
| 17 | திருவாரூர் | 430 | 1,704 | 4 | 2,322.69 | 5.40 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 404 | 2,210 | 5 | 4,028.00 | 9.97 |
| 19 | கரூர் | 157 | 2,179 | 14 | 2,656.25 | 16.92 |
| 20 | பெரம்பலூர் | 121 | 314 | 3 | 1,609.54 | 13.30 |
| 21 | அரியலூர் | 201 | 710 | 4 | 1,710.17 | 8.51 |
| 22 | புதுக்கோட்டை | 497 | 4,062 | 8 | 4,433.78 | 8.92 |
| 23 | மதுரை | 420 | 1,946 | 5 | 3,183.18 | 7.58 |
| 24 | தேனி | 130 | 607 | 5 | 1,159.89 | 8.92 |
| 25 | திண்டுக்கல் | 306 | 3,083 | 10 | 4,401.34 | 14.38 |
| 26 | இராமநாதபுரம் | 429 | 2,306 | 5 | 4,116.19 | 9.59 |
| 27 | விருதுநகர் | 450 | 1,760 | 4 | 3,282.08 | 7.29 |
| 28 | சிவகங்கை | 445 | 2,723 | 6 | 3,075.90 | 6.91 |
| 29 | திருநெல்வேலி | 425 | 2,337 | 5 | 4,283.06 | 10.08 |
| 30 | தூத்துக்குடி | 403 | 1,761 | 4 | 4,260.78 | 10.57 |
| 31 | கன்னியாகுமரி | 95 | 1,155 | 12 | 626.14 | 6.59 |
| | மொத்தம் | 12,524 | 79,394 | 6 | 1,04,149.61 | 8.32 |

## 2.12. கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

**1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **110–**ன் படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.



i) அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)

ii) பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

### 2.12.1. குடிநீர் விநியோகம்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர்

ஆதாரங்கள் மற்றும் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.7.**

**மாவட்ட வாரியான குடிநீர் ஆதாரங்கள் குறித்த விவரம்**

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்பு எண்ணிக்கை | மின்விசைப்பம்பு எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்பு எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக்குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 9,150 | 6,816 | 4,174 | 20 | 69 |
| 2 | திருவள்ளூர் | 4,762 | 4,038 | 2,416 | 9 | 36 |
| 3 | கடலூர் | 16,813 | 4,370 | 1,788 | 12 | 60 |
| 4 | விழுப்புரம் | 15,741 | 6,014 | 10,428 | 11 | 78 |
| 5 | வேலூர் | 9,925 | 6,926 | 12,199 | 20 | 46 |
| 6 | திருவண்ணாமலை | 11,350 | 5,064 | 6,502 | 25 | 240 |
| 7 | சேலம் | 7,742 | 5,259 | 4,687 | 9 | 262 |
| 8 | நாமக்கல் | 3,123 | 4,403 | 2,804 | 12 | 298 |
| 9 | தர்மபுரி | 11,542 | 3,038 | 5,602 | 8 | 66 |
| 10 | கிருஷ்ணகிரி | 9,700 | 3,720 | 3,640 | 17 | 93 |
| 11 | ஈரோடு | 4,969 | 4,890 | 2,324 | 40 | 192 |
| 12 | திருப்பூர் | 4,740 | 3,272 | 1,272 | 17 | 265 |
| 13 | கோயம்புத்தூர் | 2,774 | 3,577 | 646 | 9 | 228 |
| 14 | நீலகிரி | 25 | 1,239 | 183 | 1 | 4 |
| 15 | தஞ்சாவூர் | 6,855 | 5,237 | 2,755 | 6 | 90 |
| 16 | நாகப்பட்டினம் | 25,216 | 2,152 | 2,059 | 12 | 291 |
| 17 | திருவாரூர் | 12,663 | 2,804 | 1,392 | 4 | 96 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 9,592 | 3,261 | 3,432 | 25 | 327 |
| 19 | கரூர் | 3,435 | 2,697 | 3,308 | 12 | 92 |
| 20 | பெரம்பலூர் | 3,110 | 803 | 814 | 4 | 65 |
| 21 | அரியலூர் | 1,628 | 1,403 | 882 | 7 | 168 |
| 22 | புதுக்கோட்டை | 7,448 | 4,747 | 4,117 | 46 | 208 |
| 23 | மதுரை | 6,854 | 3,422 | 4,816 | 7 | 182 |
| 24 | தேனி | 1,270 | 879 | 1,151 | 24 | 106 |
| 25 | திண்டுக்கல் | 4,384 | 6,152 | 5,034 | 32 | 116 |
| 26 | இராமநாதபுரம் | 2,152 | 2,098 | 1,396 | 52 | 429 |
| 27 | விருதுநகர் | 10,839 | 3,629 | 3,696 | 12 | 153 |
| 28 | சிவகங்கை | 6,000 | 3,232 | 5,052 | 33 | 129 |
| 29 | திருநெல்வேலி | 5,038 | 2,682 | 3,401 | 26 | 388 |
| 30 | தூத்துக்குடி | 8,399 | 1,939 | 1,758 | 22 | 354 |
| 31 | கன்னியாகுமரி | 748 | 1,375 | 1,404 | 13 | 44 |
| | மொத்தம் | 227,987 | 111,138 | 105,132 | 547 | 5,175 |



மேற்கண்ட குடிநீர் ஆதாரங்களுடன் 2014–15–ம் ஆண்டில் தமிழ்நாடு குக்கிராம மேம்பாட்டுத்திட்டம் (தாய்), ஊரக கட்டிட பராமரிப்பு மற்றும் புனரமைப்பு திட்டம், உள்கட்டமைப்பு இடைநிரவல் நிதி, மாநில நிதிக்குழு மானியம் போன்ற பல்வேறு திட்டங்களின் நிதியிலிருந்தும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும் ரூ.622.08 கோடி செலவில் 36,740 குடிநீர் விநியோக பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### 2.12.2. குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம் மூலம் கண்காணித்தல்

மாவட்ட ஆட்சித்தலைவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த கண்காணிப்பு கூட்டம் வாரந்தோறும் நடத்தப்பட்டு ஊரகப்பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்வதை இணையதளம் மூலம் கண்காணித்திட தேசிய தகவல் மையம் மூலம் மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து கிராம ஊராட்சிகளும் தினந்தோறும் குக்கிராமம் வாரியான குடிநீர் விநியோகம் குறித்து இணையதளம் வாயிலாக பதிவுகள் மேற்கொண்டு வருகின்றன. அதன்படி, தினந்தோறும் குக்கிராம வாரியான

அன்றாட குடிநீர் விநியோகத்தினை கண்காணித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆகியோர் மாவட்ட அளவில் கிராம ஊராட்சிகளில் அன்றாட குடிநீர் விநியோக நிலையினை இம்மென்பொருள் மூலம் கண்காணித்து வருகின்றனர். அதேபோல, ஊரகப்பகுதிகளில் குக்கிராம வாரியாக குடிநீர் விநியோகம் செய்தலை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம், இணையதளம் வாயிலாக மாநில அளவில் கண்காணித்து அனைத்து குக்கிராமங்களிலும் நாள்தோறும் சீரான குடிநீர் விநியோகம் செய்தல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் பெறப்படும் அறிக்கைகள் ஒவ்வொரு வாரமும் பரிசீலிக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு மேல் குடிநீர் வழங்கப்படாத குக்கிராமங்கள் கண்டறியப்பட்டு ஊரகப் பகுதிகளில் சீராக குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வட்டார வளர்ச்சி அலுவலர்களால் குடிநீர் பற்றாக்குறை உள்ள குக்கிராமங்களில் சிறப்பு நடவடிக்கைகள் மூலம் குடிநீர் விநியோகம் தடங்கலின்றி முறையாக வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.12.3. தெரு விளக்குகள்

தெருவிளக்குகள் இல்லாத இடங்களுக்கு விரிவுபடுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை கிராம



ஊராட்சிகளின் அவசியமான பணிகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில் பராமரிக்கப்படும் பல்வேறு வகையான தெருவிளக்குகள் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.8.**
**மாவட்ட வாரியான தெருவிளக்குகள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | குழல் விளக்கு | பாதரச ஆவி விளக்கு | சோடியம் ஆவி விளக்கு | ஆடர் ஒளி விளக்கு | சூரியசக்தி தெரு விளக்கு | எல்இடி விளக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 75,180 | 514 | 12,163 | 23,082 | 1,538 | 69 | 112,546 |
| 2 | திருவள்ளூர் | 33,186 | 856 | 8,230 | 69,926 | 1,115 | 0 | 113,313 |
| 3 | கடலூார் | 69,980 | 596 | 10,150 | 30,461 | 636 | 0 | 111,823 |
| 4 | விழுப்புரம் | 62,656 | 26 | 10,166 | 53,279 | 1,020 | 420 | 127,567 |
| 5 | வேலூார் | 85,142 | 772 | 4,767 | 9,745 | 2,529 | 0 | 102,955 |
| 6 | திருவண்ணா மலை | 59,952 | 883 | 5,792 | 17,081 | 1,565 | 0 | 85,273 |
| 7 | சேலம் | 81,227 | 196 | 2,811 | 12,245 | 1,283 | 386 | 98,148 |
| 8 | நாமக்கல் | 52,041 | 44 | 2,640 | 2,824 | 1,496 | 262 | 59,307 |
| 9 | தர்மபுரி | 36,959 | 543 | 1,287 | 11,343 | 420 | 0 | 50,552 |
| 10 | கிருஷ்ணகிரி | 22,016 | 295 | 864 | 38,162 | 360 | 20 | 61,717 |
| 11 | ஈரோடு | 60,594 | 170 | 1,975 | 3,061 | 1,055 | 730 | 67,585 |
| 12 | திருப்பூர் | 47,015 | 349 | 1,451 | 3,609 | 1,611 | 0 | 54,035 |
| 13 | கோயம்புத்தூர் | 53,493 | 370 | 1,828 | 10,998 | 840 | 643 | 68,172 |
| 14 | நீலகிரி | 9,857 | 0 | 1,173 | 1,415 | 220 | 441 | 13,106 |
| 15 | தஞ்சாவூர் | 110,192 | 1,887 | 6,478 | 46,083 | 1,980 | 0 | 166,620 |
| 16 | நாகப்பட்டினம் | 67,146 | 104 | 2,116 | 28,945 | 1,315 | 316 | 99,942 |
| 17 | திருவாரூர் | 64,451 | 151 | 1,853 | 18,928 | 1,095 | 0 | 86,478 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 81,539 | 611 | 3,394 | 5,198 | 1,544 | 54 | 92,340 |
| 19 | கரூர் | 30,881 | 182 | 750 | 11,852 | 760 | 82 | 44,507 |
| 20 | பெரம்பலூார் | 14,964 | 36 | 590 | 8,117 | 180 | 0 | 23,887 |
| 21 | அரியலூார் | 27,685 | 364 | 2,565 | 8,340 | 625 | 0 | 39,579 |
| 22 | புதுக்கோட்டை | 69,005 | 206 | 3,203 | 12,295 | 1,915 | 1,200 | 87,824 |
| 23 | மதுரை | 53,126 | 110 | 1,261 | 5,786 | 1,225 | 0 | 61,508 |
| 24 | தேனி | 19,830 | 14 | 757 | 140 | 549 | 0 | 21,290 |
| 25 | திண்டுக்கல் | 33,457 | 259 | 646 | 29,551 | 1,369 | 0 | 65,282 |
| 26 | இராமநாதபுரம் | 40,429 | 181 | 2,695 | 38,569 | 510 | 0 | 82,384 |
| 27 | விருதுநகர் | 42,411 | 511 | 1,700 | 15,699 | 1,574 | 8 | 61,903 |
| 28 | சிவகங்கை | 44,173 | 110 | 1,133 | 16,678 | 1,103 | 204 | 63,401 |
| 29 | திருநெல்வேலி | 78,050 | 335 | 3,790 | 1,135 | 1,670 | 0 | 84,980 |
| 30 | தூத்துக்குடி | 63,423 | 129 | 1,570 | 3,768 | 758 | 0 | 69,648 |
| 31 | கன்னியாகுமரி | 40,182 | 7 | 1,438 | 9,282 | 440 | 67 | 51,416 |
|  | **மொத்தம்** | **16,30,242** | **10,811** | **101,236** | **547,597** | **34,300** | **4,902** | **23,29,088** |

## 2.12.4. கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினைப் பேணிக் காத்தல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை பேணிக் காத்தல், கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். அதன்படி, கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க்கால்வாய் அமைத்தல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை வெளியேற்றுதல்.

iii) உபயோகமற்ற கட்டுமானப் பொருட்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

v) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

vi) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்

vii) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல் மற்றும் ஊராட்சியில் இதர சுகாதார மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல்.



கிராம ஊராட்சிகளில் சுகாதாரத்தை பேணிக்காத்திட 26,622 துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர். ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், ஊராட்சிகளுக்கு போதிய அளவில் துப்புரவுப் பணியாளர்கள் இருப்பதை உறுதி செய்திட ஏதுவாக, தமிழ்நாடு அரசு, 16,726 துப்புரவுப் பணியாளர்களைக் கூடுதலாக நியமித்திட 2013–ல்ஆணை வெளியிட்டதன் அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

## 2.12.5. ஊரகப் பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கிராமப்புறங்களில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த அனைத்து கிராம ஊராட்சிகளால் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

i) ஒருங்கிணைந்த அலகாக கிராம ஊராட்சி செயல்பட்டு கிராம மக்களிடையே டெங்கு காய்ச்சல் பரவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ii) ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட மலேரியா அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஊரக சுகாதார மேற்பார்வையாளர்கள், ஊரக சுகாதார செவிலியர் ஆகியோரை ஒருங்கிணைத்து வட்டார அளவில்

தொடர்ச்சியான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து தூய்மை மற்றும் சுகாதாரம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

iii) மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளூர் அளவில் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு டெங்கு காய்ச்சல் குறித்த விவரங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

iv) கொசுக்கள் மற்றும் இளம்பருவ புழுக்களை ஒழிப்பதன் மூலம் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துதல் குறித்த துண்டு பிரசுரங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டதுடன் தண்டோரா மூலம் டெங்கு காய்ச்சலைப் பற்றியும் கொசுக்கள் பரவாமல் தடுப்பது குறித்தும் அறிவிப்பு செய்யப்பட்டது.

v) அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் ஊரக வளர்ச்சி மற்றும் சுகாதார பணியாளர்களுடன் ஒருங்கிணைத்து தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

vi) மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளைச் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



vii) கிராம ஊராட்சிகளில் உள்ள தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க சரளை மண் கொண்டு நிரப்ப வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன.

viii) நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் நோக்கத்தில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய உருளிப்பட்டைகள், தேங்காய் ஓடுகள், உடைந்த பானைகளின் ஓடுகள் ஆகியவற்றை முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ix) கிராம ஊராட்சிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை முற்றிலுமாக தடுத்திட ஊராட்சி ஒன்றிய அளவில் தினக்கூலி அடிப்படையில் **9,301** பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு முழு வீச்சில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

x) ஊராட்சி ஒன்றியங்கள் / கிராம ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து **3,044** புகைமூட்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒவ்வொரு ஊராட்சியிலும் சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

xi) கிராம ஊராட்சிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதைக் கண்காணித்திட ஒவ்வொரு வட்டாரத்திற்கும் உதவி இயக்குநர் நிலையில் மண்டல அலுவலர்கள் மாவட்ட

ஆட்சித்தலைவர்களால் நியமனம் செய்யப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

xii) மூடி வைக்கப்பட்ட பாத்திரங்களில் மட்டுமே நீர் சேகரித்து வைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வீடு வீடாகப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

xiii) ஜனவரி–2015 மற்றும் பிப்ரவரி–2015 ஆகிய மாதங்களில் ஊரக வளர்ச்சித் துறை செயலர், இயக்குநர் மற்றும் கூடுதல் இயக்குநர்கள், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஆய்வு செய்து ஊரக பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் சுகாதார நடவடிக்கைகளை கண்காணித்தனர்.

xiv) மாநில அளவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் 14.01.2015 மற்றும் 29.01.2015 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதே போல, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் திருநெல்வேலி, கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் 27.01.2015, 30.01.2015 மற்றும் 31.01.2015 ஆகிய நாட்களில் நடத்தி அறிவுரைகள் வழங்கப்பட்டன.



## 2.13 விருப்புரிமைப் பணிகள்

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111–ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) கிராமத்திலுள்ள சாலையோரங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்

iii) சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

## 2.14. நிதி ஆதாரங்கள்

மூன்றடுக்கு கிராம ஊராட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள், கீழ்க்கண்ட வரி மற்றும் வரியில்லா வருவாய் ஆதாரங்களைப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

### 2.14.1. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாயாகப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்துவரி

ii) தொழில்வரி

iii) விளம்பரவரி

### 2.14.2. வீடு / சொத்துவரி

**1994**ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **172** மற்றும் அரசாணை எண். **255**, ஊரக வளர்ச்சித் துறை, நாள் **13.12.1999**–ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டுவரி / சொத்துவரி, தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்தப்படவேண்டும். மேலும், அரசு உதவி பெறாமல் சுய நிதியிலிருந்து பாடத் திட்டத்தினை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், செயல்படுத்தும் போது அக்கட்டடங்களுக்கு வீட்டு வரி / சொத்து வரி விதிக்கப்படும். அதனடிப்படையில், **2008–09**ம் ஆண்டு முதல் சுயநிதிக்கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு கிராம ஊராட்சிகளால் சொத்து வரி நிர்ணயித்து வசூலிக்கப்பட்டு வருகிறது. **மாவட்ட வாரியாக** வசூலிக்கப்பட்ட வீட்டுவரி / சொத்து வரி விவரம் பின்வருமாறு:



**அட்டவணை 2.9.**

**2014–15 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியான வீட்டுவரி/ சொத்துவரி கேட்பு விவரம்**

**(ரூ.கோடியில்)**

| வ. எண் | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 27.94 | 3.13 | 31.07 |
| 2 | திருவள்ளூர் | 12.73 | 2.29 | 15.02 |
| 3 | கடலூர் | 7.78 | 0.55 | 8.33 |
| 4 | விழுப்புரம் | 5.62 | 0.44 | 6.06 |
| 5 | வேலூர் | 5.16 | 1.41 | 6.57 |
| 6 | திருவண்ணாமலை | 4.62 | 0.69 | 5.31 |
| 7 | சேலம் | 5.33 | 2.11 | 7.44 |
| 8 | நாமக்கல் | 3.02 | 2.04 | 5.06 |
| 9 | தர்மபுரி | 1.75 | 0.38 | 2.13 |
| 10 | கிருஷ்ணகிரி | 5.20 | 0.43 | 5.63 |
| 11 | ஈரோடு | 4.75 | 1.29 | 6.04 |
| 12 | திருப்பூர் | 7.44 | 0.49 | 7.93 |
| 13 | கோயம்புத்தூர் | 12.95 | 1.63 | 14.58 |
| 14 | நீலகிரி | 2.44 | 0.11 | 2.55 |
| 15 | தஞ்சாவூர் | 5.44 | 0.46 | 5.90 |
| 16 | நாகப்பட்டினம் | 2.69 | 0.31 | 3.00 |
| 17 | திருவாரூர் | 2.24 | 0.13 | 2.37 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 6.32 | 1.10 | 7.42 |
| 19 | கரூர் | 4.18 | 0.53 | 4.71 |
| 20 | பெரம்பலூர் | 1.81 | 0.65 | 2.46 |
| 21 | அரியலூர் | 1.99 | 0.05 | 2.04 |
| 22 | புதுக்கோட்டை | 4.16 | 0.77 | 4.93 |
| 23 | மதுரை | 7.41 | 0.50 | 7.91 |
| 24 | தேனி | 1.89 | 0.20 | 2.09 |

| வ. எண் | மாவட்டம் | வீட்டுவரி | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 25 | திண்டுக்கல் | 7.16 | 0.58 | 7.74 |
| 26 | இராமநாதபுரம் | 4.35 | 0.21 | 4.56 |
| 27 | விருதுநகர் | 7.48 | 0.79 | 8.27 |
| 28 | சிவகங்கை | 4.05 | 0.28 | 4.33 |
| 29 | திருநெல்வேலி | 4.95 | 0.35 | 5.30 |
| 30 | தூத்துக்குடி | 3.87 | 0.27 | 4.14 |
| 31 | கன்னியாகுமரி | 2.90 | 0.42 | 3.32 |
| மொத்தம் | | 179.62 | 24.59 | 204.21 |

### 2.14.3. தொழில் வரி

ஊரகப் பகுதிகளில் தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடம் உள்ளது. 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 121–ல் விவரிக்கப்பட்டவாறு தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித்தொகையிலிருந்து தொழில்வரி விதிக்கவும், வசூல் செய்யவும் வழிவகை உள்ளது. தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகை தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு செலுத்திட வேண்டும். தொழில், வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வரி விதிக்க வழிவகை செய்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ம் ஆண்டு பிரிவு 198 அ–க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 2014–15ம் ஆண்டிற்கான தொழில்வரி கேட்பு ரூ. 91.72 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



### 2.14.4. வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் அதிகாரம் பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான, அருவருக்கத்தக்க தொழில்களுக்கான கட்டணங்கள்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை.

### 2.14.5. மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகள் மற்றும் கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997–ல் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 3–ன்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் அனுமதியுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும். மனைப்பிரிவு அனுமதிக்கான விண்ணப்பத்தினை கிராம ஊராட்சித் தலைவரிடம் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர், அவ்விண்ணப்பத்தை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு தொழில்நுட்ப அனுமதிக்காக பரிந்துரைக்க வேண்டும். விண்ணப்பதாரரால் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்பளிப்பு செய்திட வேண்டிய பொது உபயோகத்திற்கான திறந்த வெளி இடம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால் மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில் கிராம ஊராட்சித் தலைவரால் மனைப்பிரிவுகளுக்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 4–ன்படி குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி கிராம ஊராட்சித் தலைவரால் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 4,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர்



வழங்கலாம். இவ்வரம்பிற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியுடன் கட்டட வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட கிராம ஊராட்சிகள், சென்னை பெருநகரப் பகுதிக்குள் கொண்டு வரப்பட்டு மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபட அனுமதிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

### 2.14.6. அபாயகரமான, கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமக்கட்டணம்

ஊரகப் பகுதிகளில் அபாயகரமான, கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குகின்றன. 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 159–ல் தெரிவித்துள்ளபடி புதிய தொழில் தொடங்க விண்ணப்பிக்கவோ அல்லது புதுப்பிக்கவோ விரும்பும் விண்ணப்பதாரர், தொடர்புடைய கிராம ஊராட்சியில் விண்ணப்பித்திட வேண்டும்.

அதன்படி 2014–15ம் ஆண்டில் 2,33,710 வணிக நிறுவனங்களுக்கு கிராம ஊராட்சிகளில் தொழில் தொடங்க / புதுப்பிக்க உரிமம் வழங்கப்பட்டதுடன் உரிமக்கட்டணமாக ரூ.10.73 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### 2.14.7. குடிநீர் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீட்டிற்கான, குடிநீர் இணைப்பிற்கு கட்டணம் விதித்திட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு பெறுவதற்கு பிணையத் தொகையாக கிராம ஊராட்சிக்கு ரூ.1000/– செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டு குடிநீர் 'இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.30/– செலுத்தப்படவேண்டும். அதன்படி 2014–15–ம் ஆண்டில் குடிநீர் கட்டணத்திற்கான கேட்பு ரூ. 64.58 கோடி ஆகும். மாவட்டவாரியான குடிநீர் கட்டண விபரம் பின்வருமாறு:

**அட்டவணை 2.10.**

**2014–15 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வாரியான குடிநீர் கட்டணங்கள் கேட்பு விபரம்**

| வ.எண் | மாவட்டம் | கேட்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 2.41 |
| 2 | திருவள்ளூர் | 2.12 |
| 3 | கடலூர் | 1.45 |
| 4 | விழுப்புரம் | 0.31 |
| 5 | வேலூர் | 4.37 |
| 6 | திருவண்ணாமலை | 2.78 |
| 7 | சேலம் | 1.61 |
| 8 | நாமக்கல் | 2.07 |
| 9 | தர்மபுரி | 0.22 |
| 10 | கிருஷ்ணகிரி | 0.27 |
| 11 | ஈரோடு | 2.00 |
| 12 | திருப்பூர் | 3.62 |
| 13 | கோயம்புத்தூர் | 5.87 |
| 14 | நீலகிரி | 0.13 |
| 15 | தஞ்சாவூர் | 1.87 |
| 16 | நாகப்பட்டினம் | 1.03 |
| 17 | திருவாரூர் | 1.91 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 5.63 |
| 19 | கரூர் | 2.14 |
| 20 | பெரம்பலூர் | 0.89 |
| 21 | அரியலூர் | 1.56 |
| 22 | புதுக்கோட்டை | 1.12 |
| 23 | மதுரை | 2.22 |
| 24 | தேனி | 1.48 |
| 25 | திண்டுக்கல் | 2.60 |
| 26 | இராமநாதபுரம் | 0.99 |
| 27 | விருதுநகர் | 1.97 |
| 28 | சிவகங்கை | 2.76 |
| 29 | திருநெல்வேலி | 2.17 |
| 30 | தூத்துக்குடி | 1.25 |
| 31 | கன்னியாகுமரி | 3.76 |
| **மொத்தம்** | | **64.58** |



## 2.15. மானியங்கள்

### 2.15.1. மாநில நிதி ஆணைய மானியம்

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது.

மாநில நிதி ஆணையத்தின் வரம்பெல்லைகள் மற்றும் வரையறைகளாவன:–

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

### 2.15.2. நான்காவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் அமைக்கப்பட்ட நான்காவது மாநில நிதி ஆணையம், 2012 முதல் 2017 வரையுள்ள ஐந்தாண்டு காலத்திற்கான பரிந்துரைகளை 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசுக்கு அறிக்கையாக அளித்தது. இப் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் மீதான நடவடிக்கை விவரங்கள் 14.5.2013–ல் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்கண்ட பரிந்துரைகளின் மீது அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் கீழ்க்கண்டவை முக்கியமானவைகளாகும்.



அ) மாநில அரசின் சொந்த வரிவருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

ஆ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 : 42 என்ற விகிதத்தில் பகிர்வு மானியம் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60 : 32 : 8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

ஈ) கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் 60:20:20 என்ற விகிதத்தில் நிதி விடுவிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 100 விழுக்காடு நிதி விடுவிக்கப்படுகிறது.

உ) வரி விதிப்பில் 100 விழுக்காடு வரி நிர்ணயம், வசூல் மற்றும் மறுநிர்ணயம் மேற்கொள்ளும் கிராம ஊராட்சிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

ஊ) 2013–14 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

எ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.30 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

ஏ) ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைக்கென ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014–15 ஆம் ஆண்டில் ரூ. 4968.07 கோடி நிதியினை பகிர்வு மானியமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

### 2.15.3. ஐந்தாவது மாநில நிதி ஆணையம் அமைத்தல்

அரசாணை நிலை எண்.281, நிதி (நிதி ஆணையம்–IV) துறை, நாள் 1.12.2014ன்படி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின், அதாவது, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை பரிசீலித்து மேம்படுத்திட ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்துள்ளது. இந்த ஆணையம் பரிந்துரை செய்ய வேண்டிய இனங்கள் பின்வருமாறு:

அ) மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள்:–

i) மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை மாநில அரசுக்கும், மேற்கண்ட



உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளுதல், அத்தகைய வருவாயில் மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அவைகளுக்கான பங்குகளைப் பிரித்தளித்தல்.

ii) மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது அவைகளே தக்க வைத்துக் கொள்ளக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை தீர்மானித்தல்.

iii) மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.

ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வரி விபரத்தினைக் கருத்தில் கொண்டு, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு தேவையான புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை ஆய்வு செய்யும்போது உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை மார்ச் 31, 2015ல் உள்ளவாறு ஆணையம் மதிப்பீடு செய்ய வேண்டும். 2017ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுகளுக்கு பொருந்தும் வகையில் 2016ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதிக்குள் தனது அறிக்கையை அரசுக்கு அளித்திட ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**2.15.4. உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2014–15**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படும் பகிர்வு மான்யத்தில் 10 விழுக்காடு கணக்கிட்டு அதனை கிராம ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில் பிடித்தம் செய்து உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி ஏற்படுத்தப்படும் என தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிதி, திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். இவ்வொதுக்கீட்டில் 50 விழுக்காடு தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும், எஞ்சிய 50 விழுக்காடு நிதியில் ஒரு பகுதி, மாவட்டங்களில் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கும், மீதித் தொகை மக்கள் தொகை அடிப்படையில் மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2012–ம் ஆண்டு டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படும் உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2013–14–ம் ஆண்டு முதல் ரூ.5 கோடியாக அதிகரிக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி ரூ.3 கோடி ஊரக உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதியிலிருந்தும் ரூ.2 கோடி நகர்ப்புற உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்தும், பகிர்ந்து கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.



2014–15ம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியாக ரூ.242.48 கோடி மாவட்டஆட்சித் தலைவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் பணிகளைத் தேர்வு செய்யும்போது கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ) தாய் திட்டம் செயல்படுத்தப்படும் குக்கிராமங்களில் குடிநீர் விநியோகம், தெருவிளக்கு, சாலைகள், இடுகாடு, இடுகாட்டுப் பாதை போன்ற அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குக்கிராமங்கள் உள்ள ஊராட்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

ஆ) 2015ஆம் ஆண்டுக்குள் திறந்தவெளி மலம் கழித்தல் நிலையற்ற கிராம ஊராட்சிகளாக மாற்ற முனைப்பான நடவடிக்கை எடுக்கும் கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை.

இ) தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நீண்டகால நிலுவைத் தொகையினை செலுத்துதல்.

ஈ) தார்ச்சாலை அல்லாத அனைத்து ஊரக சாலைகளையும் தார்ச்சாலைகளாக மேம்படுத்திட தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நிலையில் மண் மற்றும் கிராவல் சாலைகளை தார்சாலைகளாக மாற்ற முன்னுரிமை அளித்தல்.

உ) ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கட்டடங்களில் ஒரே தவணையில் பராமரிப்பு பணிகளை முழுமையாக மேற்கொள்ளுதல்.

2014–15ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 3,665 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.11.**
**2014–15ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு**
**இடைநிரவல் நிதியில் எடுக்கப்பட்ட பணிகள் விபரம்**

| வ. எண். | பணி வகைப்பாடு | எடுக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அங்கன்வாடி மையங்கள் | 22 | 1.21 |
| 2 | பாலங்கள்/சிறுபாலங்கள் | 91 | 22.82 |
| 3 | தார் சாலைகள் | 519 | 85.99 |
| 4 | கட்டடங்கள் | 104 | 11.63 |
| 5 | சிமெண்ட் சாலைகள் | 492 | 20.43 |
| 6 | கழிவுநீர் கால்வாய்கள் | 225 | 9.87 |
| 7 | குடிநீர் பணிகள் | 1,394 | 42.94 |
| 8 | இதர பணிகள் | 818 | 21.48 |
| 9 | மின்கட்டணம் (TANGEDCO) | – | 25.36 |
| 10 | குடிநீர் கட்டணம் (TWAD Board) | – | 7.19 |
| **மொத்தம்** | | **3,665** | **248.92** |

## 2.15.5. மத்திய நிதி ஆணைய மானியம்

2014–15ம் ஆண்டிற்கான பதிமூன்றாவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியத் தொகையாக ரூ.515.51 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. இத் தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படைப்



பணிகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின்கட்டணம் (TANGEDCO) மற்றும் குடிநீர் கட்டணம் (TWAD) ஆகியவற்றிற்காக இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது.

## 2.15.6. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் வருவாயினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. அதன்படி, **2014–15** ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.**866.04** கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டது.

i) மூன்றில் இரண்டு பங்கான ரூ.**577.36** கோடி நிதியினை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு **67:33** என்ற விகிதத்தில் **2011** மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளித்துள்ளது. அவ்வாறு ரூ.**386.33** கோடி, கிராம ஊராட்சிகளுக்கும், ரூ.**190.53** கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு நிதியான ரூ.**288.68** கோடி நிதி, குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களுக்காகவும், தமிழ்நாடு

குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் (தாய்) 50:50 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.15.7.ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள், கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப்பாலங்கள், இணைப்புச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2014–15 ஆம் ஆண்டில் ரூ.140.63 கோடி மதிப்பீட்டில் 318 பணிகள் கீழ்க்கண்டவாறு எடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை.2.12.**

**2014–15ம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

**(ரூ. கோடியில்)**

| வ. எண் | பணியின் வகைப்பாடு | பணிகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் | 7 | 16.48 |
| 2 | ஊராட்சி அலுவலக கட்டடங்கள் | 76 | 9.21 |
| 3 | பேருந்து நிறுத்தங்கள் | 2 | 1.91 |
| 4 | சாலைகள் | 200 | 66.95 |
| 5 | பாலங்கள் | 30 | 43.83 |
| 6 | இதர உட் கட்டமைப்பு பணிகள் | 3 | 2.25 |
| மொத்தம் | | 318 | 140.63 |



### 2.15.8 ஊராட்சிகளின் வருவாய் வரம்பு

தமிழ்நாட்டில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2014–15ம் ஆண்டு வருவாய் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழக்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.13.**

**ஊராட்சிகளின் வருவாய் வரம்பு**

| வருவாய் வரம்பு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 5 லட்சம் முதல் 7 லட்சம் வரை | 145 |
| ரூ. 7லட்சம் முதல் 10 லட்சம் வரை | 852 |
| ரூ.10 லட்சம் முதல் 20 லட்சம் வரை | 6,341 |
| ரூ.20 லட்சம் முதல் 50 லட்சம் வரை | 4,369 |
| ரூ.50 லட்சம் முதல் 1 கோடி வரை | 697 |
| ரூ.1 கோடிக்கு மேல் | 120 |
| **மொத்தம்** | **12,524** |

## 2.16 கிராம ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.16.1.அலுவலகக் கட்டடங்கள்

தமிழ் நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் சொந்த அலுவலக கட்டடங்கள் உள்ளன. மாநில அரசின் நிதி ஆதாரத்தைக் கொண்டு நீண்டநாள் பயன்பாட்டிற்குப் பின் பழுதடைந்த கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி மற்றும் இராஜீவ் காந்தி ஊராட்சிகளை வலிமைப்படுத்தும்

திட்டம் ஆகியவற்றின் கீழ் 2011–12 முதல் 2014–15ம் ஆண்டு வரை ரூ.128.75 கோடி செலவில் 1,481 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிதி/மாநில அரசு நிதியைக் கொண்டு பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்பு பணிகளும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 2011–12ம் ஆண்டு முதல் 2014–15ம் ஆண்டு வரை ரூ.64.64 கோடி செலவில் 6,561 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

### 2.16.2. கணினி மற்றும் இணைய வசதிகள்

12,524 கிராம ஊராட்சிகளிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 10,010 கிராம ஊராட்சிகளில் அகன்ற அலைவரிசை இணையதள வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.16.3. கிராம ஊராட்சி சேவை மையம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் ரூ.547.63 கோடி மதிப்பீட்டில் 4,174 கிராம ஊராட்சி சேவை மையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல 2014–15ம் ஆண்டில் ரூ.648.93 கோடி மதிப்பீட்டில் 4,460 கிராம ஊராட்சி சேவை மையப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த சேவை மையங்கள், தகவல் அளிக்கக் கூடிய மையங்களாகவும், வளர்ச்சிக்கு



உறுதுணையான இணையதள தகவல் பரிமாற்றம் மேற்கொள்ள வழிவகுக்கும் மையங்களாகவும் செயல்படும்.

### 2.17 ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், சுமார் 5000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

**அட்டவணை 2.14.**

**கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு**

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 80 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **385** |

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விபரம் பின்வருமாறு :–

## அட்டவணை 2.15.

## மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விபரம்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 13 | 633 | **49** | 3,851.45 | 296.27 |
| 2 | திருவள்ளூர் | 14 | 526 | **38** | 2,859.84 | 204.27 |
| 3 | கடலூர் | 13 | 683 | **53** | 2,942.24 | 226.33 |
| 4 | விழுப்புரம் | 22 | 1,099 | **50** | 6,509.43 | 295.88 |
| 5 | வேலூர் | 20 | 743 | **37** | 4,022.30 | 201.12 |
| 6 | திருவண்ணாமலை | 18 | 860 | **48** | 4,826.27 | 268.13 |
| 7 | சேலம் | 20 | 385 | **19** | 4561.41 | 228.07 |
| 8 | நாமக்கல் | 15 | 322 | **21** | 3,119.43 | 207.96 |
| 9 | தர்மபுரி | 8 | 251 | **31** | 4,407.43 | 550.93 |
| 10 | கிருஷ்ணகிரி | 10 | 333 | **33** | 4,965.73 | 496.57 |
| 11 | ஈரோடு | 14 | 225 | **16** | 2,626.99 | 187.64 |
| 12 | திருப்பூர் | 13 | 265 | **20** | 4,545.50 | 349.65 |
| 13 | கோயம்புத்தூர் | 12 | 228 | **19** | 2,534.24 | 211.19 |
| 14 | நீலகிரி | 4 | 35 | **9** | 1,170.39 | 292.60 |
| 15 | தஞ்சாவூர் | 14 | 589 | **42** | 3,657.67 | 261.26 |
| 16 | நாகப்பட்டினம் | 11 | 434 | **39** | 2,400.31 | 218.21 |
| 17 | திருவாரூர் | 10 | 430 | **43** | 2,322.69 | 232.27 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | **29** | 4,028.00 | 287.71 |
| 19 | கரூர் | 8 | 157 | **20** | 2,656.25 | 332.03 |
| 20 | பெரம்பலூர் | 4 | 121 | **30** | 1,609.54 | 402.39 |
| 21 | அரியலூர் | 6 | 201 | **34** | 1,710.17 | 285.03 |
| 22 | புதுக்கோட்டை | 13 | 497 | **38** | 4,433.78 | 341.06 |
| 23 | மதுரை | 13 | 420 | **32** | 3,183.18 | 244.86 |
| 24 | தேனி | 8 | 130 | **16** | 1,159.89 | 144.99 |
| 25 | திண்டுக்கல் | 14 | 306 | **22** | 4,401.34 | 314.38 |



| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 26 | இராமநாதபுரம் | 11 | 429 | **39** | 4,116.19 | 374.20 |
| 27 | விருதுநகர் | 11 | 450 | **41** | 3,282.08 | 298.37 |
| 28 | சிவகங்கை | 12 | 445 | **37** | 3,075.90 | 256.33 |
| 29 | திருநெல்வேலி | 19 | 425 | **22** | 4,283.06 | 225.42 |
| 30 | தூத்துக்குடி | 12 | 403 | **34** | 4,260.78 | 355.07 |
| 31 | கன்னியாகுமரி | 9 | 95 | **11** | 626.14 | 69.57 |
| **மொத்தம்** | | **385** | **12,524** | **33** | **1,04,149.61** | **270.52** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். **1994–ம்** ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **112–ன்**படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

4. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்
5. தொற்றுநோய் பரவாதவண்ணம் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
6. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
7. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பென்னகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிதாக ஏரியூர் மற்றும் கடத்தூர் என்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை புதிதாக தோற்றுவித்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல, கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், கீரப்பாளையம் மற்றும் கம்மாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து ஸ்ரீமுஷ்ணத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய



ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி, நீலகிரி, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே உள்ள சில ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியங்களை ஏற்படுத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே உள்ள ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தும், புதிய ஊராட்சி ஒன்றியங்களை ஏற்படுத்தியும் அரசு ஆணை வெளியிட்ட பின்னர் 2016ஆம் ஆண்டு நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தலில் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டு அவை செயல்படத் துவங்கும்.

## 2.18 நிதி

1. ஊராட்சி ஒன்றிய குழுவிடம் வரி நிர்ணயம் செய்யும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை.
3. மாநில நிதிக்குழு மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகள் விடுவிக்கும் திட்டங்களுக்கான வளர்ச்சி நிதி ஆகியன.

## 2.19. ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.19.1. அலுவலகக் கட்டடங்கள்

தமிழ் நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சொந்த அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக மாநில அரசு நிதியைக் கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011–12ம் ஆண்டு முதல் 2014–15ம் ஆண்டு வரை ரூ.143.70 கோடி செலவில் 77 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 2.19.2. கணினி மற்றும் இணையதள வசதிகள்

அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கூடிய கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.19.3. ஊராட்சி ஒன்றிய சேவை மையம்

வட்டார அளவில் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதற்கும் வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையான இணையதள பரிமாற்றங்களுக்கும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் ரூ.32.88 கோடி மதிப்பீட்டில் 120 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதேபோல, 2014–15ம் ஆண்டில்



ரூ.45.45 கோடி மதிப்பீட்டில் 150 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.19.4. ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள்

மாநிலம் முழுவதும் 28,031 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அதன் உட்கட்டமைப்பு பணிகளான வகுப்பறைகள், சமையலறை, குடிநீர், கழிவறை மற்றும் சுற்றுச்சுவர் வசதிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும் ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியிலிருந்தும் மேற்கொள்ளப் படுகின்றன. மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:–

**அட்டவணை 2.16.**

**ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 737 | 284 | 1,021 |
| 2 | திருவள்ளூர் | 839 | 242 | 1,081 |
| 3 | கடலூர் | 758 | 251 | 1,009 |
| 4 | விழுப்புரம் | 1,222 | 397 | 1,619 |
| 5 | வேலூர் | 1,156 | 401 | 1,557 |
| 6 | திருவண்ணாமலை | 1,190 | 306 | 1,496 |
| 7 | சேலம் | 975 | 345 | 1,320 |
| 8 | நாமக்கல் | 649 | 148 | 797 |
| 9 | தர்மபுரி | 785 | 313 | 1,098 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,091 | 286 | 1,377 |

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 11 | ஈரோடு | 743 | 283 | 1,026 |
| 12 | திருப்பூர் | 840 | 227 | 1,067 |
| 13 | கோயம்புத்தூர் | 665 | 216 | 881 |
| 14 | நீலகிரி | 215 | 65 | 280 |
| 15 | தஞ்சாவூர் | 796 | 190 | 986 |
| 16 | நாகப்பட்டினம் | 489 | 176 | 665 |
| 17 | திருவாரூர் | 535 | 209 | 744 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 712 | 203 | 915 |
| 19 | கரூர் | 497 | 163 | 660 |
| 20 | பெரம்பலூர் | 343 | 117 | 460 |
| 21 | அரியலூர் | 170 | 59 | 229 |
| 22 | புதுக்கோட்டை | 1,001 | 294 | 1,295 |
| 23 | மதுரை | 639 | 207 | 846 |
| 24 | தேனி | 237 | 82 | 319 |
| 25 | திண்டுக்கல் | 857 | 200 | 1,057 |
| 26 | இராமநாதபுரம் | 756 | 155 | 911 |
| 27 | விருதுநகர் | 600 | 150 | 750 |
| 28 | சிவகங்கை | 705 | 243 | 948 |
| 29 | திருநெல்வேலி | 555 | 99 | 654 |
| 30 | தூத்துக்குடி | 476 | 112 | 588 |
| 31 | கன்னியாகுமரி | 280 | 95 | 375 |
| **மொத்தம்** | | **21,513** | **6,518** | **28,031** |

### 2.19.5. சாலைகள்

தமிழ்நாட்டில், கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமாக ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 1,47,543.21 கி.மீ. ஆகும். கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் ஊரகப் பகுதிகளில் பராமரிக்கப்படும் சாலைகளின் விவரம் பின்வருமாறு:—



## அட்டவணை 2.17.

**மாவட்ட வாரியாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரம்**

| வ எண் | மாவட்டம் | நீளம் (கி.மீ) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மண் சாலை | கிராவல் சாலை | கப்பி சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை | மொத்தம் |
| 1 | காஞ்சிபுரம் | 323.25 | 69.48 | 224.57 | 2,073.03 | 218.31 | 2,908.64 |
| 2 | திருவள்ளூர் | 749.81 | 112.22 | 544.05 | 2,576.75 | 223.36 | 4,206.19 |
| 3 | கடலூர் | 1,252.74 | 201.23 | 910.29 | 3,048.13 | 183.09 | 5,595.48 |
| 4 | விழுப்புரம் | 2,337.89 | 629.01 | 886.18 | 3,879.58 | 268.09 | 8,000.75 |
| 5 | வேலூர் | 985.45 | 391.26 | 293.77 | 4,109.73 | 178.01 | 5,958.22 |
| 6 | திருவண்ணாமலை | 1,023.43 | 153.57 | 611.62 | 3,456.68 | 237.15 | 5,482.45 |
| 7 | சேலம் | 2,113.36 | 343.71 | 1,079.47 | 4,564.05 | 26.30 | 8,126.89 |
| 8 | நாமக்கல் | 1,706.10 | 258.10 | 221.20 | 3,193.91 | 16.47 | 5,395.78 |
| 9 | தர்மபுரி | 1,365.92 | 149.20 | 186.93 | 2,868.39 | 21.64 | 4,592.08 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,806.69 | 45.70 | 163.37 | 2,535.73 | 40.52 | 4,592.01 |
| 11 | ஈரோடு | 1,129.42 | 113.09 | 206.34 | 3,178.61 | 6.82 | 4,634.28 |
| 12 | திருப்பூர் | 2,367.22 | 228.93 | 132.70 | 3,695.11 | 8.51 | 6,432.47 |
| 13 | கோயம்புத்தூர் | 1,321.72 | 35.38 | 85.70 | 2,259.38 | 35.36 | 3,737.54 |
| 14 | நீலகிரி | 168.55 | 46.42 | 205.74 | 566.79 | 30.35 | 1,017.85 |
| 15 | தஞ்சாவூர் | 2,280.00 | 118.78 | 657.75 | 4,811.01 | 285.24 | 8,152.78 |
| 16 | நாகப்பட்டினம் | 936.35 | 195.50 | 537.92 | 3,666.19 | 190.21 | 5,526.17 |
| 17 | திருவாரூர் | 1,865.97 | 120.99 | 729.35 | 3,910.74 | 198.16 | 6,825.21 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 1,501.74 | 211.11 | 510.45 | 3,881.62 | 30.08 | 6,135.00 |
| 19 | கரூர் | 1,562.68 | 265.50 | 127.41 | 2,657.69 | 9.44 | 4,622.72 |
| 20 | பெரம்பலூர் | 757.27 | 324.93 | 424.32 | 1,694.25 | 23.72 | 3,224.49 |
| 21 | அரியலூர் | 640.88 | 220.03 | 242.71 | 846.71 | 0.00 | 1,950.33 |
| 22 | புதுக்கோட்டை | 2,049.05 | 974.04 | 1,261.79 | 4,864.59 | 103.73 | 9,253.20 |
| 23 | மதுரை | 549.43 | 112.96 | 121.94 | 1,763.08 | 25.12 | 2,572.53 |
| 24 | தேனி | 408.00 | 27.20 | 112.89 | 1,111.48 | 3.40 | 1,662.97 |
| 25 | திண்டுக்கல் | 1,600.63 | 584.56 | 137.17 | 3,404.57 | 16.34 | 5,743.27 |
| 26 | இராமநாதபுரம் | 764.11 | 200.67 | 490.65 | 2,827.96 | 90.92 | 4,374.31 |
| 27 | விருதுநகர் | 490.73 | 348.28 | 141.31 | 1,808.62 | 13.46 | 2,802.40 |
| 28 | சிவகங்கை | 1,024.62 | 324.38 | 367.58 | 3,366.29 | 49.46 | 5,132.33 |
| 29 | திருநெல்வேலி | 847.84 | 208.29 | 258.71 | 2,940.96 | 57.42 | 4,313.22 |
| 30 | தூத்துக்குடி | 339.50 | 202.06 | 240.25 | 2,061.87 | 57.50 | 2,901.18 |
| 31 | கன்னியாகுமரி | 152.68 | 8.66 | 78.60 | 1,236.78 | 193.75 | 1,670.47 |
| **மொத்தம்** | | **36,423.03** | **7,225.24** | **12,192.73** | **88,860.28** | **2,841.93** | **1,47,543.21** |

## 2.19.6. நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களில் ஒன்றாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு.

**அட்டவணை 2.18.**
**மாவட்ட வாரியாக சிறுபாசன கண்மாய்கள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1,100 | 1,240 | 2,340 |
| 2 | திருவள்ளூர் | 649 | 2,059 | 2,708 |
| 3 | கடலூர் | 254 | 2,304 | 2,558 |
| 4 | விழுப்புரம் | 1,257 | 3,551 | 4,808 |
| 5 | வேலூர் | 633 | 854 | 1,487 |
| 6 | திருவண்ணாமலை | 1,250 | 2,027 | 3,277 |
| 7 | சேலம் | 242 | 375 | 617 |
| 8 | நாமக்கல் | 152 | 422 | 574 |
| 9 | தர்மபுரி | 555 | 628 | 1,183 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,172 | 1,211 | 2,383 |
| 11 | ஈரோடு | 19 | 597 | 616 |
| 12 | திருப்பூர் | 10 | 1,434 | 1,444 |
| 13 | கோயம்புத்தூர் | 9 | 709 | 718 |
| 14 | நீலகிரி | 0 | 225 | 225 |
| 15 | தஞ்சாவூர் | 63 | 3,131 | 3,194 |
| 16 | நாகப்பட்டினம் | 0 | 3,979 | 3,979 |
| 17 | திருவாரூர் | 0 | 3,602 | 3,602 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 1,406 | 705 | 2,111 |
| 19 | கரூர் | 108 | 388 | 496 |
| 20 | பெரம்பலூர் | 477 | 1,615 | 2,092 |
| 21 | அரியலூர் | 138 | 753 | 891 |
| 22 | புதுக்கோட்டை | 3,824 | 1,795 | 5,619 |
| 23 | மதுரை | 1,029 | 3,233 | 4,262 |
| 24 | தேனி | 26 | 319 | 345 |
| 25 | திண்டுக்கல் | 1,577 | 1,000 | 2,577 |



| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 26 | இராமநாதபுரம் | 818 | 2,499 | 3,317 |
| 27 | விருதுநகர் | 300 | 1,730 | 2,030 |
| 28 | சிவகங்கை | 2,776 | 4,156 | 6,932 |
| 29 | திருநெல்வேலி | 769 | 769 | 1,538 |
| 30 | தூத்துக்குடி | 397 | 1,148 | 1,545 |
| 31 | கன்னியாகுமரி | 599 | 300 | 899 |
| | மொத்தம் | 21,609 | 48,758 | 70,367 |

## 2.20. மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24–ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்

4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

**2.21 செயல்பாடுகள்**

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.
4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல் (குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.)
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.



**2.22 நிதி**

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 விழுக்காடு நிதியில் 8 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

## 2.23 மாவட்டத் திட்டக் குழு

மாவட்டத் திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்டத் திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள்

விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையிலான விபரங்களைப் பெறுதல்.

2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்
3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.
4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.
5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.
8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.



### 2.24.மாவட்ட ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

#### 2.24.1. அலுவலக கட்டடங்கள்

மாநில அளவில் 31 மாவட்ட ஊராட்சிகளில் 28 மாவட்ட ஊராட்சிகளுக்கு மட்டுமே சொந்த கட்டடங்கள் உள்ளன. திருவள்ளூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு சொந்த கட்டடம் இல்லை. எனவே, ரூ.75 லட்சம் வீதம் மொத்தம் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் 2014–15 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியில் இருந்து மேற்கண்ட மூன்று மாவட்டங்களுக்கும் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

#### 2.24.2. கணினி மற்றும் இணையதள வசதி

31 மாவட்ட ஊராட்சிகளிலும் கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

#### 2.24.3. வாகனங்கள்

அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி செயலர்களுக்கும் ஊரகப் பகுதிகளில் மத்திய மற்றும் மாநில அரசு திட்டச் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.25. விருதுகள்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளன. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் பல்வேறு விருதுகள் விவரம் பின்வருமாறு:–

1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது
2. ராஷ்டிரிய கௌரவ கிராம சபை விருது
3. ஊராட்சிகளில் மின்னணு ஆளுமைக்கான தேசிய விருது
4. சிறந்த நடைமுறைகள்/ புதுமையான திட்டங்களுக்கான விருது

**2.25.1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது**

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் விருதினை ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது என மாற்றி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2012–13ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், சிறந்த கிராம ஊராட்சிக்கு ரூ. 7 இலட்சம், சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 20 இலட்சம் மற்றும் சிறந்த மாவட்ட ஊராட்சிக்கு ரூ.40 இலட்சம் வீதம் தமிழ்நாட்டில் உள்ள 6 கிராம ஊராட்சிகள், 2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரொக்கப் பரிசுடன் விருது வழங்கி மொத்தம் ரூ.1.22 கோடி நிதியினை விடுவித்துள்ளது.

அதேபோல 2013–14 ஆம் ஆண்டில் 6 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு ரூ.48 லட்சம், 2 சிறந்த ஊராட்சி



ஒன்றியங்களுக்கு ரூ.50 லட்சம் மற்றும் சிறந்த ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரூ.50 லட்சம் நிதியினை மத்திய அரசு விடுவித்துள்ளது.

அதேபோல 2014–15 ஆம் ஆண்டில் 6 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு ரூ.48 லட்சம், 2 சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.40 லட்சம் மற்றும் சிறந்த ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரூ.30 லட்சம் நிதியுடன் கூடிய விருதினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

**2.25.2. ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது**

வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது.

2011–12–ஆம் ஆண்டிற்கான விருதுக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேதலோடை கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரு.5 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது. 2012–13 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு, திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெடுங்குணம் கிராம ஊராட்சியினை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது. அதேபோல 2013–14 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு ராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கருத்தனேந்தல் கிராம ஊராட்சியை

மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது.

அதேபோல 2014–15 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பேரட்டி கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது.

**2.25.3. ஊராட்சிகளில் மின் ஆளுகைக்கான தேசிய விருது**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்திடவும் அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையிலான திறன்மிக்க தன்னாட்சி அமைப்புகளாக மாற்றிடவும் தேசிய மின்னாளுகைத் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளில் மின்னாளுகைக்கான செயல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ஊராட்சி அமைப்புகளுக்காக, பத்து வகையிலான மென்பொருள் தொகுப்புகளை உருவாக்கியுள்ளது. **ஊராட்சிகளில் மின்னாளுமைத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் 2014 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி மின்னாளுமை** விருதுக்காக தமிழ்நாடு மாநிலம் தேர்வு செய்யப்பட்டது. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் மேற்கண்ட விருது 2015 ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 24ம் நாளன்று வழங்கப்பட்டது.



**2.25.4. சிறந்த நடைமுறைகளுக்கான மாநில அரசு விருது (குக்கிராமவாரியாக குடிநீர் வழங்குதலை இணையதளம் மூலமாக கண்காணித்தல்)**

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்வதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கண்காணித்து வருகிறது. அதன்படி ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை இணையதளம் மூலம் குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை கண்காணிப்பதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இம்முயற்சியினை பாராட்டும் விதமாக தமிழ்நாடு அரசு சிறந்த நடைமுறைகள்/ புதுமையான திட்டங்களுக்கான விருதினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்கியுள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு, 2014 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று இவ்விருதினை வழங்கினார்கள்.**

# 3. மாநில அரசு திட்டங்கள்



## 3. மாநிலத் திட்டங்கள்

### 3.1. தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

மக்களுக்கு சிறந்த சேவை வழங்குவதன் பொருட்டு, வறுமை ஒழிப்பு, சிறந்த வாழ்வாதாரத்தை வழங்குதல், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து திட்டங்களை அமல்படுத்துவதை உறுதி செய்வதே ஊரக வளர்ச்சியின் முக்கிய நோக்கமாகும். பொதுவாக திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு “கிராம ஊராட்சி”யினையே அடிப்படை வளர்ச்சிக்கான அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, திட்டமிடுதல், நிதியளித்தல் மற்றும் திட்ட செயலாக்கம் ஆகியவற்றிற்கு கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்தது. அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் வழங்கும் பொருட்டும், வள ஆதாரங்களை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் ஒரு முன்னோடித் திட்டமாக "**தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்**" என்னும் புதிய திட்டம் **2011–12**ஆம் ஆண்டு முதல் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ***தேசிய***

***அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் மட்டும் தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.***

மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 6 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு அளித்தது, வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கியது. எனவே, இந்த வேறுபாடுகளை களையும் வகையிலும், சம அளவிலான நிதி மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்கும் நோக்குடனும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் "குக்கிராமங்கள்" அடிப்படை அலகாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில், சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள சில கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகை 500க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள்



தொகை 10,000க்கு அதிகமாகவும் உள்ளது. குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1.**

**குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்.**

| வ.எண். | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5–15 | 5,434 |
| 3. | 16–25 | 637 |
| 4. | 26–50 | 189 |
| 5. | 50க்கு மேல் | 23 |
| **மொத்தம்** | | **12,524** |

### 3.1.1. நிதி ஒதுக்கீடு

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. அதிகமான குக்கிராமங்களை கொண்டுள்ள கிராம ஊராட்சிகளின் தேவைகளும் அதிகமான அளவில் இருக்கும். இதைக் கருத்திற்கொண்டு, நிதி ஒதுக்கீட்டிற்காக குக்கிராமங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் 5 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதிக அளவிலான மக்கள் தொகையும், அதிக குக்கிராமங்களும் கொண்டுள்ள கிராம

ஊராட்சிகள் அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டினைப் பெறுகின்றன. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.

**அட்டவணை 3.2.**

**"தாய்" திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி**

| வ. எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை (2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி) | ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை | ஒரு ஊராட்சிக்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைந்தபட்ச அடிப்படை மானிய நிதி | கூடுதல் நிதி | மொத்த நிதி |
| 1. | 5க்கும் கீழ் | 6,241 | 1,25,34,047 | 2,008 | 20 | 0 | 20 |
| 2. | 5–15 | 5,434 | 1,73,92,688 | 3,201 | 20 | 10 | 30 |
| 3. | 16– 25 | 637 | 35,53,429 | 5,578 | 20 | 20 | 40 |
| 4. | 26–50 | 189 | 15,57,132 | 8,239 | 20 | 30 | 50 |
| 5. | 50க்கு மேல் | 23* | 3,07,557 | 13,372 | 20 | 30 | 50 |
| மொத்தம் | | 12524 | 3,53,44,853 | 2,822 | | –– | –– |

**** 23 கிராம ஊராட்சிகளில் 50 க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. இக்குக்கிராமங்களுக்கு மேலும் தேவைப்படும் பணிகளை கண்டறிந்து 2014–15ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களின் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.***

2011–12 ஆம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டு முதல், ஊரக குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பினை நிறைவு



செய்வதில் உள்ள இடைவெளிகளை (Infrastructural gaps) நிரப்பிடும் நோக்கில் இத்திட்டத்திற்கான நிதியை ரூ.750 கோடியாக அரசு உயர்த்தியது. மேற்படி கூடுதல் நிதி ஒதுக்கீடான ரூ.70 கோடி ‘‘தாய்’’ திட்ட கிராமங்கள் மற்றும் அவற்றிற்கு அருகில் உள்ள கிராமச் சாலைகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.1.2. திட்டக் கூறுகள்

"தாய்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் மூன்று பிரிவுகளாக பின்வரும் அட்டவணையில் உள்ளபடி வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3.**

**"தாய்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள்**

| வ. எண் | குறைந்த பட்ச அடிப்படை தேவைகள் | கூடுதல் தேவைகள் | இதர பணிகள் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | அங்கன்வாடி மையம் | அனுமதிக்கப் பட்ட இதரப் பணிகள் |
| 2 | தெருவிளக்குகள் | பொது விநியோகக் கடை | |
| 3 | சாலைகள் | சுய உதவிக்குழு கட்டடம் | |
| 4 | சுடுகாடு / இடுகாடு | கதிரடிக்கும் களம் | |
| 5 | சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | விளையாட்டு மைதானம் | |

### 3.1.3. குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள்

#### 3.1.3.1. குடிநீர் விநியோகம்

தனிநபர் ஒருவருக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் விநியோகிக்கப்படும் குக்கிராமங்களை கண்டறிந்து, அவற்றை மேம்படுத்தும் வகையில் மின்விசை இறைப்பான்,

குடிநீர்க் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள நீராதாரத்தினைப் பெருக்குதல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### 3.1.3.2. தெரு விளக்குகள்

30 மீட்டர் சீரான இடைவெளியில் ஒரு மின் விளக்கு அமைத்தல் என்ற நோக்குடன் புதிய குக்கிராமங்கள், விரிவாக்கப் பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகளில், தேவைக்கேற்ப புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படுகிறது. ஏற்கெனவே உள்ள இடங்களில் தெரு விளக்குகள் பற்றாக்குறையாக இருந்தால் சூரிய சக்தி தெருவிளக்குகள் உட்பட கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

### 3.1.3.3. சாலைகள்

#### அ) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள தெருக்கள் மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கும் தெருக்கள் அல்லது சந்துகள், ஏற்கனவே சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களில் விடுபட்ட பகுதி ஆகியன முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படுகின்றன.

#### ஆ) இணைப்புச் சாலைகள்

அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்றவகையில் சாலைகள் அமைய வேண்டும் என்ற நோக்கில் பேருந்துகள்



செல்லும் சாலைகள், கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்துச் சாலை அமைத்தல், மண் சாலைகள் / சரளைச் சாலைகளை தரம் உயர்த்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

### 3.1.3.4. சுடுகாடு / இடுகாடு

ஒவ்வொரு சுடுகாடு / இடுகாட்டிற்கும் அணுகு சாலைகள், சுற்றுச்சுவர், சுடுகாடு கொட்டகை / காத்திருப்பு கூடம், தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதிகள் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.1.3.5. சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்

ஏற்கெனவே சாலை வசதி உள்ளதெனில் அச்சாலையின் தற்போதைய தன்மையைக் கருத்திற்கொண்டு தேவையின் அடிப்படையில் சாலை மேம்படுத்தப்படுகிறது. சாலை வசதி இல்லாத சுடுகாடு/இடுகாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் அணுகுசாலை அமைக்கப்படுகிறது.

### 3.1.4. கூடுதல் தேவைகள்

தேவைப்படும் என கண்டறியப்பட்ட இடங்களில் கூடுதல் அத்தியாவசிய பணிகளான பொது விநியோகக் கடைகள், அங்கன்வாடி கட்டடங்கள் , சுய உதவிக்குழு கட்டடங்கள், கதிரடிக்கும் களம் மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கூடுதல் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட பணிகள் தேவை மற்றும் அத்தியாவசியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.
- தாய் திட்டம் தவிர ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின் நிதி மற்றும் பிற துறைகளில் உள்ள திட்டங்களின் நிதிகளை ஒருங்கிணைத்து குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பை நிறைவு செய்வதில் உள்ள இடைவெளிகளை நிரப்பிடும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 3.1.5. 2011–12 முதல் 2014–15 வரையிலுள்ள ஆண்டுகளுக்கான திட்ட செயலாக்கம்

நாட்டிலேயே முதன் முறையாக குக்கிராம அளவில் தற்போதுள்ள வசதிகளை மதிப்பீடு செய்யவும், குக்கிராமங்களுக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை நுண்ணிய அளவில் கண்டறியவும் விரிவான கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு www.tnrd.gov.in வலைதளத்தில் புள்ளிவிவரங்கள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.

இக்கணக்கெடுப்புப்பணி பின்வரும் 12 படிவங்கள் மூலமாக அடிப்படைத் தேவைகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை குக்கிராம அளவில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1. குக்கிராமம் குறித்த அடிப்படை விவரங்கள்
2. குடிநீர் விநியோகம்
   அ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்
   ஆ) சிறுமின்விசை இறைப்பான்கள்
   இ) தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள்
   ஈ) கைப்பம்புகள்
3. தெருவிளக்குகள்
4. தெருக்கள் மற்றும் சந்துகள்
5. இடுகாடு/சுடுகாடு
6 அ) அனைத்து அரசு / உள்ளாட்சி கட்டடங்கள் (பள்ளி கட்டடங்கள் நீங்கலாக)
   ஆ) அனைத்து அரசு/உள்ளாட்சி பள்ளி கட்டடங்கள்
7. சிறுகுளங்கள் மற்றும் ஊரணிகள்
8. விளையாட்டு திடல்கள்
9. பேருந்து நிலையங்கள்
10. சந்தைகள்
11. சுய உதவிக்குழுக்கள் குறித்த விவரங்கள்
12. அ) கிராம ஊராட்சி சாலைகள்
   ஆ) ஊராட்சி ஒன்றிய சாலைகள்

2011–12ஆம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளிலுள்ள 25,335 குக்கிராமங்களிலும், 2012–13ஆம் ஆண்டில் 2,250 கிராம ஊராட்சிகளிலுள்ள 18,581 குக்கிராமங்களிலும், 2013–14ம் ஆண்டில் 2,500 கிராம ஊராட்சிகளிலுள்ள 15,115 குக்கிராமங்களிலும், 2014–15ம் ஆண்டில் 2,741 கிராம ஊராட்சிகளிலுள்ள 12,095

குக்கிராமங்களிலும் விரிவான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அக்கணக்கெடுப்பின் அடிப்படையில் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள், கூடுதல் அத்தியாவசிய தேவைகள் மற்றும் இதர தேவைகள் ஆகியவற்றினை கண்டறியப்பட்டு, தாய் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு ஏற்ப விரிவான திட்டம் செயல் வடிவமைக்கப்பட்டது.

'தாய்' திட்டம் தவிர, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 13வது நிதிக்குழு மானியம் போன்ற பிற ஊரக வளர்ச்சித் திட்ட நிதிகள் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன. பிற துறைகளின் மூலமும் நிதியினை ஒருமுகப்படுத்தி கிராம ஊராட்சிகளுக்கு தேவைப்படும் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 3.1.6. ஆண்டு வாரியான திட்ட செயலாக்கம்

இத்திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரை ஐந்து கட்டங்களாக செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

**அட்டவணை 3.4.**

**ஆண்டுவாரியான திட்ட செயலாக்கம்**

| ஆண்டு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 2011–12 | 2020 | 25335 | 680.00 |
| 2012–13 | 2250 | 18581 | 750.00 |
| 2013–14 | 2500 | 15115 | 750.00 |
| 2014–15 | 2741 | 12095 | 750.00 |
| 2015–16 | 3013 | 8268 | 750.00 |
| மொத்தம் | 12,524 | 79,394 | 3680.00 |



- இத்திட்டம் 2011–12 முதல் 2014–15ம் ஆண்டு முடிய 9,511 கிராம ஊராட்சிகளில் உள்ள 71,126 குக்கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2015–16ஆம் ஆண்டின் இறுதியில் 12,524 கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள 79,394 குக்கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்படும்.

### 3.1.7. சாதனைகள்

**அட்டவணை 3.5.**

**அடிப்படை வசதிகள் நிறைவு செய்திடும் வகையில் 2011–12 முதல் 2014–15 வரையிலான சாதனை**

(பணிகள் எண்ணிக்கையில்)

| வ. எண் | பணிகளின் வகை | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|---|
| **குறைந்த பட்ச அடிப்படை தேவைகள்** | | | | | |
| 1 | குடிநீர் விநியோகம் | 7,754 | 11,367 | 12,068 | 11,462 |
| 2 | தெரு விளக்குகள் | 21,590 | 21,998 | 23,283 | 21,224 |
| 3 | சாலைகள் | 14,780 | 8,327 | 8,306 | 7,736 |
| 4 | சுடுகாடு/இடுகாடு | 3,359 | 3,549 | 3,907 | 3,711 |
| 5 | சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | 388 | 1,137 | 1,325 | 1,319 |
| **கூடுதல் தேவைகள்** | | | | | |
| 1 | அங்கன்வாடி மைய கட்டடங்கள் | 54 | 26 | 9 | 8 |
| 2 | பொது விநியோகக் கடை | 57 | 17 | 17 | 9 |
| 3 | சுய உதவிக்குழு கட்டடங்கள் | 14 | 5 | 3 | 1 |
| 4 | கதிரடிக்கும் களம் | 161 | 84 | 30 | 35 |
| 5 | விளையாட்டு மைதானம் | 7 | 3 | 1 | 6 |
| **இதர தேவைகள்** | | | | | |
| 1 | இதர பணிகள் | 1,206 | 669 | 272 | 415 |
| | **மொத்தம்** | **49,370** | **47,182** | **49,221** | **45,926** |

### 3.1.8. 2015–16ம் ஆண்டிற்கான திட்ட செயலாக்கம்

- தாய் திட்டம் 2015–16ம் ஆண்டில் 3,013 கிராம ஊராட்சிகளில் உள்ள 8,268 குக்கிராமங்களில் ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.
- மேற்காணும் குக்கிராமங்களுக்கு விரிவான கணக்கெடுப்புப் பணி முடிக்கப்பட்டு வலைதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. 26.1.2015ல் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் இறுதி செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- 3013 கிராம ஊராட்சிகளில் பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

## 3.2. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

தமிழ்நாடு அரசு 2011–12 ஆம் ஆண்டில் 300 சதுர அடி பரப்பளவில் ரூ.1.80 இலட்சம் அலகுத் தொகையில், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் வீடுகள் கட்டும் நோக்கத்துடன் “முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்” என்ற ஒரு சிறந்த திட்டத்தை துவக்கியது.

அதன்படி, அரசு ஆணை (நிலை) எண். 46 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–1) துறை நாள் 17.08.2011–ன் வழியாக 2011–12–ஆம் ஆண்டு முதல்



அடுத்து வரும் 5 ஆண்டுகளில், ஆண்டிற்கு 60,000 வீடுகள் வீதம் 3 இலட்சம் வீடுகள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.04.2013 அன்று சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க “முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்திற்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக 2013–14ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படும்” என அறிவித்தார்கள். இதில் ரூ.1.80 இலட்சம் வீடு கட்டுவதற்கும், ரூ.30,000 சூரிய மின்சக்தி விளக்குகள் அமைக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கும் நேரடியாக வழங்கப்படும். இம்முகமையானது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்ளும்.

**ஏழைகளின் வீடுகளுக்கான தேவையை நிறைவு செய்யும் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் தமிழக அரசின் முன்னோடி திட்டம் ஆகும். நமது நாட்டிலேயே 300 சதுர அடி பரப்பளவில் சூரிய மின்சக்தி விளக்குகளுடன் கூடிய வீடுகள் வழங்குவது இதுவே முதன் முறையாகும்.**

### 3.2.1. இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் அனைவரும் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் பெற தகுதியானவர்கள்.

- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையுடன் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய வசதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 அடர்குறு விளக்குகள் அமைக்கப்படும். இவை படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல்அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். ஒவ்வொரு பயனாளியும் தனது விருப்பத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- வீடுகள் கட்டும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சூரிய மின்சக்தி விளக்குகள் அமைக்கும் பணியை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.
- பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்குச் சொந்தமான இடங்களில் கட்டித்தரப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென



நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப் பட்டா அல்லது சரியான நில உரிமை உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் வீடு பெறத் தகுதியானவர்கள் ஆவர்.

### 3.2.2. பயனாளிகளின் தகுதிகள்

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்:–

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்குக் குறையாத வீட்டு மனை இடத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும்.
- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினரில் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டுமனைப் பட்டா இருக்க வேண்டும்.
- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன்பெற்றவராக இருக்கக் கூடாது.

### 3.2.3. பயனாளிகள் தேர்வு செய்யும் முறை

- ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோரின் நிரந்தர காத்திருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதில் மிகவும் வறிய நிலையில் உள்ளோர் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- மொத்தம் 60,000 வீடுகளில் 17,400 வீடுகள் அதாவது 29 விழுக்காடு ஆதி திராவிடர்களுக்கும், 600 வீடுகள் அதாவது 1 விழுக்காடு பழங்குடியினர்களுக்கும் மீதமுள்ள 42,000 வீடுகள் அதாவது 70 விழுக்காடு இதர இனங்களுக்கும் (ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.
- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும் போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் துணை இராணுவப் படையினர், ICDS துறையினரால் அடையாளம் காணப்பட்ட கிராமப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கொண்ட



குடும்பங்கள், திருநங்கைகள், HIV/AIDS/TB ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டு, துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் பெற்றவர்கள், வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.
- தகுதியுள்ள ஏழை ஒருவரின் பெயர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியலில் விடுபட்டிருப்பின், விடுபட்ட நபர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர், விவரங்களை சரிபார்த்து மாவட்ட ஆட்சியரின் இசைவுடன் அவரது பெயரை பட்டியலில் இடம்பெறச் செய்து அதனை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறவேண்டும். அவ்வாறு பெயர் சேர்க்கப்படும் நிகழ்வில், அவரது பெயரானது நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் ஒரு பகுதியாக்கப்பட்டு பயனாளி தேர்வுக்கு கருத்தில் கொள்ளப்படும்.
- கிராம ஊராட்சிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் தகுதியுள்ள பயனாளிகளின் பட்டியலை தயார் செய்து கிராம சபையின் ஒப்புதலுக்காக வைக்கவேண்டும்.

பயனாளிகள் தேர்வு, வீடுகள் ஒதுக்கீடு, கட்டுமானப் பொருட்கள் விநியோகம் மற்றும் இத்திட்டம் தொடர்பான நடைமுறைபடுத்தப்படும் வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 64 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–1) துறை நாள் 24.04.2015–ல் உள்ளது. இதனை http://tnrd.gov.in/scheme/stcmspghs.php என்ற இணையதள முகவரியில் காணலாம்.

**3.2.4. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட செயலாக்கம்**

- 2014–15 ஆம் ஆண்டில் ரூ. 1,260 கோடி மதிப்பீட்டில் 60,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 2015–16 ஆம் ஆண்டிலும் ரூ. 1,260 கோடி மதிப்பீட்டில் 60,000 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.
- 2011–12 முதல் 2015–16 வரை 5 ஆண்டுகளுக்கு கட்ட உத்தேசித்துள்ள 3,00,000 வீடுகளும் 2015–2016–க்குள் கட்டி முடிக்கப்படும்.

**அட்டவணை 3.6.**
**பசுமை வீடு திட்ட செயலாக்கம்**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | வருடம் | எடுக்கப்பட்ட வீடுகள் | ஒதுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 60,000 | 1080.00 |
| 2 | 2012–13 | 60,000 | 1080.00 |
| 3 | 2013–14 | 60,000 | 1260.00 |
| 4 | 2014–15 | 60,000 | 1260.00 |
| 5 | 2015–16 | 60,000 | 1260.00 |
| | **மொத்தம்** | **3,00,000** | **5,940.00** |



**3.3. நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்**

தமிழக அரசு 2013–14–ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்களுக்கு 10,000 வீடுகள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண். 231, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2) துறை, நாள். 23.10.2013–ன்படி உத்தரவு பிறப்பித்தது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை மூலம் செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடும் 365 சதுர அடி பரப்பளவில் ரூ.2.60 இலட்சம் அலகுத் தொகையில் கட்டப்படும். இதில் ரூ. 2.30 இலட்சம் வீட்டின் கட்டுமானப் பணிக்கும், ரூ.30,000 சூரிய மின்சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 10,000 வீடுகள் கட்ட ரூ. 260 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.4. ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்**

சாலைத் தொடர்பு வசதியின்மை வறுமையை நீடிக்கச் செய்யும் அடிப்படை காரணி என்பது உலகளாவிய அளவில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றாதலால், ஊரகச் சாலைகள் வறுமை ஒழிப்பின் துவக்கமாகக் கருதப்படுகிறது. சாலை வசதியின்மைக்கும் வறுமை நிலைக்கும் நேரடித்

தொடர்பு உள்ளது. வறுமை என்பது, குறைந்த அளவிலான தனிநபர் வருமானத்தைக் குறிப்பிடுவதோடல்லாமல், ஊட்ட சத்தின்மை, உடல் நலமின்மை, கல்வியறிவு மற்றும் இதர அடிப்படை வசதிகள் இல்லாமையையும் குறிப்பிடுகிறது.

ஊரகச் சாலைகளில் செய்யப்படும் முதலீட்டிற்கும், ஏழை மக்களின் நலனிற்கும் நேரடித் தொடர்பு உள்ளது. சாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து சேவைகளின் மேம்பாடு ஊரகப் பகுதிகளில் வணிக செயல்திறனை அதிகப்படுத்தி, அதன் மூலமாக, இடுபொருள் செலவினை குறைத்து விவசாய உற்பத்தியினை அதிகப்படுத்துவதற்கும், ஊரக வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது. மேம்பட்ட சாலை இணைப்பு வசதி, கிராமப்புற மக்களின் வருமான அளவினை உயர்த்துவதோடு மட்டுமின்றி, சுகாதாரம், கல்வி மற்றும் இதர சேவைகளைப் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது. அறிவாற்றலைப் பரவலாக்கி, ஏற்றத்தாழ்வுகளைக் களைந்திட வழிவகை செய்வதால், சாலைகள், மக்களின் சமூக–பொருளாதார மனோபாங்கில் மாற்றங்களை ஏற்படுத்தி, வளர்ச்சியினைத் துரிதப்படுத்துகிறது. நல்ல சாலைகள், அரசு ஏழை எளியோரை எளிதில் சென்றடையவும், ஏழைகள் அரசினை எளிதில் அணுகிடவும் வழிவகை செய்கின்றன.

இந்த அரசு, சாலைத் தொடர்பு வசதியின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, வறுமை ஒழிப்பு என்ற தனது இலக்கினை அடைய சாலை இணைப்பு வசதியினை முக்கிய வளர்ச்சிக் கருவியாக பயன்படுத்தும்



வகையில், **“500க்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் தார்ச்சாலைகள் அமைக்கப்படும் எனவும், பிற கிராமங்களுக்கு அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத்தக்க சாலைகள் அமைக்கப்படும்”** எனவும் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இந்த அரசின் குறிக்கோள், சாலை இணைப்பு வசதி ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அதன் பயன் அனைத்து பருவ காலங்களிலும் நிலைத்து நிற்கும் விதமாகவும் இருப்பதை உறுதி செய்வதேயாகும்.

இந்த அரசு தனது தொலைநோக்கு பார்வைக்கு ஏற்றவாறு ஊரகச் சாலைகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவை பின்வருமாறு:

i. ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சாலைகளின் விவரங்களை புதுப்பித்து, சாலைகள் விவரப் பட்டியல் ஒருங்கிணைக்கப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைக்கும் தனி ‘சாலைக் குறியீடு’ (Road Code) வழங்கப்பட்டது. பேருந்து செல்லும் சாலைகளின் விவரம் கண்டறியப்பட்டு அச்சாலைகளுக்கு தனியான ‘பேருந்து தட குறியீடு’ (Bus Route Code) வழங்கப்பட்டது. மேலும், ஊரகச் சாலைகளின் பட்டியல் மற்றும் சாலை சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களும் *tnrd.gov.in* இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ii. அரசு, பல்வேறு திட்டங்களின் மூலம் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து, சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு சாலை வசதி வழங்கவும், சாலையின் நீளம், இணைக்கப்படும் பயன்பாட்டுச் சேவைகள், மறைமுகமாகப் பயன்பெறும் குக்கிராமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும், பேருந்து செல்லும் சாலைகளை மேம்படுத்தி வலுப்படுத்தவும், ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை பராமரிக்கவும் வழிவகை செய்துள்ளது.

iii. அடுத்த கட்டமாக, அரசு, சாலைகளின் தொகுப்பை நிலைப்படுத்தவும், புதிய சாலைகள் அமைப்பது மற்றும் ஏற்கனவே உள்ள சாலைகளை பராமரிப்பது ஆகியவற்றிற்கு உகந்த வகையில் நிதி வழங்கவும், சாலைத் தொகுப்பின் அடர்த்திக்கேற்றவாறு நிதியினை பிரித்தளிக்கவும், ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கும், பராமரிப்பிற்கும் தெளிவான கொள்கையினை உருவாக்குதல், சாலை மேலாண்மைக்கு தேவையான தொழில்நுட்பங்களை உருவாக்குதல் மற்றும் புதிய கட்டுமான பொருட்களைக் கொண்டு சாலை அமைத்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தும்.



### 3.4.1. ஊரகச் சாலைகள் தொகுப்பு

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் பட்டியலினை புதுப்பிப்பது ஒரு தொடர் நடவடிக்கையாகும். இத்துறை *tnrd.gov.in* என்ற இணையதளத்தில் சாலைகளின் பட்டியலை பதிவேற்றம் செய்ய தனியான ஒரு பிரிவினை ஏற்படுத்தியுள்ளது. இதில் அனைத்து சாலைகளின் பட்டியல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

**அட்டவணை 3.7.**

**கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்**

| வ. எண் | மேற்பரப்பு வகை | கிராம ஊராட்சி சாலை | ஊராட்சி ஒன்றிய சாலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1 | தார் சாலை | 60,211 | 28,649 | 88,860 |
| 2 | சிமெண்ட் சாலை | 2,569 | 273 | 2,842 |
| 3 | ஈரடுக்கு கப்பிசாலை | 2,468 | 330 | 2,798 |
| 4 | ஓரடுக்கு கப்பிசாலை | 8,722 | 672 | 9,394 |
| 5 | சரளைக்கல் சாலை | 6,874 | 352 | 7,226 |
| 6 | மண்சாலை | 35,114 | 1,309 | 36,423 |
| **மொத்தம்** | | **1,15,958** | **31,585** | **1,47,543** |

இணையதள சாலைப் பதிவேடு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பற்றிய விவரங்களான சாலையின் பெயர், சாலையின் மேற்பரப்பு, சாலையின் வகை,

சாலையின் அடிப்படை வடிவியல், இணைக்கப்படும் பயன்பாட்டு சேவைகள், இதற்குமுன் மேம்பாடு செய்யப்பட்ட விவரம், மண்ணின் தன்மை மற்றும் போக்குவரத்து அளவு உள்ளிட்ட முழுமையான தொழில்நுட்ப விவரங்களை வழங்குகிறது. இந்த விவரங்கள் ஒரு நிறைவான சாலை மேலாண்மை முறையினை ஏற்படுத்த அடிப்படையாக அமையும். இதன் முதற்படியாக, இத்துறை, அனைத்து கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளையும் புவிசார் தகவலமைப்பு (GIS) தளத்தில் படிப்படியாக கொண்டுவரும். இதற்கான ஆயத்தப் பணிகளை இத்துறை ஏற்கெனவே தொடங்கிவிட்டது.

### 3.4.2. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல்

முக்கியமான தார் இடப்படாத சாலைகளை தார்சாலைகளாக தரம் உயர்த்துவதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முன்னுரிமையாகக் கொண்டுள்ளது. குக்கிராமங்களின் இணைப்பு, பயன்பாட்டுச் சேவைகளின் இணைப்பு போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில், முன்னுரிமை படுத்தப்பட்டு தார் இடப்படாத சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டன. கடந்த 4 வருடங்களில் **19,875.39** கி.மீ. நீளமுள்ள தார் இடப்படாத சாலைகள் ரூ.**3,778.36** கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்ய தேவைப்படும் நிதி, தாய் திட்டம், நபார்டு – ஊரக



உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, மாநில நிதிக்குழு மானியம், ஊரக உட்கட்டமைப்புத் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உள்ள நிதி ஒருங்கிணைக்கப்பட்டு சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

### 3.4.3. சேதமடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்

கடந்த 4 வருடங்களில் **7,939.25** கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ. **1,719.82** கோடி மதிப்பீட்டில் இந்த வகையின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

### 3.4.4. ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை புதுப்பித்து பராமரித்தல்

கடந்த 4 வருடங்களில், **11,392.14** கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகள் ரூ. **1,133.93** கோடி மதிப்பீட்டில் இந்த வகையின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

### 3.4.5.பாலங்கள் கட்டுதல்

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் உள்ள பாலங்கள் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவே கட்டப்பட்டு வந்தன. ஆனால், கடந்த 4 வருடங்களில், இத்துறை, பல்வேறு திட்டங்களின் கீழ் பெரிய பாலங்கள் கட்டும் பணிகளை செயல்படுத்தி வருகின்றது. கடந்த 4 வருடங்களில், இத்துறை, **263** பாலங்கள் கட்டும் பணிகளுக்கு ரூ. **349.21** கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கியுள்ளது.

அட்டவணை 3.8.

**2011–12ல் இருந்து எடுக்கப்பட்ட பாலங்களின் விவரம்**

| வருடம் | பாலங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 2011-12 | 30 | 45.74 |
| 2012-13 | 27 | 31.22 |
| 2013-14 | 93 | 116.40 |
| 2014-15 | 113 | 155.85 |
| **மொத்தம்** | **263** | **349.21** |

### 3.4.6. நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD-RIDF)

ஊரக உட்கட்டமைப்பு வசதியினை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், ''ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி'' யினை மத்திய அரசு அறிவித்தது. இந்நிதியின் கீழ், பெரும்பான்மையான முதலீடுகள், விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகள், சமூகத் துறைகள், ஊரகச் சாலை இணைப்பு போன்றவற்றில் செய்யப்படுகின்றன.

ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ், பகுதி XVI வரை, 10,577.42 கி.மீ. நீளமுள்ள 4,305 சாலைப் பணிகள் ரூ. 1,321.17 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.



அட்டவணை 3.9.

**2011–12ல் இருந்து நபார்டு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்**

| ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2011–12 | 958 | 2,598.65 | 451.77 |
| 2012–13 | 381 | 1,000.46 | 198.07 |
| 2013–14 | 185 | 367.63 | 100.00 |
| 2014–15 | 616 | 1,184.03 | 339.91 |
| **மொத்தம்** | **2140** | **5,150.77** | **1,089.75** |

### 3.4.7.ஊரக உட்கட்டமைப்புத் திட்டம் (Rural Infrastructure Scheme)- சாலைகள்

ஊரக உட்கட்டமைப்பின் ஒரு பகுதியான ஊரகச் சாலை இணைப்பில் தற்போதுள்ள இடைவெளியினை குறைப்பதும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தி நிலையான சொத்துக்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மொத்த ஒதுக்கீட்டில் 60% சாலைகளின் மேம்பாட்டிற்காகவும், 40% மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தவும் வழங்கப்படுகிறது.

அட்டவணை 3.10.

2011–12ல் இருந்து ஊரக உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்

| ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 2011–12 | 1348 | 1,638.33 | 150.00 |
| 2012–13 | 1361 | 1,259.27 | 166.67 |
| 2013–14 | 746 | 744.51 | 150.00 |
| 2014–15 | 705 | 676.81 | 150.00 |
| **மொத்தம்** | **4,160** | **4,318.92** | **616.67** |

### 3.4.8. ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் (Rural Roads Maintenance Scheme)

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை, குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து பராமரிப்பு செய்யும் வகையில் ‘‘ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்’’ என்ற புதிய திட்டத்தை அரசு அறிவித்தது.

2013–14ம் ஆண்டில், இத்திட்டத்திற்கு பதிமூன்றாவது நிதிக்குழு மானியத்தின் ரூ.150 கோடி மற்றும் மாநில நிதிக்குழு மானியத்தின் ரூ.250 கோடி ஆகியவற்றை ஒருங்கிணைத்து, ரூ.400 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், 3,977.28 கி.மீ. நீளமுள்ள 2,004 சாலைகள் எடுக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

2014–15ம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 2,805.41 கி.மீ நீளமுள்ள சாலைகளை பராமரிப்பு செய்வதற்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.



### 3.4.9. பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (Bus Plying Roads Improvement Scheme)

பேருந்து மற்றும் இதர சாலை போக்குவரத்து நிறுவனங்கள் தங்களது சேவையை வழங்குவதற்கு, நல்ல மேற்பரப்புடன் கூடிய தரமான சாலைகள் இன்றியமையாததாகும். கிராமப்புற மக்கள், தங்களது போக்குவரத்திற்கு, பேருந்துகளையே அதிகம் பயன்படுத்துவதால், பேருந்து செல்லும் சாலைகளை மேம்படுத்துவது முக்கியமானதாகும். இந்த இலக்கினை அடைய, அரசு, பழுதடைந்த பேருந்து செல்லும் சாலைகளை மேம்பாடு செய்வதற்கு **“பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்” (BPRIS)** என்ற புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2014–15ம் ஆண்டிற்கு ரூ.300.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,399.28 கி.மீ. நீளமுள்ள 612 பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாடு செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ளன.

### 3.4.10. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச் சாலைகள் அமைத்தல்

அரசு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிச்சக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் (EPREDF) பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலை அமைக்க சிறப்பு நிதி வழங்கியது.

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் அரசாங்கத்தின் முயற்சிகளை மேலும் விரிவு படுத்தும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நபார்டு– ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பதின்மூன்றாம் நிதிக்குழு மானியம், ஊரக உட்கட்டமைப்புத் திட்டம் மற்றும் ஊரகச் சாலைகள் மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகளை அமைத்து வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, **9187** கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் (EPREDF) மூலம் ரூ. **120** இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள **30** பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மையங்களிலிருந்து பிளாஸ்டிக் சாலைகளை அமைக்கத் தேவைப்படும் துகளாக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

### 3.4.11. மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி

மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி, இயக்குநர், நகர் மற்றும் ஊரமைப்பு அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை கட்டடங்களில் இருந்து உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் கட்டணம் 2007ம் ஆண்டில் இருந்து சேகரிக்கப்படுகிறது. குடிநீர், சாலை, கழிவு நீர் அகற்றும்



வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்றிடும் திட்டங்களை செயல்படுத்தி நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

முதன்முறையாக, **9** மாவட்டங்களில், ரூ.**73.66** கோடி மதிப்பீட்டில் **56** பாலங்கள் கட்ட மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 3.4.12. திட்ட வாரியாக சாலைப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

கடந்த 4 ஆண்டுகளில், திட்டவாரியாக சாலைப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் சாலைகளின் நீளம் கீழே தரப்படுகிறது.

**அட்டவணை 3.11.**
**திட்ட வாரியாக கடந்த 4 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு (தாய்) திட்டம் | 5,808.27 | 888.08 |
| 2 | நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 5,150.77 | 1,089.75 |
| 3 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 2,818.28 | 1,160.78 |
| 4 | ஊரக உட்கட்டமைப்பு திட்டம் | 4,318.92 | 616.67 |
| 5 | பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1,399.28 | 300.00 |
| 6 | சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிச்சக்தி மேம்பாட்டு நிதி (EPREDF) | 429.87 | 37.50 |
| 7 | மாநில நிதிக்குழு மானியம் | 1,552.46 | 304.30 |
| 8 | ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி | 817.33 | 294.19 |
| 9 | 13வது நிதிக்குழு மான்யம் | 6,573.13 | 622.00 |
| 10 | ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் | 3,649.19 | 381.07 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 11 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 980.85 | 154.59 |
| 12 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 488.42 | 76.60 |
| 13 | இதர திட்டங்கள் | 5,245.83 | 1,056.98 |
| மொத்தம் | | **39,232.60** | **6,982.51** |

### 3.4.13. தரக்கட்டுப்பாடு

எதிர்பார்க்கும் தரத்தில், பணிகளின் செயலாக்கம் இருத்தலை உறுதிப்படுத்த தரக்கட்டுப்பாடு இன்றியமையாததாகும். ஒவ்வொரு முன்நியமிக்கப்பட்ட நிலைகளிலும் தேவையான தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்படுவது அவசியமாகும். இதனை அடைந்திட, ஒரு தர உறுதி அமைப்பு இருத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

தற்பொழுது, மாநில தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர்கள் (ஓய்வுபெற்ற பொறியாளர்கள்) சுதந்திரமான தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர்களாக செயல்படுகின்றனர். இவர்கள் மாதாந்திர அடிப்படையில் பணிகளை ஆய்வு செய்கின்றனர். தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர்களின் ஆய்வு குறிப்புகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவ்வப்பொழுது சீராய்வு செய்யப்படுகிறது. தற்போதைய அமைப்பில், ஒளிவு மறைவற்ற தன்மையினை ஏற்படுத்த, தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர்களின் அறிக்கைகளை பதிவேற்றம் செய்ய



இணைய தளத்தில் தரக்கட்டுப்பாடு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

தேவையான தரப்பரிசோதனை கருவிகளுடன் கூடிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை அமைத்தல் தரக்கட்டுப்பாட்டு அமைப்பின் அடிப்படை தேவையாகும். இத்துறை, மாவட்ட அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆய்வகங்கள் அவ்வப்பொழுது வலுப்படுத்தப்படுகிறது.

### 3.5. கிராம ஊராட்சி தெரு விளக்குகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சூரியமின் சக்தி பயன்பாட்டினை மேம்படுத்துதல்

கிராம ஊராட்சிகளில் மின் செலவுகளை கட்டுப்படுத்திடவும், ஊரக பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டினை மேம்படுத்தும் நோக்கத்துடனும் கிராம ஊராட்சிகளில் உள்ள தெரு விளக்குகளை, சூரிய சக்தியுடன் கூடிய தெரு விளக்குகளாக மாற்றி அமைக்கும் திட்டம் 2011–12–ம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சிகளில் சோதனை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டமாக, 1,000 கிராம ஊராட்சிகளில், 2011 முதல் 2016 வரை 5 ஆண்டுகளில் 1 இலட்சம் தெரு விளக்குகளை சூரிய சக்தியுடன் கூடிய தெரு விளக்குகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இத்திட்டத்தினை செயல்படுத்தும் முகமையாகும்.

**2011–12** மற்றும் **2012–13** ஆகிய **2** ஆண்டுகளில் ரூ.**90.12** கோடி மதிப்பீட்டில் **40,000** தெரு விளக்குகள் அமைக்கும்பணி நடைபெற்று வருகிறது. தமிழக அரசு ரூ.**6.05** கோடி செலவில் **2013–14–**ம் ஆண்டில் **85** ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சூரிய சக்தியுடன் கூடிய கலன்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஒப்பந்தப் புள்ளிகளை இறுதி செய்து சூரிய சக்தியுடன் கூடிய கலன்கள் அமைக்க தேவையான நிறுவனங்களை தேர்வு செய்துள்ளது. இத்திட்டம், மாவட்ட அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.6. ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான, புதிய கட்டடங்கள், சமையல் அறை, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த அரசு "ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" எனும் திட்டத்தை **2011–12**ம் ஆண்டு துவக்கியது. தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள



ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும் தட்டோடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படுகிறது. புதிய பள்ளிக் கட்டடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்படுகின்றன. பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படுகிறது.

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிய சமையல் அறைகள் அமைக்கப்படுகின்றன. தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் / புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படுகிறது. உணவுப்பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ளும் கூடுதல் அறைகளும் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது நீக்கி சீரமைக்கப்படுகின்றன. தேவைப்படும் இடங்களில் குடிநீர்க்குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சிகளின் தேவைக்கு பயன்படுத்தப்படும் குடிநீர் ஆதாரத்திலிருந்து புதிய

இணைப்புகள் அல்லது புதிய ஆழ்குழாய் கிணறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் மாணவ, மாணவியருக்கு போதுமான கழிப்பிட வசதிகள் செய்து தருவதை இந்த அரசு உறுதிசெய்கிறது. பள்ளிகளில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படுகின்றன.

மேலும், தற்போது மேற்கொள்ளப்படும் பணிகளைத் தவிர, மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்த 2012–13ம் ஆண்டு முதல் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வட்டார அளவில் அமைக்கப்பட்டுள்ள குழு, தேவைப்படும் பணிகளைக் கண்டறிந்து இறுதி செய்கிறது. இக்குழு, தாய்த் திட்ட கணக்கெடுப்பின்படி தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை பட்டியலுடன் நேரடி ஆய்வு மேற்கொண்டு அனைத்துப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்பு பணித் தேவைகளைக் கண்டறிகின்றன.

### 3.6.1. 2011–12 முதல் 2014–15 ஆம் ஆண்டு வரையிலான திட்ட செயல்பாடு

2011–12 முதல் 2014–15 வரை ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2011–12 (2,020 கிராம ஊராட்சிகள்), 2012–13 (2,250 கிராம ஊராட்சிகள்), 2013–14 (2,500 கிராம ஊராட்சிகள்)



மற்றும் 2014–15 (2,741 கிராம ஊராட்சிகள்)–ல் தாய்த் திட்டத்திற்கென தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள், சமையற்கூடங்கள், கழிப்பறைகள், குடிநீர் பணிகள் மற்றும் சுற்றுசுவர் ஆகிய பணிகள் முழுமையாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

2011–12ம் ஆண்டில் 10,418 பணிகள் ரூ. 87.40 கோடி மதிப்பீட்டிலும், 2012–13ம் ஆண்டில் 9,069 பணிகள் ரூ. 95.33 கோடி மதிப்பீட்டிலும், 2013–14ம் ஆண்டில் 10,040 பணிகள் ரூ. 99.91 கோடி மதிப்பீட்டிலும், 2014–15ம் ஆண்டில் 10,054 பணிகள் ரூ.115.96 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.6.2. 2015–16ம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

இத்திட்டம் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2015–16ம் ஆண்டிலும் செயல்படுத்தப்படுகின்றது.

### 3.7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு பணிகளை கண்டறிந்து அதனை செயல்படுத்துவதற்காக மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது தொகுதியில் உட்கட்டமைப்புத் தேவைகளைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய பணிகளைப்

பரிந்துரை செய்வர். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும், ஒவ்வொரு ஆண்டிற்கும் வழங்கப்பட்டு வந்த ரூ.1.75 கோடி தொகையானது 2011–12ம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடி தொகையாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கி செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில் ரூ.1.10 கோடி நிதியை அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளுக்கும் மீதமுள்ள ரூ.90 இலட்சம் நிதியினை சட்ட மன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யலாம்.

### 3.7.1. சிறப்பம்சங்கள்

#### 3.7.1.1. வரையறுக்கப்பட்ட நிதி தொகையான ரூ.1.10 கோடியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கான (மாநகராட்சி /நகராட்சி/ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி | : | ரூ.25.00 இலட்சம் |
| 2. | ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அங்கன்வாடி கட்டிடங்கள், சத்துணவு மையக் கட்டிடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல், அங்கன்வாடி சமையல் அறையை நவீனப்படுத்துதல் | : | ரூ..20.00 இலட்சம் |
| 3. | குடிநீர் வழங்கல் பணிகள் | : | ரூ.15.00 இலட்சம் |
| 4. | சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட பணிகள் நீங்கலாக கீழ்க்கண்டவாறு பணிகளைத் தேர்வு செய்யலாம். | : | ரூ.50.00 இலட்சம் |



**ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் ;**

1. ஊரகப் பகுதிகளில் சூரிய சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல்/ அரசு கட்டடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல்/ LED தெருவிளக்குகள் அமைத்தல்.
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள்,

அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள், அரசு தொழில்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில் பயிலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்தல்
7. பாலங்கள் கட்டுதல்
8. கூடுதல் இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் இவ்வசதிகளை அமைத்தல். நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள சுடுகாடு/இடுகாடுகளில் சுற்றுச் சுவர் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதால், இப்பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.



10. பொது விநியோக கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்.
11. உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொத்துகளாக இருக்கும் வகையில் உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம் / ஜிம்னாசியம் கட்டடங்கள் கட்டுதல்.

*ஊரகப்பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் கூடுதலாக பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டும் பணிகளையும் மேற்கொள்ளலாம்.*

*நகர்ப்புற பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் கூடுதலாக, மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல், புதிய பொதுப் பூங்காக்கள்அமைத்தல், பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல், ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவகற்றும் இயந்திரங்களை வாங்குதல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளலாம்.*

### 3.7.1.2. வரையறுக்கப்படாத தொகையான ரூ.90 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கீழ்க்கண்ட பணிகளைத் தவிர, ஏனைய பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (பயணிகள் நிழற் குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச்செய்ய அனுமதிக்கப்படுகிறது).

**3.7.1.3. தடை செய்யப்பட்ட பணிகள்**

1. மத்திய, மாநில அரசுத் துறைகள் பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள்மற்றும் சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலக கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல். **விதிவிலக்கு (i)** நேரடிக் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையக் கட்டடங்கள். **(ii)** அரசாணை நிலை எண். 179 ஊ.வ.மற்றும் ஊராட்சி (மா.அ.தி) துறை நாள். 19.12.2013ன்படி மொத்தம் மதிப்பீட்டு தொகை ரூ213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
2. தனி நபர்/குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல், (விதிவிலக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டுதலின்படி பேரூராட்சிகளில் புதிய வீடுகள் கட்டுதல்)
3. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல். **விதிவிலக்கு** – அரசுத் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத்திட்டம், தாட்கோ திட்டம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 31.12.2005 வரை கட்டப்பட்ட வீடுகளை வீடு ஒன்றுக்கு ரூ.50,000/–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், இப்பணிகளை எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்,–**விதிவிலக்கு** (i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழில்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். (ii) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். (iii) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப்பெட்டிகள் வாங்குதல். (iv) உடற்பயிற்சிக் கூடம் / ஜிம்னாசியம் ஆகியவற்றிற்கு தேவையான உபகரணங்கள்

வாங்குதல். (V) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரிய மின் ஒளிகலன்கள் நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்

5. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.
6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.
7. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.
9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.
10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.
12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.



13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).
14. உயர் மின்கம்ப விளக்குகள் பொருத்துதல்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீத ஊரகப்பகுதிகளில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிகளிலும் அல்லது நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் வாழும் மக்களும் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

### 3.7.1. 4. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்

இத்திட்டத்தின் கீழ் 2014–15–ம் ஆண்டில் ரூ.470 கோடி நிதி ஒதுக்கீட்டில் 15,304 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2015–16–ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. 8. தன்னிறைவுத் திட்டம்

உருவாக்கப்பட்ட சமுதாய சொத்துக்கள் நிலைத்திருப்பதற்கு பொது மக்களின் பங்கேற்பு அவசியமானதாகும். பொது மக்களின் பங்களிப்பை ஊக்கப்படுத்தி அதன் மூலம் சமுதாயக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், பராமரிக்கவும் தன்னிறைவுத்

திட்டத்தினை **2011–12**ம் ஆண்டு முதல் இந்த அரசு செயல்படுத்துகிறது.

தன்னிறைவுத் திட்டம், ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

**3. 8. 1 பொதுமக்கள் பங்களிப்பு**

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் பொது மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

**3. 8. 2. பணிகளை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் :**

1. ‘தன்னிறைவுத் திட்டத்தின்’ கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை, தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமுதாயம் ஆகியவற்றின் மூலமாக உருவாகலாம்.
2. எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணியினைக் குறிப்பிட்டு பொது மக்களின் பங்களிப்பான மூன்றில் ஒரு பங்கு தொகையை வழங்க இசைவு தெரிவித்து விண்ணப்ப வடிவம் ஒன்று கோரிக்கை வடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளிக்கப்படவேண்டும்.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி பரிசீலனை செய்வார். பணியின் தேவை நிறைவு அளிக்கும் பட்சத்தில்,



திட்டப் பணியினை மேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.

4. உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதி, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் பெறப்பட வேண்டும்.

6 உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க, உள்ளாட்சி அமைப்பு / துறையின் ஒப்புதலை பெற வேண்டும்.

7 இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாத நிலையில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள் அதிக அளவில் சமுதாயத்திற்கு

பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை அளித்திட வேண்டும்.

**3. 8. 3 பணிகளை நிறைவேற்றுதல்:**

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் வழிவகைகளின்படி, இப்பணிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ அல்லது தொடர்புடைய துறைகள் வாயிலாகவோ மேற்கொள்ளப்படும்.

மக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொது மக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவர்களோ, மேற்கண்ட பணியை தாங்களாகவோ அல்லது அவர்களின் முகவர்கள் மூலமாகவோ செய்திட விரும்பினால், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் போது எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் இந்த கோரிக்கையை ஆய்வு செய்து, அப்பணியின் மதிப்பீட்டில் பொது மக்களின் பங்களிப்பு, மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் இருந்தால், பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் மற்றும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீராதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் மேலாக



பொதுமக்களின் பங்களிப்புத் தொகை இருப்பினும், ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

**3.8.4. 2011–12 முதல் 2014–15 வரையிலான திட்ட செயல்பாடு**

இத்திட்டத்தின் கீழ், ஆண்டொன்றுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மொத்த தொகையில் ரூ.25 கோடி சிறப்புத் திட்டங்கள் மற்றும் கூடுதல் நிதியாக மாவட்டங்களுக்கு வழங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.75 கோடியில் ரூ.1 கோடி தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகளுக்கும், ரூ.74 கோடி அனைத்து மாவட்டங்களுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றன.

2011–12ம் ஆண்டு முதல் 2014–15ம் ஆண்டு வரை 8,965 பயனுள்ள சமுதாய சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.12.**

**2011–12 முதல் 2014–15ம் ஆண்டு வரை உருவாக்கப்பட்டுள்ள பயனுள்ள சமுதாய சொத்துக்கள்**

| வ. எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
| 1 | பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் நூலகங்கள் கட்டுதல் | 87 | 42 | 31 | 12 |
| 2 | அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு தளவாடங்கள் வாங்குதல் | 92 | 90 | 57 | 30 |
| 3 | பள்ளிகளுக்கு கணினிகள் கொள்முதல் செய்தல் | 127 | 25 | 22 | 23 |
| 4 | பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் கட்டுதல் | 93 | 60 | 119 | 53 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | அங்கன்வாடி மற்றும் சமையற்கூடங்கள் கட்டுதல் | 21 | 32 | 23 | 17 |
| 6 | குடிநீர் ஆதாரத்தினை உருவாக்குதல் | 377 | 315 | 337 | 165 |
| 7 | சாலைகளை மேம்படுத்துதல் | 635 | 381 | 244 | 572 |
| 8 | சமுதாயக்கூடம் மற்றும் பொது விநியோகக் கடைகள் கட்டுதல் | 64 | 39 | 69 | 111 |
| 9 | கதிரடிக்கும் களம் கட்டுதல் | 8 | 3 | 11 | 8 |
| 10 | ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல் | 5 | 4 | 6 | 0 |
| 11 | இதர பணிகள் | 1056 | 1240 | 1110 | 1149 |
| | மொத்தம் | 2565 | 2231 | 2029 | 2140 |

## 3.9. சுகாதாரத் திட்டங்கள்

### 3.9.1. மாநில அரசின் முன்முயற்சிகள்

மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்த தமிழ்நாடு அரசு முன்னோடியாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஊராட்சிக்கு ஒன்று வீதம் அப்போது இருந்த 12,618 கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் 2001-04 வரையிலான காலத்தில கட்டப்பட்டன. முழுமையான சுகாதாரத்தை எய்துவதற்கான தாக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு, 2003ம் ஆண்டு, தூய்மையான கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட குறைந்த அலகுத் தொகை வழங்கப்பட்டமையால், தமிழ்நாடு அரசு, 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மாநில அரசின் கூடுதல் பங்குத்



தொகையாக கழிப்பறை ஒன்றுக்கு ரூபாய் 1,500 வழங்க ஆணையிட்டது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதை போன்று, 2012–13ம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஜுலை 2013ம் ஆண்டு, மாநில அளவில், தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் தொடங்கப்பட்டது. மேலும், அனைத்து துறையைச் சார்ந்த கிராம அளவிலான அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களை ஈடுபடுத்தி நேர்முக தகவல் பரிமாற்றம் மூலம் தனிநபர் இல்லங்களில் சுகாதார வசதியின் தேவையை ஏற்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த சுகாதார வசதிகள் அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றைத் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்படுதல் என்பது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறப்பான உத்தியாக அமைந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில், ‘‘தூய்மைக் காவலர்கள்’’ அறிமுகப்படுத்தியதன் மூலம் மேற்படி கிராமங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுதல் வெளிப்படையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**3.10. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல்**

ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிருக்கு சுகாதார வசதிகளை வழங்குவதில் இந்த அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சுகாதார வசதி குறைபாடுகளால், குறிப்பாக மகளிர் உடல் நல சீர்கேட்டினால் சிரமப்படுகின்றனர். ஏழ்மை மற்றும் கலாச்சாரப் பழக்கங்களால் சுகாதார வசதி இல்லாதிருந்த நிலையிலிருந்து அவர்கள் மீள வேண்டியிருந்தது. எனவே, ஊரகப் பெண்களுக்கான தனித்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது அவர்களின் பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

மகளிருக்கான சுகாதார தேவைகளை நிறைவேற்றும் விதமாக, தமிழகத்திலுள்ள அப்போதிருந்த அனைத்து 12,618 கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001ம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. பெண்கள் உபயோகப்படுத்தும் வகையில், வளாகங்கள் கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டன. ஒவ்வொரு வளாகமும் 14 கழிப்பறைகள், 2 குளியலறைகள், 1 விசைப்பம்பு அறை, 1 தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கும் மேடை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். குளிக்கவும், துணி துவைக்கவும், தேவையான தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. இவ்வளாகத்திலுள்ள கழிப்பறைகளை ஒதுக்கீடு செய்யும் பொருட்டு,



உபயோகிப்பாளர்கள் இனங்கண்டு குழுவாக்கப்பட்டனர். தண்ணீர் வசதி மற்றும் விளக்குகளுக்கு தேவையான மின் வசதியைக் கிராம ஊராட்சிகள் வழங்கி தொடர்புடைய குடும்பங்கள் அதனைப் பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டன. ஒவ்வொரு வளாகத்திலும் பெண்கள் பயன்படுத்திய நாப்கின்களை சுகாதாரமாக அப்புறப்படுத்திட எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.

2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் வளாகங்கள் கட்டப்பட்டன. 2006 முதல் 2011ம் ஆண்டு வரை, போதுமான கவனிப்பு இல்லாததால், பெரும்பாலான மகளிர் சுகாதார வளாகங்கள் முறையான பயன்பாடு மற்றும் பராமரிப்பு இல்லாமல் போனது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2011 –12ம் ஆண்டில், ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**3.11. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களின் பராமரிப்பு**

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தை முறையாகப் பயன்படுத்தவும், பராமரிக்கவும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களிடையேயிருந்து ஒவ்வொரு வளாகத்திற்கும் பயன்படுத்துவோர் குழுக்கள்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வளாகங்கள் தினசரி பராமரிப்பிற்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தண்ணீர்வசதி மற்றும் மின்விளக்கு ஆகியவற்றுக்கான மின்கட்டணம், பம்புசெட் பராமரிப்பு, கழிவுநீர்தொட்டி சுத்தம் செய்தல் போன்ற சிறு பழுது / பராமரிப்பு பணிகளை கிராம ஊராட்சி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இதற்கான செலவினம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தின் பராமரிப்பைக் கண்காணித்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துள்ளனர். சுகாதார வளாகங்களின் செயல்பாடுகள் குறித்து, இக்குழுக்கள் விவாதித்து அதன்படி நடவடிக்கை எடுத்து வருகின்றன.

மகளிர் சுகாதார வளாகங்களின் தினசரி பராமரிப்பினை, சென்னை தேசிய தகவல் மையம் உதவியுடன் உருவாக்கப்பட்ட மென்பொருள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. சுகாதார வளாகம் செயல்பாடு குறித்து வட்டார பணியாளர், கிராம அளவில் ஒவ்வொரு சுகாதார வளாகத்திற்கும் பொறுப்பாக்கப்பட்ட சுகாதார பணியாளர் மூலம் தகவல் பெற்று, அதனை சம்பந்தப்பட்ட வட்டார அலுவலகத்திலிருந்து இத்துறையின் இணைய தளம் www.tnrd.gov.in- ல் பதிவுகள் செய்கின்றனர். மேற்படி



பதிவுகள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கண்காணிக்கப்பட்டு தேவைக்கு ஏற்ப உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### 3.12. ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்

ஊரக மகளிருக்கு ஏற்படுத்திக்கொடுத்த ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாக வசதியைப் போல ஊரகப் பகுதிகளிலுள்ள ஆடவர்களும் இது போன்ற வசதிகளை வழங்கக் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2012–13ம் ஆண்டு, முதல் கட்டமாக ஒரு வட்டாரத்திற்கு இரண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைத்திட ஆணையிட்டார்கள். தமிழ்நாட்டில் ரூ. 35 கோடி மதிப்பீட்டில், 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கான இடங்கள், உள்ளூர் தேவையின் அடிப்படையிலும், திறந்த வெளி மலம் கழித்தல் அதிகமாக உள்ள பகுதிகள், வீடுகளில் கழிப்பறைகள் இல்லாமை, போதுமான தண்ணீர் வசதி இல்லாமை போன்ற தகுதிகளின் அடிப்படையிலும், மாவட்ட ஆட்சியர்களால் கண்டறியப்பட்டன. ஒவ்வொரு வளாகமும், 570 சதுர அடி பரப்பளவில், 8 கழிப்பறைகளை உள்ளடக்கியதாகவும், இதில் முதியோர் / மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு ஐரோப்பிய கழிவறையும் (Western Closet), இளம்சிறார்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் குழந்தை

நேயக் கழிவறையும் (Baby Friendly Toilet) இருக்கும். தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் மேடை ஆகியவையும் இருக்கும். இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கென பயன்படுத்துவோர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் கட்டுமானப் பணியின் துவக்கத்திலிருந்தே ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவது போல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களே எடுத்துச் செய்வதுடன், இதன் தொடர் பராமரிப்பு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்புப் பணியில் பயன்படுத்துவோர் குழுக்களுடன், கூட்டாண்மை அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களும் பங்கேற்க ஊக்கப்படுத்தப்படுகிறது.

தேவையின் அடிப்படையில், **429** கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் 2014-15ம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

### 3.13. உயிர் செரிமானி இணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சமூக பசுமை சுகாதார வளாகங்கள்

**2013–14**ம் ஆண்டில், உயிர் செரிமானி இணைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சமூக பசுமை சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கு, வளாகம் ஒன்றிற்கு ரூ. **4.50** இலட்சம் வீதம் **25** வளாகங்களுக்கு மொத்தம் ரூ.**113**



இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டது. இப்பசுமை சுகாதார வளாகத்தில் உள்ள மனிதக் கழிவுகளை உயிர் செரிமானி அமைக்கப்பட்ட தொட்டியில் செலுத்தி அவை செரிமானம் செய்யப்பட்டு, தெளிவான நீர் மட்டும் வெளியேற்றப்படுகிறது. இந்த நீர் மீளவும் கழிப்பறைக்கு பயன்படுத்தப்படும்.

இச்சமூக பசுமை சுகாதார வளாகங்களை அமைத்திட திறந்தவெளி மலம் கழிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ள இடங்கள், பேருந்து நிலையங்கள், சுற்றுலாத்தலங்கள் போன்ற இடங்களை தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களால் கண்டறியப்பட்டு **25** இடங்களில் வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தகுதி வாய்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்டு இந்த வளாகங்களில் உயிர் செரிமானிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சோதனை அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி வளாகங்கள், புதுமையான முறையில் கழிவுகளை அகற்றுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தண்ணீர் சேமிப்பு, எளிதான பராமரிப்பு மற்றும் நிலைப்புத்தன்மை ஆகிய வசதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளன.

### 3.14. தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு, இந்த அரசால் **2003**ம் ஆண்டில் ‘‘தூய்மையான கிராம இயக்கம்’’ துவக்கப்பட்டது. இவ்வியக்கம், சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டு நடிவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். திறந்த வெளியில்

மலம் கழித்தல் அற்ற தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் விருது தொகை ரூபாய் 5 இலட்சம் பெற பரிந்துரை செய்ய தகுதியானதாக இருந்தன. இந்த அரசால் ஆண்டு தோறும் 15 கிராம ஊராட்சிகள் தெரிவு செய்து ரொக்கப் பரிசும் கேடயமும் வழங்கப்பட்டது.

2006ம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம் 2011–12ம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு, 31 கிராம ஊராட்சிகளுக்கும் ஒரு ஊராட்சிக்கு ரூ.5 இலட்சம் என்ற அடிப்படையில் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டொன்றுக்கு 31 ஊராட்சிகள் என்ற அடிப்படையில் 2011–12 மற்றும் 2012-13ம் ஆண்டுகளுக்கான விருதுக்கு ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. 2013–14ம் ஆண்டிற்கு 31 மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இவ் விருது பெறுவதற்கான முன்மொழிவுகள் பெறப்பட்டன. இவை பரிசீலிக்கப்பட்டு, மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 31 கிராம ஊராட்சிகள் இவ்விருதிற்கென தேர்வு செய்யப்பட உள்ளன. 2014–15ம் ஆண்டிற்கும் இதே நடைமுறை பின்பற்றப்படும்.



### 3.15. மாநில அளவிலான தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் மேற்கொள்வதன் மூலம் திறந்தவெளி மலம் கழித்தலை ஒழித்தல்

தமிழ்நாட்டினை திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக மாற்றும் பொருட்டு அரசாணை (ப) எண்.147, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள் 3.4.2013ன்படி, மாநில அளவிலான தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்கள் வெளியிட ஆணையிடப்பட்டதுடன், தனிச்சிறப்பு பெற்ற நிறுவனம் மூலம் யுனிசெஃப் உதவியுடன் தயாரிக்கப்பட்ட மேற்படி தகவல் தொடர்பு சாதனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம், ஜுலை 2013ம் ஆண்டு தொடங்கப்பட்டு படிப்படியாக செயல்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டது. சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக்கு வலுவூட்டும் வகையில் நேருக்கு நேர் தகவல் பரிமாற்றம், துண்டு பிரசுரம், சுவர் விளம்பரம் மற்றும் சிற்றேடுகள் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊராட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், பாரத் நிர்மான் தொண்டர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மிகப்பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் சுகாதாரம் குறித்த செய்தியினை அனைத்து ஊரகக் குடும்பங்களும் அறிந்திடச் செய்து அதன் வழியாக

திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாநிலம் என்ற இலக்கை அடைய வழிவகுக்கும்.

## 3.16 தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் அரசினால் மேற்கொள்ளப்படும் உத்திகள்

முழு சுகாதார வசதிகளை அனைவரும் பெற வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்குத் திட்டத்தை விரைவாக எய்தவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூன்று பிரிவுகளான, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்ட களப்பணியாளர்கள் சுகாதார மேம்பாட்டில், ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றனர். கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவி குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றை நேர்முகத் தகவல் பரிமாற்றத்திற்கு ஈடுபடுத்துவதன் மூலம் சமுதாயத்தில் தேவையான மனமாற்றம் கொண்டு வர வழிவகுத்துள்ளது. தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடுதல், நடைமுறைபடுத்துதல் மற்றும் அதன் பயன்பாட்டை கண்காணித்தல் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை முதன்முறையாக அரசாணை எண்.46 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை நாள் 26.3.2015ல் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.



இந்த வழிகாட்டு நெறிமுறையின் நோக்கமானது, கிராம ஊராட்சி அளவில் சுகாதார திட்டத்திற்கு மக்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துதல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், ஊக்கத்தொகை அளித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு விரிவான செயல் திட்டமளித்தல் ஆகும். இந்த வழிகாட்டி நெறிமுறைகளின் விரிவான குறிக்கோள்கள் கீழ் வருமாறு:

- திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றும் பொருட்டு, ஊரகப் பகுதிகளில் சுகாதாரத் திட்டத்தினை முடுக்கிவிடுதல்.
- திட்டப் பங்கேற்பாளர்களான ஊராட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பல்வேறு அரசுத் துறைகளின் களப்பணியாளர்கள் ஆகியோரைத் தீவிரமாக ஈடுபடுத்தி திறந்தவெளி மலம் கழித்தலை அறவே ஒழித்தல்.
- தொடர் மனமாற்ற நடவடிக்கைகள் (Behavioural change) மூலம் நீடித்து நிலைத்த, பாதுகாப்பான சுகாதார நடைமுறையை தொடந்து பின்பற்றச் செய்தல்.

மேற்குறிப்பிட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வாயிலாக கிராம ஊராட்சி அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி

அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் ஈடுபாட்டுடன் உரிய நோக்கத்தினை அடைய ஏதுவாகும். தற்போது திறந்தவெளியில் மலம் கழிக்கும் குடும்பத்தினர், கழிப்பறையைக் கட்டிப் பயன்படுத்திட மக்களிடையே ஒன்றிணைந்த நேர்முக தகவல் பரிமாற்றம் (Inter Personal Communication) மற்றும் தகவல் தொடர்பினால் அவர்களின் பழக்க வழக்கத்தை மாற்றம் செய்வது சாத்தியம் ஆகும். எனவே, சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைய பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர்.

இத்திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல்படுத்திட வசதியாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன:

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களை சுகாதார மேம்பாடு அடைவதற்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அந்தந்த மாவட்டத்திலுள்ள மொத்தம் **12,524** கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்



ஒவ்வொன்றிற்கும் தனிப்பட்ட முறையில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினால் ஈடுபடுத்தப்படும் சமூக பயிற்றுநர்கள் (சுகாதாரம்) / சமூக வல்லுநர்கள் (சுகாதாரம்) ஆகியோர்களுக்கு ஒரு அடிப்படைத் திறன் கட்டமைப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இதே போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன.
- ஊரக வளர்ச்சி இணையதளத்திலுள்ள அடிப்படைக் கணக்கெடுப்பு புள்ளி விவரங்களின்படி, **1.4.2015** அன்றைய நிலவரப்படி கிராம ஊராட்சி வாரியாக பதிவிறக்கம் செய்யப்பட்ட கழிப்பறை இல்லாத வீடுகள் குறித்த விவரங்கள் அடங்கிய முதன்மைப் பதிவேட்டை தொடர்புடைய கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு ஒப்படைக்கப்பட்டு, அந்த இலக்கினை அடையும் பொருட்டு தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.
- நேர்முகத் தகவல் பரிமாற்ற நடவடிக்கைகளுக்காக, ஒருமுறை மட்டும் ரூ.**10,000/–** நிதி **12,524** கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- கிராம அளவில் சுகாதார மேம்பாடு தொடர்பான தகவல்களை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தங்களது உறுப்பினர்களுக்கும், இதர சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடத்தப்படுகிறது.
- தனிநபர் இல்லக் கழிப்பறைப் பயனாளிக்கு வேலை உத்திரவு வழங்க ஊராட்சிகளுக்கு தற்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, விரிவான வகையில் "மாதிரி வேலை உத்தரவு" ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட விண்ணப்பம் பெறப்பட்டவுடன் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளவும், கழிப்பறை கட்டும் பணியினை தொடர்ந்து கண்காணிக்கவும் வழிவகுத்துள்ளது.
- மாதிரி வடிவமைப்புகள் மற்றும் விரிவான மதிப்பீடு வழங்கப்பட்டதன் மூலம் கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை குறித்த குறும்படம் ஒன்று யுனிசெஃப் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறும்படத்தில் கழிப்பறை கட்டுமானத்தில் பல்வேறு மாதிரிகளான உறிஞ்சு குழி முறை (தேன்கூடு முறை மற்றும் வட்ட வடிவிலான உறை கட்டுமானம்) மற்றும் கழிவுத் தொட்டி முறை கட்டமைப்பு முதலியன



கட்டுவது குறித்து எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படும் தொழில்நுட்பம் அறிந்த மற்றும் தொழில்நுட்பம் அறியாத இரு தரப்பினரும் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

- இத்திட்டத்தின் கீழ் பயனாளிக்கு இரண்டு தவணைகளில் நிதி விடுவிப்பதை விரைவுபடுத்த வேண்டி, பணி மதிப்பீட்டுச் சான்று அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் தொழில்நுட்ப அலுவலர் (பணி மேற்பார்வையாளர்) அளவீடுகள் செய்யும் நடைமுறை எளிமைப் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பணிப்பார்வையாளர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறைகளை பார்வைவிட்டு பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் பணி மதிப்பீட்டுச் சான்று வழங்குவார்கள். இதன் மூலம் தொகை விடுவிப்பு நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஏழ்மை நிலையில் உள்ள பயனாளிகளுக்கு போதுமான நிதிவசதி இல்லாத காரணத்தால் கட்டுமானப் பணிகள் தொடங்குவதில் சிரமம் ஏற்படுவதை கருத்திற் கொண்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் நிதியில் இருந்து ரூ.5,000 முன்பணமாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறைந்தபட்சம் 10 விழுக்காடு பயனாளிகளுக்கு முன்பணம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டச் செயல்பாட்டில் புதுமையான முறைகள் ஊக்குவிக்கப்படுன்றன. ஒரு சில மாவட்டங்களில் இத்திட்டச் செயல்பாட்டில் புதுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக, சுய உதவிக் குழு உறுப்பினர்களால் வட்ட வளையம் (circular Ring), கூரைப் பலகை (Roof Slab), சந்திப்பு அறை (Junction Chamber) ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. கழிப்பறை கட்டுமான இடத்தைக் குறியீடு செய்வதற்காக உலோகச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. இது கட்டுமானப் பணியினை விரைவுபடுத்துவதுடன் ஒரே மாதிரியான அளவீடு செய்வதற்கு உதவி செய்கிறது.
- கழிப்பறைகள் கட்டும் போது இரண்டு நிலைகளில் புகைப்படம் எடுக்கப்படுகிறது. அதாவது, கழிப்பறை கட்டுவதற்கான ஊக்கத் தொகை பயனாளிகளுக்கு விடுவிப்பதற்கு, முதலில் அடித்தளம் மட்டத்திலும், இரண்டாவது கழிப்பறை முடிவடைந்த நிலையிலும் புகைப்படம் எடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பயனாளியின் புகைப்படம் எடுக்கப்படும்போது அவருடன் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட நபர்களில் ஒருவர் பணியிடத்தில் சேர்ந்து இருக்குமாறு எடுக்கப்பட வேண்டும். இது, கழிப்பறை கட்டுதல் மற்றும் அறிக்கை அளித்தலில் வெளிப்படைத்தன்மைக்கு வலுச் சேர்த்துள்ளது.



- கழிப்பறைகள் தரமான முறையில் கட்டுவதையும், அதன் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும் வட்டார, மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள் மூலம் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாநில தர கண்காணிப்பு அலுவலர் மூலம் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து சிறப்பினமாக ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்படுகின்றனர்.
- ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் அதிகபட்ச ஊக்க நிதியாக ரூ.300 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. முதல் தவணையாக, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட ஆறு மாத காலத்திற்கு பின்பு ரூ.200 மற்றும் மேற்படி கழிப்பறை ஒரு ஆண்டிற்கு மேல் தொடர்ச்சியாக பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்த பின்னர் இரண்டாவது தவணையாக ரூ.100 விடுவிக்கப்படும்.
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டங்களைச் சார்ந்த அனைத்து அலுவலர்களும் இதில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர்.

2015–16ம் ஆண்டில் 4,231 கிராம ஊராட்சிகள் சுகாதாரத்தில் முழுமையடைந்த ஊராட்சிகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

### 3.17 ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

2014–15ம் ஆண்டில், 12,524 கிராம ஊராட்சிகளில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு ரூ.44.10 கோடி செலவில் 17,638 மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்க தமிழ்நாடு அரசு அனுமதி அளித்ததுடன், ஊரக பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த ரூ.110 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது.

அதிகமான கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்துவதை விரைவுபடுத்தும் பொருட்டு அரசாணை எண். 47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை நாள் 26.3.2015ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, கீழ்கண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தன்மைகள் கொண்ட 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மூலம் மறுசுழற்சி மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான வசதிகள் முதற்கட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

i. 10,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகள்



ii. பெரிய நகர்ப்புறத்தை (மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகள்) ஒட்டிய கிராம ஊராட்சிகள்

iii. முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மற்றும் புனிதத் தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள்

iv. மக்கள் அதிக அளவில் வந்து செல்லக்கூடிய, பெரிய பேருந்து நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்கள் உள்ள கிராம ஊராட்சிகள்

v. பெரிய தொழிற்சாலைகள் / வணிக அமைப்புகள் / கல்வி நிறுவனங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகள்

vi. நான்கு வழிச்சாலைகள் / பழைய மகாபலிபுரம் சாலை, கிழக்கு கடற்கரைச்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி அமைந்துள்ள கிராம ஊராட்சிகள்

vii. பெரிய அளவிலான சந்தைகள் கொண்ட கிராம ஊராட்சிகள்

viii. ஊராட்சி ஒன்றிய மற்றும் வட்டம் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் கிராம ஊராட்சிகள்

### 3.17.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

வழிகாட்டு நெறிமுறைகளின் முக்கிய அம்சங்கள்:

i. ஒரே ஒரு குக்கிராமத்தைக் கொண்ட கிராம ஊராட்சியாக இருப்பின் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு அந்த கிராம ஊராட்சியே ஒரு தனி அலகாகும். பெரிய ஊராட்சியாக இருப்பின் ஒரு குக்கிராமத்தையோ அல்லது குக்கிராமங்கள் தொகுப்பாகவோ இத்திட்டம் செயல்படுத்த அலகாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ii. திடக்கழிவுகளை அப்பறப்படுத்துவதற்கு முன்பு அவை மக்கும் குப்பை (Biodegradable) மற்றும் மக்காத குப்பைகளாக (Non-Biodegradable) பிரிக்கப்படுகிறது.

iii. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் மக்கும் கழிவுகள் மூலம் உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகளும், மீதமுள்ள திடக்கழிவுகளை சேகரித்து வைப்பதற்கு ஒரு குழியும் தோண்டப்படுகிறது.

iv. தேர்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சியில் 150 குடும்பத்திற்கு ஒரு பணியாளர் வீதம் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளில் மகாத்மா காந்தி தேசிய



வேலை உறுதித்திட்டப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

v. "தூய்மைக் காவலர்கள்" எனப்படும் இவர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் திடக் கழிவுகளை குழிகளுக்கு எடுத்துச் சென்று கொட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

vi. இப் பணியாளர்களுக்கான ஊதியம், முதல் ஓராண்டில், முதல் 100 நாட்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட நிதியில் இருந்தும், 100 நாட்களுக்கு மேல் பணி மேற்கொள்ளும் நாட்களுக்கு திடக் கழிவு மேலாண்மை திட்ட நிதியில் இருந்தும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

vii. திட்ட நிதியிலிருந்து மூன்று சக்கர மிதி வண்டிகள், தூய்மைப்படுத்தத் தேவையான உபகரணங்கள், தூய்மைக் காவலர்களுக்கு மேல் சட்டை, கையுறை மற்றும் தொப்பி ஆகியவை, நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகிறது.

viii. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவை துாய்மைக் காவலர்களை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

மேற்கண்ட நெறிமுறைகளின்படி திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தக் கண்டறியப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகக் கீழே பட்டியலாக தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.13.**

**திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த கண்டறியப்பட்ட கிராம ஊராட்சிகள்**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 198 |
| 2 | திருவள்ளூர் | 130 |
| 3 | கடலூர் | 64 |
| 4 | விழுப்புரம் | 120 |
| 5 | வேலூர் | 140 |
| 6 | திருவண்ணாமலை | 86 |
| 7 | சேலம் | 58 |
| 8 | நாமக்கல் | 74 |
| 9 | தர்மபுரி | 44 |
| 10 | கிருஷ்ணகிரி | 30 |
| 11 | ஈரோடு | 68 |
| 12 | திருப்பூர் | 90 |
| 13 | கோயம்புத்தூர் | 100 |
| 14 | நீலகிரி | 11 |
| 15 | தஞ்சாவூர் | 80 |
| 16 | நாகப்பட்டினம் | 56 |
| 17 | திருவாரூர் | 40 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 88 |
| 19 | கரூர் | 22 |
| 20 | அரியலூர் | 25 |
| 21 | பெரம்பலூர் | 20 |
| 22 | புதுக்கோட்டை | 74 |
| 23 | மதுரை | 56 |
| 24 | தேனி | 20 |
| 25 | திண்டுக்கல் | 60 |
| 26 | இராமநாதபுரம் | 44 |
| 27 | விருதுநகர் | 60 |
| 28 | சிவகங்கை | 38 |
| 29 | திருநெல்வேலி | 42 |
| 30 | தூத்துக்குடி | 50 |
| 31 | கன்னியாகுமரி | 12 |
| **மொத்தம்** | | **2,000** |

## 3.18. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை தடுத்திடும் வகையில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்பு திட்டமாக 2003–04ம் ஆண்டு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–15ம் நிதியாண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.700 இலட்சமும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ. 50 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், வேளாண் கூலி விவசாயிகளுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வழங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் 2014–15ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது.

2015–16ம் நிதியாண்டிற்கும் இத்திட்டத்திற்காக ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.19. தானே வீடு வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் டிசம்பர் 2011–ஆம் ஆண்டு ‘‘தானே’’ புயல் காற்று உருவாகி லட்சக்கணக்கான வீடுகளை சேதப்படுத்தியதோடு லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்தது. மாண்புமிகு தமிழக



முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி தமிழக அரசு மிகத் துரிதமாகச் செயல்பட்டு அதிக அளவிலான உடனடி மீட்புப் பணிகளை விரிவாக மேற்கொண்டு, அனைத்து மீட்புப் பணிகளையும் குறித்த கால அளவிற்குள் செய்து முடித்தது. இருந்த போதிலும், "தானே" புயலினால், முழுமையாக சேதமடைந்து குடிசைகளை இழந்த ஊரக மக்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவது தேவையாக இருந்தது.

எனவே, தமிழக அரசு, கடுமையான தானே புயலினால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட, ஊரக மக்கள் பயனடையும் வகையில் ‘‘தானே வீடு வழங்கும் திட்டம்’’ என்ற திட்டத்தை துவக்கியது. தமிழக அரசு "தானே" புயல் காற்றினால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வீடுகளை மாற்றியமைக்கும் பொருட்டு ரூ. 1000 கோடி மதிப்பீட்டில், 1,00,000 கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது.

### 3.19.1. இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- தானே புயலால் பாதிக்கப்பட்ட ஊரகக் குடும்பங்கள் அனைத்தும் இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள்.
- ஒவ்வொரு வீடும் 200 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும்.
- ஒவ்வொரு வீட்டிலும் வசிக்கும் அறை, சமையலறை மற்றும் கழிவறையுடன் மழை நீர் சேகரிப்பு அமைப்பும்

கட்டப்படும். தூய்மை இந்தியா இயக்கத் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டித்தரப்படுகிறது.

- ஒரு வீடு கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ.1 லட்சம் என்ற அடிப்படையில், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது.
- கட்டுமானப் பணிகளை பயனாளிகளே மேற்கொள்வர்.
- இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே புயலால் பாதிக்கப்பட்ட பழுதடைந்த வீடுகள் இருந்த இடத்திலேயோ அல்லது ஊராட்சியில் அந்த பயனாளிக்கு சொந்தமான வேறு இடத்திலேயோ வீடுகளைக் கட்டி கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் எவ்வித நில எடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது.
- பொதுப்பணித் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள நாட்டு செங்கற்கள், நிலக்கரி சாம்பல் கற்கள் அல்லது சிமெண்ட் கற்கள் (hollow block) கொண்டு பயனாளிகள் விருப்பத்திற்கேற்ப கட்டிக்கொள்ளலாம்.

ரூ. 1,000 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகளில் கடலூர் மாவட்டத்திற்கு 90,000 வீடுகளும், விழுப்புரம் மாவட்டத்திற்கு 10,000 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 4. மத்திய திட்டங்கள்

## 4. மத்திய திட்டங்கள்

### 4.1 . மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மட்டுமே சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் திருத்திய அட்டவணை I–ன்படி முக்கிய குறிக்கோள்கள் கீழ்கண்டவாறு வரையறுக்கப் பட்டுள்ளது.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்.

இ) சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் படிப்படியாக விரிவுப்படுத்தப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.



#### 4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை உறுதி அளித்தல்.
2. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகிறது
3. ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.
4. இத்திட்டத்தின் வேலைகளுக்கான ஊதியம் மற்றும் பொருட்களுக்கிடையேயான விகிதாச்சாரம் 60:40 ஆகும்.
5. அனுமதியளிக்கப்பட்ட மொத்த பணிகளில் 50 விழுக்காடு பணிகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும்.
6. திறன்சாரா உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், திறன்சாரா வேலையினை

மேற்கொள்வதற்கான விருப்பத்தினை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

7. கிராம ஊராட்சி தேதியுடன் கூடிய ஒப்புகைச் சீட்டு வழங்குவதுடன் 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்கப்படவேண்டும். இது அவர்களுக்கு 15 நாட்களுக்குள் வேலை வழங்குவதற்கு உத்தரவாதமாக விளங்கும்.
8. வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் உருவாக்கப்படுகின்றன.
9. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை I–ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணியில் பெறப்படக்கூடிய (அதாவது 7 மணி நேர வேலை) ஊதியத்திற்கு சமமாக இருக்கும்.



10. ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும். 2015–16ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் ரூ. 183 ஆகும்.
11. பொதுவாக, வாரம் தோறும் ஊதியம் வழங்கப்படுகிறது. 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
12. மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.
13. வேலை நடைபெறும் இடங்களில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.
14. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை அதற்காக அமைக்கப்பட்டுள்ள "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
15. குறைகளை துரிதமாக தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) "1299" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.
16. இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், "தமிழ்நாடு அரசு மாநில வேலை உறுதி மன்றம்" என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை

உறுதிச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

### 4.1.2. அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 4.1.**

**மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்**

| வகைப்பாடு – அ | வகைப்பாடு – ஆ | வகைப்பாடு – இ | வகைப்பாடு – ஈ |
|---|---|---|---|
| இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள் | நலிவுற்ற இனத்தினற்கான பொதுச் சொத்துக்கள் அல்லது தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல். | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட சுய உதவிக் குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்பு வசதிகளான சேமிப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் பொது பணிமனை அமைத்தல் | ஊரக உட்கட்டமைப்பு வசதிகள் |
| • நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்<br>• நீர் மேலாண்மைப் பணிகள்<br>• சிறு மற்றும் குறு நீர்ப்பாசனப் பணிகள்<br>• பாரம்பரிய நீராதாரங்களை சீரமைத்தல்<br>• காடு வளர்ப்பு<br>• மரக்கன்றுகள் நடுதல்<br>• பழ மரக் கன்றுகள் நடுதல்.<br>• பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள் | • கிணறுகள்<br>• பண்ணைக் குட்டைகள்<br>• இதர நீராதாரப் பணிகள்,<br>• தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல், பண்ணைக் குட்டைகள் சார்ந்த பணிகள்<br>• தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல்<br>• மாநில அல்லது மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத்தினை மேற்கொள்ளல்<br>• கோழிக் கொட்டகை, ஆட்டுக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, மாட்டுக் கொட்டகை அமைத்தல்<br>• கால்நடைத் தீவனம் உருவாக்குவதற்கான எருக்குழிக்களை உருவாக்குதல்<br>• மீன் உலர் களம்<br>• சேமிப்பு வசதிகள்<br>• பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல்<br>• தனி நபர் இல்லக் கழிப்பறைகள் | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட சுய உதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல். | • ஊரக சுகாதார பணிகள்<br>• சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல்<br>• விளையாட்டு மைதானம் அமைத்தல்<br>• பேரழிவினை தடுக்கும் ஆயத்தப்பணிகள், சாலைகளை சீரமைத்தல்<br>• வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் தடுப்புபணிகள் உட்பட் பொது உட்கட்டமைப்பு பணிகள்<br>• கிராம ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுதல்<br>• மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்கான கட்டிடங்கள் கட்டுதல்<br>• புயல் நிவாரணக் கூடங்கள்<br>• அங்கன்வாடி கட்டடங்கள்<br>• கிராம சந்தை, கிராமங்களில் இடுகாடு மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல்'<br>• உணவு சேமிப்பு கட்டிடங்கள் கட்டுதல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டிட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டிடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொள்ளுதல்.<br>• இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட பொது சொத்துக்களை பராமரித்தல். |



ஒவ்வொரு மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளரும், மொத்த நிதி ஒதுக்கீட்டில் 60% விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகள் எடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### 4.1.3. 2011–12 முதல் 2014–15 வரை எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

- ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அக்டோபர் 2011 முதல் அனுமதிக்கப்பட்டது. இதன்மூலம் தொழிலாளர்களின் பங்கேற்பு பன்மடங்கு அதிகரித்தது.
- 2012–13 ஆம் ஆண்டில் வறட்சியை போக்கும் விதமாக, ஒரு குடும்பத்திற்கான வேலைவாய்ப்பு 100 நாட்கள் என்பதிலிருந்து 150 நாட்களாக உயர்த்தப்பட்டது. 21.02.2013 முதல் 31.03.2013 வரையிலான காலத்தில் 12.73 இலட்சம் குடும்பங்களுக்கு 100 நாட்களுக்கு மேல் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதனால் இக்குடும்பங்களுக்கு கூடுதல் ஊதியமாக ரூ.271 கோடி வழங்கப்பட்டது.

- அண்ணா பல்கலைக்கழக தொலை உணர் தொடர்பு நிறுவனம் மூலம் வள ஆதார வரைபடம் (Resource Map) அனைத்து மாவட்டங்களுக்கும் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வரைபடங்களின் அடிப்படையில், முந்தைய காலங்களில் பெற்றிருந்த கொள்ளளவை நீராதார அமைப்புகள் பெறும் வகையிலும், நிலத்தடி நீர் அளவை உயர்த்தும் பொருட்டும், செயற்கைகோள் உதவியுடன் தயார் செய்யப்பட்ட படங்களின் உதவியுடன் நீராதாராப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் சராசரி ஊதிய விகிதத்தினை அதிகரிக்க கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion) மூலம் திருத்திய ஊரக விலைப் புள்ளிப் பட்டியல் வழங்குவது உள்ளிட்ட உறுதியான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.
- 2012–13 முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் தனி நபர் நில மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.
- பசுமைப்பகுதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசுக்கு சொந்தமான இடங்கள், பொது இடங்கள், கிராம ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் தனி நபர் விவசாயிகளது நிலங்களில் மரம் வளர்ப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றில், சாலைகளின் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களே காடுவளர்ப்பு பணிகளை மேற்கொள்ள பல்வேறு மாவட்டங்களில், கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களே நாற்றுகளை வளர்ப்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.
- ஊரக மக்களுக்கு அதிகாரம் அளித்திடும் வகையில், கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 8,634 ஊராட்சி சேவை மையக் கட்டிடங்கள் மற்றும் 270 வட்டார சேவை மையக் கட்டிடங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

**4.1.4. எடுக்கப்பட்ட உன்னத முயற்சிகள்**

**4.1.4.1. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பணிகள்**

- மாற்றுத்திறனாளிகள் உரிமை (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995ல் தெரிவித்துள்ளவற்றை மகாத்மாகாந்தி தேசிய ஊரக

வேலை உறுதித் திட்டத்தில் செயல்படுத்தும் வகையில், தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு வழிவகைகள் செய்துள்ளது. இதற்கான அரசாணையில் மாற்றுத் திறனாளிகள், சிறப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் அல்லது மண் வேலை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக சிறப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு நடவடிக்கைகளாக பணித்தளத்தில் தொழிலாளர்களுக்கு தண்ணீர் வழங்கும் பணியாளர், குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பாளர், பணித்தள பொறுப்பாளருக்கு முன்அளவீட்டினை மேற்கொள்ள உதவுதல், பணித்தளத்தில் அகற்றப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துதல் (இலை, தழைகள் மற்றும் சிறு மரங்கள்) ஆழப்படுத்தப்படும் இடங்களில் தண்ணீர் தெளித்தல் (குறிப்பாக கோடை காலங்களில்) மண்வெட்டி, கடப்பாறை போன்றவற்றை கொண்டு கரைகளில் கொட்டப்படும் மண்களை சமப்படுத்துதல், கரைகளை சமன்படுத்துதல் (benching) மற்றும் கரைகளின் சரிவுப்பகுதியினை சீர்செய்தல் போன்றவை அடங்கும்.
- உடல் உழைப்பினை மேற்கொள்ளத் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளை மண்வேலை தொடர்பான பணிகளான முட்புதர்களை அகற்றுதல்,



ஆழப்படுத்துதல், மரம் நடுதல், மண்நிரப்புதல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம். மண்வேலையை பொறுத்தவரை மாற்றுத்திறனாளிகள் 50 சதவிகித வேலை செய்தாலே அல்லது நான்கு மணி நேரம் முழுமையாக வேலை மேற்கொண்டாலே போதுமானதாகும்.

- தமிழ்நாட்டின் இத்தகைய சிறப்பு முயற்சியினை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பாராட்டியதோடு மற்ற மாநிலங்களும் தமிழகத்தை முன்னுதாரணமாக கொண்டு செயல்படுத்த கேட்டுக்கொண்டது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஊரக விலைப்பட்டியலோடு சிறப்பு பணிவகைப்பாடும் தமிழகத்தால் ஏற்படுத்தப்பட்டதை அடிப்படையாக கொண்டு, மத்திய அரசால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட அட்டவணை–1ல் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஊரக விலைப்பட்டியல் இடம்பெறும் வகையில் திருத்தம் வெளியிடப்பட்டது.
- கடந்த மூன்று ஆண்டுகளில் (2012–13 முதல் 2014–15 வரை) 102.12 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு **ரூ.151.64** கோடி ஊதியமாக வழங்கப்பட்டது.

#### 4.1.4.2. பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

ஆதி திராவிடர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் 15,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி 8 டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற பெருமளவிலான வரவேற்பினைத் தொடர்ந்து 23 டெல்டா அல்லாத மாவட்டங்களில் 32,875 பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

#### 4.1.4.3. பிற துறைகளுடன் ஒருமுகப்படுத்துதல்

ஊரக குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும், நில மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் இதர துறைகளான விவசாயம், தோட்டக்கலை, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம், வனத்துறை, பட்டு வளர்ப்பு, சமூக நலம், நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் போன்ற துறைகளுடன் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெருமளவு மரம் நடுத் திட்டத்தினை வனத்துறையுடன் ஒருமுகப்படுத்தியும், மீன் வளர்ப்பு நடவடிக்கைகளை மீன் வளத்துறையுடன் ஒருமுகப்படுத்தியும், அரசு பட்டு பண்ணைகளில் பண்ணைக்குட்டைகள் அமைத்தலை பட்டு வளர்ப்பு துறையுடன் ஒருமுகப்படுத்தியும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



### 4.1.5. வங்கிகள் / மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் ஊதியம் வழங்குதல் (electronic Fund Management System)

வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமலிருப்பதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு 2013–14 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-fms) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது.

மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) என்பது மாநில அளவில் நிர்வகிக்கப்படும் வங்கி கணக்கிலிருந்து தொடர்பு வங்கி மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களது வங்கி கணக்கிற்கு ஊதியத்தினை ஈடு செய்யும் ஓர் தானியங்கி முறையாகும்.

மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 4 கிராம ஊராட்சிகளில் சோதனை முறையில் 17.06.2013–ல் நடத்தப்பட்டது. மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் இம்முறை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு 01.04.2014 முதல் மாநிலத்திலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்குமான ஊதியம் மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் மட்டுமே ஈடு செய்யப்பட்டு வருகிறது.

### 4.1.6. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் அனைத்து தொழிலாளர்களது கணக்குகளிலும் ஆதார் எண்ணை இணைத்தல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது கணக்கில் ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (APBS) ஊதியத்தினை ஈடு செய்யும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட வலைதளத்தில் அனைத்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களது ஆதார் எண்களும் இணைக்கப்பட்டு வருகிறது. ஆதார் எண்களை இணைப்பதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தகவல்தளம் சீராவதோடு தொழிலாளர்களுக்கு ஊதிய மாற்றம் செய்யப் படுவதை விரைவானதாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்குகிறது.

### 4.1.7. 2011–12 முதல் 2014–15 வரையிலான சாதனைகள்

**2011–12 முதல் 2014–15–**ம் ஆண்டு **வரை** இந்த அரசால் 136.94 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் 2014–15–ம் ஆண்டு தேசிய அளவில் தமிழ்நாடு கீழ்க்கண்டவாறு சிறந்து விளங்குகிறது.



**அட்டவணை 4.2.**

**2014–15ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தேசிய அளவில் தமிழ்நாட்டின் செயல்பாடு**

| | | |
|---|---|---|
| 1 | மனிதசக்தி நாட்கள் உருவாக்குதல் | 26.79 கோடி மனிதசக்தி நாட்களை எய்தியதன் மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றது. |
| 2 | தொழிலாளர்களுக்கான ஊதிய செலவினம் | தொழிலாளர்களுக்கான ஊதியமாக ரூ.3272.12 கோடி செலவழித்ததன் மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றது. |
| 3 | பெண்களின் பங்களிப்பு விகிதம் | சதவீத அடிப்படையில் கேரளாவிற்கும் புதுச்சேரிக்கும் அடுத்ததாக தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றது. (85%). ஆனால் 22.87 கோடி மனிதசக்தி நாட்கள் மகளிரால் எய்தப்பட்டதன் மூலம் நாட்டிலேயே **முதலாவது** இடத்தில் உள்ளது. கேரள மாநிலத்தில் மகளிரால் உருவாக்கப்பட்ட மனிதசக்தி நாட்கள் 5.42 கோடி மட்டுமே ஆகும். |
| 4 | வேலை வாய்ப்பு அளித்தல் | 2014–15 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பு வழங்குவதைப் பொறுத்தவரை 56.57 இலட்சம் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி தமிழகம் முதலிடம் பெற்றது. |

### 4.1.8. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான விருதுகள்

**அ) மாநிலத்திற்கான தேசிய விருது**

- முதன்முறையாக மாநிலங்களுக்கான விருது மூன்று வகைப்பாட்டின் கீழ் 2012–13 முதல் அறிவிக்கப்பட்டன. இவற்றில் **தமிழ்நாடு "சமூகப் பங்களிப்பு" (social inclusion) என்ற**

**வகைப்பாட்டில் சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கப்பட்டுள்ளது.** "சமூகப் பங்களிப்பு" பிரிவில் விருதுபெற்ற ஒரே மாநிலம் தமிழகம் மட்டுமே.

**ஆ) மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்**

ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தேசிய அளவில் நன்றாக செயல்படும் மாவட்டங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது. **2011–12** முதல் **2013–14–ம்** ஆண்டுவரை இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காகப் பெறப்பட்ட விருதுகள் விவரம் கீழ்கண்டவாறு:

**அட்டவணை 4.3.**
**மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்**

| வருடம் | மாவட்ட விருது | கிராம ஊராட்சிக்கான விருது |
|---|---|---|
| 2011–12 | 1. தஞ்சாவூர்<br>2. திருச்சிராப்பள்ளி | 1. காடம்பாடி கிராம ஊராட்சி, சூலூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2012–13 | 1. நீலகிரி | 1. தாணிக்கோட்டகம் கிராம ஊராட்சி, வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| 2013–14 | 1. தேனி | 1. எப். கீழையூர் கிராம ஊராட்சி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |



2014-15-ம் ஆண்டிற்கான, விருதிற்குரிய கருத்துருவானது அக்டோபர் **2015**ல் அனுப்பப்படும். உரிய பரிசீலனை மற்றும் களஆய்விற்கு பின்பு விருதுக்கான மாவட்டம் மற்றும் ஊராட்சியானது தேர்ந்தெடுக்கப்பட்டு, விருதானது **2.2.2016**ல் வழங்கப்படும்.

### 4.1.9. 2015-16-ம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

2015-16 ம் ஆண்டில் **37.29** கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்க தொழிலாளர் மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது நிதியளவில் ஊதிய செலவினத்திற்கு மட்டும் ரூ.**6824.07** கோடியாகும்.

2015-16-ம் ஆண்டில் கீழ்க்காணும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- 4,231 கிராம ஊராட்சிகளில் முழுமை பெறும் வகையில் (Saturation mode), இந்திரா நினைவு குடியிருப்பு / முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளில் கட்டப்படும் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் உட்பட, **7.50** இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்.
- திடக் கழிவு மேலாண்மையின் ஒரு பகுதியாக **2,000** கிராம ஊராட்சிகளில் மக்கும் குழிகளை (Compost Pits) உருவாக்குதல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களை திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்.

- சிறு, குறு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரது நிலங்களில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் மரக் கன்றுகள் நடுதல்.
- இந்திரா நினைவு குடியிருப்பு மற்றும் முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டங்களுடன் ஒருமுகப்படுத்துதல் மூலம் வீடு ஒன்றிற்கு 90 திறன்சாரா மனிதசக்தி நாட்களை மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்கள் மூலம் வழங்குதல்.

**4.1.10 சமூகத் தணிக்கை**

அலுவலர்களோ, வெளி அமைப்புகளோ அல்லாது பொது மக்களே செய்யும் தணிக்கை, சமூகத் தணிக்கை ஆகும். நிதி செலவினம் மட்டுமல்லாது, திட்டத்தின் செயல்முறை மற்றும் சமூக ஏற்ற தாழ்வு, பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்தும் ஆய்வு செய்வது சமூகத் தணிக்கையின் நோக்கமாகும். சமூகத் தணிக்கை ஒரு தகவல் தொடர்பு மற்றும் கல்விக்கான கருவி ; வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை அமல்படுத்த உதவும். சமூகத் தணிக்கை வளர்ச்சித் திட்டங்களில் எல்லா நிலைகளிலும் (திட்டமிடுதல், வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்) மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த உதவும். சமூகத் தணிக்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தினால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில், கிராம சபை ஆறு மாதத்திற்கொருமுறை சமூகத் தணிக்கை செய்ய



வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதோடு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட தணிக்கை விதிகள் 2011 சமூகத் தணிக்கையை சீராக செய்வதற்கான நடைமுறைகளை நிர்ணயித்துள்ளது.

**தோற்றுவித்தல்**

1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011ன் அடிப்படையில் தமிழக அரசாணை (நிலை எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை) நாள் 27.07.2012ன் படி, சுதந்திரமாக செயல்படக்கூடிய சமூகத் தணிக்கை அலகு ஒன்று உருவாக்க உத்திரவிடப்பட்டது. அலகிற்குத் தேவையான அலுவலர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புகளையும் அரசு நிர்ணயம் செய்துள்ளது.
2. சமூக தணிக்கை அலகில், ஒரு இயக்குநர் (கூடுதல் இயக்குநர் அளவில்) இரு இணை இயக்குநர்கள் மற்றும் ஒரு உதவி இயக்குநர் பணியில் உள்ளனர். மற்ற அனைத்துப் பணியாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
3. தமிழக அரசு, அரசாணை (நிலை) எண்.125: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21.12.2012ல் தமிழ்நாடு சமூகத் தணிக்கைச் சங்கம் உருவாக்கிடவும் மற்றும் அதற்கான உப விதிகளுக்கு ஒப்புதல் வழங்கியும் ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு சமூகத் தணிக்கைச் சங்கம் 2013 ஜனவரி 9 ஆம் தேதி தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சமூகத் தணிக்கை சங்கத்தின் முதல் ஆளுமைக் குழு கூட்டம் 2013 பிப்ரவரி 19ஆம் தேதி அன்றும், 2 வது ஆளுமைக் குழு கூட்டம் 2014 ஜுலை 23ஆம் தேதி அன்றும், 3வது ஆளுமைக் குழு கூட்டம் 2015 ஜுலை 27ஆம் தேதி அன்றும் கூட்டப்பட்டு நிதி வரவு செலவினம் தொடர்பாகவும், கொள்கை ரீதியான முடிவுகள், வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாகவும் முடிவுகள் எடுக்கப்பட்டது. 3வது ஆளுமைக் குழு கூட்டத்தில் 2015 –16 ஆம் ஆண்டிற்கான ரூ.49.76 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**சமூகத் தணிக்கை செயல்முறை**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், கிராம சபை சமூகத் தணிக்கை செய்வதற்கு உதவியாக 5 கிராம சமூக தணிக்கையாளர்களை தேர்வு செய்ய, குறைந்தது 25 நாட்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை புரிந்த 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்ட பிறகு, மேற்கண்ட 5 சமூகத் தணிக்கையாளர்கள் தாங்கள் குடியிருக்கும் கிராம ஊராட்சி அல்லாது வேறு ஒரு கிராம ஊராட்சியில் சமூகத் தணிக்கை செய்வதற்கு உதவுவார்கள். அவர்கள் கிராம ஊராட்சி / வட்டார அளவில் உள்ள பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்களை சரிப்பார்ப்பார்கள். பணியிடங்களுக்குச் சென்று அளவீடு செய்து, அளவீட்டு புத்தகத்தில் உள்ள அளவீட்டுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். தொழிலாளர்களின் வீட்டிற்குச் சென்று வருகை பதிவேட்டில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவார்கள். பிறகு சமூகத் தணிக்கை அறிக்கையினை தயார் செய்து, கிராம சபையில் சமர்ப்பிப்பார்கள். சமூகத் தணிக்கை பணியாளர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கை பணி ஆறு மாதத்திற்கு ஒருமுறை நடைபெற ஒருங்கிணைப்பு பணி மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்.

**திறன் வளர்த்தல்**

தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கம், சமூக தணிக்கையின் முக்கியத்துவம், அவசியம் மற்றும் நடைமுறை ஆகியவை அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சியினை இத்துறை சார்ந்த அனைத்து அலுவலர்கள், கிராம ஊராட்சி தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு அளித்துள்ளது. இது வரை 5 பயிற்சி சுற்றுகள் மூலம் 36,828 பங்குதாரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அக்டோபர் 2014 முதல் டிசம்பர் 2014 வரை 81,107 நபர்களுக்கு சமூகத் தணிக்கைக் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக சமூகத் தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டது. 23.07.2014–ல் நடைபெற்ற

ஆளுமைக் குழு கூட்டத்தில் இப்பயிற்சியானது மண்டல ஊரக பயிற்சி நிறுவனத்தின் மூலம் அளித்திடலாம் என முடிவெடுக்கப்பட்டது.

சமூகத் தணிக்கை சங்கமானது வெளியிட்ட 6 பயிற்சி கையேடுகளில் 2 பயிற்சியாளர்களுக்கான பயிற்சிக்காகவும், 1 கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சிக்காகவும், 1 கிராம ஊராட்சி செயலாளர்களுகான பயிற்சிக்காகவும், 1 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களுக்கான பயிற்சிக்காகவும், தயாரிக்கப்பட்டு, பயிற்சியில் பங்கு பெற்றவர்களுக்கு அளிக்கப்பட்டது. திட்டத்தின் பங்குதாரர்களை விழிப்புணர்வு ஏற்படுத்திட துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

**மாதிரி சமூகத் தணிக்கை**

தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கம், இதுவரை 19 மாவட்டங்களில், 19 மாதிரி சமூகத் தணிக்கைகள் மேற்கொண்டு முக்கிய குறைபாடுகளினை கண்டறிந்து, திட்டத்தினை செயல்படுத்தும் முகமைகளுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவித்துள்ளது. இது போன்ற சமூகத் தணிக்கைகளின் விளைவாக, தொழிலாளர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளது. மேலும் திட்டம் பற்றிய விழிப்புணர்ச்சி அதிகரித்துள்ளது. வேலைக்கான அளவீடு மேம்பாடு செய்யப்பட்டு, சொத்துக்களின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பணித்தள மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இணைய தளத்தில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத



ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளின் பராமரிப்பு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி அளவில் பணியிட வசதிகள் அளிக்க நிர்வாக செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலைக்கான கூலி வழங்குவதில் ஏற்படும் தாமதம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. கூடுதல் பொறியியல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அலுவலர்கள் மத்தியில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையின் அவசியம் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**சமூகத் தணிக்கை செயல்பாடுகள்**

சமூகத் தணிக்கை பணியானது 24.01.2015 முதல் மேற்கொள்ளப்பட்டு, 2014 –15 ஆம் நிதியாண்டில் 1,248 எண்ணிக்கையிலான சமூகத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2015 –16 ஆம் நிதியாண்டில் 4,202 எண்ணிக்கையிலான சமூகத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு சமூகத் தணிக்கை மேற்கொள்ள செலவினமாக ஒரு ஊராட்சிக்கு ரூ.19,905 வீதம் மாவட்ட வள அலுவலர்களுக்கு ஒவ்வொரு சுற்றுக்கும் தொகை விடுவிக்கப்படுகிறது. மாவட்ட வள அலுவலர்கள் மாவட்டம் முழுவதும் பணிகளை கண்காணிப்பு செய்ய வேண்டியுள்ளதால் வாகன வசதி வழங்கப்பட்டுள்ளது.

தணிக்கை மேற்கொள்ள ஒரு ஊராட்சிக்கு – ஐந்து ஊராட்சி நிலை தணிக்கை அலுவலர் (V.P.R.P.) என்பதை ஊராட்சியின் மொத்த ஆண்டு செலவினத்தை பொறுத்து

கீழ்க்கண்டவாறு ஊராட்சி நிலை தணிக்கை அலுவலர்களை நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

| **ஆண்டு செலவினம் (ரூபாய் லட்சத்தில்)** | **அனுமதிக்கப்பட்ட ஊராட்சி நிலை தணிக்கையாளர்கள்** |
|---|---|
| 10 லட்சம் மற்றும் அதற்கு குறைவு | 3 நபர்கள் |
| 10 லட்சம் முதல் 25 லட்சம் வரை | 4 நபர்கள் |
| 25 லட்சம் முதல் 50 லட்சம் வரை | 5 நபர்கள் |
| 50 லட்சம் முதல் 75 லட்சம் வரை | 6 நபர்கள் |
| 75 லட்சம் முதல் 100 லட்சம் வரை | 7 நபர்கள் |
| 100 லட்சத்திற்கு மேல் | 8 நபர்கள் |

- ❖ சமூகத் தணிக்கை சங்கத்தின் பணியாளர்களான மாவட்ட வள அலுவலர்கள், வட்டார வள அலுவலர்கள் மற்றும் உதவி அலுவலர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- ❖ தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கத்திற்காக தனியான வலைத்தளம் உருவாக்கப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் மாவட்டங்களில் உள்ள புள்ளி விவரங்கள் வலைத்தளத்தில் நேரடியாக பதிவு செய்யப்படும்.
- ❖ தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கத்தின் நாட்காட்டி தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் சமூக தணிக்கைக்கு முன்னதாகவே அனுப்பப்பட்டுள்ளது.

**சமூகத் தணிக்கையின் தாக்கம்**

திட்டத்தின் பயனாளிகளுக்கும் திட்டத்தினை செயல்படுத்துபவர்களுக்கும் சமூகத் தணிக்கையானது சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. திட்டத்தின்



பங்குதாரர்களுக்கு சமூகத் தணிக்கையின் முக்கியத்துவம் உணர வைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை அலகின் வெற்றிகரமான முயற்சியானது பயனாளிகளுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகும். திட்டத்திற்கான வட்டார அளவில் மற்றும் ஊராட்சி அளவில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவம் உணர வைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை கிராம சபை கூட்டத்தினால் பொது மக்கள் தங்களது உரிமைகளையும் சட்ட ரீதியான பயன்களையும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**4.2. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் (Indira Awass Yojana) ஒரு மத்திய அரசு திட்டமாகும். இத்திட்டம் 1997–98 ஆம் ஆண்டு முதல் தனித்திட்டமாக உருவாகியது. கிராமப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், வீடில்லாத ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித்தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள், தேர்வு செய்யப்படுகின்றனர்.

இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மொத்த வீடுகளில் 15 விழுக்காட்டினை சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2014–15 வரை 75:25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒவ்வொரு வீடும் 210 சதுர அடி பரப்பளவில் கட்டப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஒரு வீட்டுக்கான அலகுத்தொகை ரூ.45,000 ஆக இருந்தது. இதில் மத்திய அரசின் பங்குத்தொகை ரூ.33,750 ஆகவும், மாநில அரசின் பங்குத்தொகை ரூ.11,250 ஆகவும் இருந்தது. கான்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ.55,000 வழங்கி, ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1 இலட்சமாக இருந்தது. அதன்படி, தமிழ்நாட்டில் இந்திரா நினைவுக்குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை 2011–12 மற்றும் 2012–13



ஆண்டுகளில் ரூ.1 இலட்சமாக இருந்தது. இதில் மாநில அரசின் பங்குத்தொகை மட்டும் ரூ.66,250 (66.25%), மத்திய அரசின் பங்குத்தொகை ரூ.33,750 (33.75%) ஆகும். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் அலகுத்தொகையினை மத்திய அரசு 2013–14ம் ஆண்டு முதல் ரூ.45,000லிருந்து ரூ.70,000ஆக உயர்த்தியுள்ளது. அதன்படி தமிழக அரசும் கான்கிரீட் கூரை அமைப்பதற்கான தொகை ரூ.50,000 ஐயும் சேர்த்து இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீட்டிற்கான அலகுத் தொகையினை அரசு ஆணை எண். 99 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை நாள் 2.8.2013 மூலம் ரூ. 1.20 லட்சமாக உயர்த்தியுள்ளது. எனவே 2013–14 –ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட வீட்டின் அலகுத் தொகை ரூ.1.20 லட்சம் ஆகும். இதில் மாநில அரசின் பங்கு தொகை ரூ.67,500 (56.25%) மற்றும் மத்திய அரசின் பங்கு ரூ.52,500 (43.75%). 2013–14 ஆம் ஆண்டில், 88,436 வீடுகள் ரூ. 1061.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. 2014–15 ஆம் ஆண்டில் ரூ.641.15 கோடி மதிப்பீட்டில் 53,429 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் வழக்கமான ஒதுக்கீட்டிற்கு கூடுதலாக, சிறப்பு திட்டத்தின் கீழ் 34,380 வீடுகள் ரூ.412.56 கோடி ஒதுக்கீட்டில் கடலூர் (22,707 வீடுகள்) மற்றும் விழுப்புரம் (11,673 வீடுகள்) மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. வழக்கமான இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட வீடுகளைப்

போன்றே, இந்திரா நினைவு குடியிருப்பு சிறப்பு ஒதுக்கீடு திட்டத்தின் கீழும் வீடு ஒன்றுக்கு ரூ. 1.20 இலட்சம் அலகுத் தொகையில் 210 சதுர அடி பரப்பளவில் வீடுகள் கட்டப்படுகின்றன.

2015–16ம் ஆண்டில் ரூ. 641.15 கோடி மதிப்பீட்டில் 53,429 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 2015–16ம் ஆண்டு முதல் மத்திய மாநில அரசுகளின் பங்குத் தொகை விகிதம் 50:50 என மாற்றப்பட்டுள்ளது. இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் ஒரு வீட்டிற்கான அலகு தொகை ரூ.70000 ல் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.35000 (50%) மத்திய அரசின் பங்குத் தொகை ரூ35000 (50%) ஆகும். காங்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ.50000 வழங்குவதால், தமிழ்நாட்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ஒரு வீட்டிற்கான மொத்த அலகுத் தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். இதில், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.85000 (70.83%) மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.35,000 (29.17%). இருப்பினும் மத்திய அரசின் அலகுத் தொகை தமிழக அரசு பின்பற்றும் அலகுத் தொகையை விட குறைவாகவே உள்ளது. மேலும், 2015–16ம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக ஈடு செய்யப்படும்.

மேலும், 2015–16ம் ஆண்டில், ரூ.16,470 மதிப்பிற்கான 90 மனித சக்தி நாட்களை ஒரு வீட்டிற்கு வழங்குவதன்



மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தை ஒருங்கிணைப்பு செய்ய அரசாணை எண். 59 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை நாள்–15.4.2015ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

### 4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நிரப்புவதே நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசு, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினை ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக 2011–12–ம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர்களுக்கும், 18 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் மற்றும் 2 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்பு பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

இத்திட்டத்தின் கீழ் 2014–15–ம் ஆண்டில் ரூ.295 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4.**

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2014–15–ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகள் விபரம்**

| வ.எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1. | கட்டிடங்கள் | 869 | 69.71 |
| 2. | சாலைகள் | 1141 | 86.15 |
| 3. | குடிநீர் வழங்கல் | 586 | 16.58 |
| 4. | இதர பணிகள் | 1431 | 79.82 |
| **மொத்தம்** | | **4,027** | **252.26** |

### 4.4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY)

#### 4.4.1. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VIII (2012–13)

மொத்தம் 3090.90 கி.மீ நீளமுள்ள 1,295 சாலைப் பணிகள் மற்றும் 45 பாலங்கள் ரூ. 1,128.14 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் ரூ. 108.95 கோடி மாநில அரசின் பங்குத் தொகையும் அடங்கும். மேலும், மேற்கண்ட சாலைப்பணிகள் முடிந்தவுடன் 5 வருடம் தொடர்



பராமரிப்பிற்காக மாநில அரசு ரூ. 65.81 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

#### 4.4.2. பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் பகுதி IX (2014–15)

மொத்தம் 956.03 கி.மீ நீளமுள்ள 401 சாலைப் பணிகள் மற்றும் 6 பாலங்கள் ரூ.357.12 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

#### 4.4.3. பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் பகுதி IX (2014–15–கூடுதல்)

1,356 கி.மீ. நீளமுள்ள 622 சாலைகள் மற்றும் 22 பாலங்களுக்கு மொத்தம் ரூ. 787.26 கோடி தோராய மதிப்பீட்டில் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான பிரேரணை மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 4.5 பதிமூன்றாம் நிதி ஆணைய மானியம் (13th Finance Commission Grant)-சாலைப் பணிகள்

அரசு ஆணை (நிலை) எண். 11, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (H.N.I) துறை, நாள் 23.01.2012ன்படி சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பிற்கான மானியம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு இடையே 2:1 என்ற விகிதப்படி பிரித்தளிக்கப்படுகிறது. இந்த நிதி ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை பராமரித்து புதுப்பிக்க பயன்படுத்தப்படுகிறது.

**அட்டவணை 4.5.**

**2011–12ல் இருந்து பதிமூன்றாம் நிதி ஆணைய மானியத்தில் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்**

| ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 2011–12 | 923 | 1,778.48 | 143.00 |
| 2012–13 | 810 | 1,659.14 | 151.00 |
| 2013–14 | 752 | 1,535.68 | 159.00 |
| 2014–15 | 842 | 1,599.83 | 169.00 |
| **மொத்தம்** | **3,327** | **6,573.13** | **622.00** |

## 4.6. தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்)

அனைத்து வீடுகளுக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திடவும், சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் மத்திய அரசால் "முழு சுகாதார இயக்கம்" 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, முதலில் கடலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், பின்னர் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டமானது, "நிர்மல் பாரத் அபியான்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு சுகாதார மேம்பாட்டின் செயல்பாடுகளை விரைவுபடுத்தி நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும் தூய்மை கிராமங்களாக மாற்றி, 2022ம் ஆண்டுக்குள் திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கமற்ற நாடாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதன்



மூலம் வழங்கப்படும் உதவித் தொகையும் சேர்த்து தனிநபர் இல்லக் கழிப்பறையின் அலகுத் தொகை ரூபாய் 10,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்களுக்கு மட்டும் விரிவுபடுத்தப்பட்டது.

மகாத்மா காந்தியடிகளின் 150-வது பிறந்த நாளில் அவருக்குப் பொருத்தமான அஞ்சலி செய்யும் வகையில் அனைத்து முயற்சிகளையும் முடுக்கிவிட்டு உலகளாவிய சுகாதார வசதிகள் முழுமையாக அடைவதன் மூலம் தூய்மை பாரதம் என்ற நிலையை 2019ம் ஆண்டிற்குள் எய்த வேண்டி, மத்திய அரசால் 2014ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ம் நாள் முதல், நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் தொடர்ச்சி திட்டமாக தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) தொடங்கப்பட்டது. குறிக்கோள்களை அடைவதைப் பாதிக்கும் முக்கிய பிரச்சனைகளை மையப்படுத்தியும், முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள சிக்கல்களை நீக்கி நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைய முயற்சி செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

**4.6.1. திட்டத்தின் நோக்கங்கள்**

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி ஊரகப் பகுதிகளில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடு செய்தல்.

ஆ) 2.10.2019க்குள் தூய்மை பாரதத்தின் இலக்கினை எய்த ஊரகப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டின் செயல்பாடுகளை விரைவு படுத்துதல்.

இ) நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் ஊக்குவித்தல்.

ஈ) நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்.

உ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்தத் தேவையான இடங்களில் அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை, சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.



**4.6.2. தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்**

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். முழு சுகாதார இயக்கம் / நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னர் செயல்படுத்தப்பட்ட பள்ளிக் கழிப்பறை மற்றும் அங்கன்வாடி கழிப்பறை ஆகியவற்றைக் கட்டுதல் தற்போது முறையே கல்வித் துறை, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை தொடர்பான அமைச்சகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

**அ) தனி நபர் இல்லக் கழிப்பறை**

முறையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் மற்றும் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பத்திற்கு தனி நபர் இல்லங்களில் கழிப்பறை கட்ட அலகுத் தொகை ரூ.12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. பயனாளியின் பங்களிப்பு இல்லாமல் இந்த தொகை முழுவதும் தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ. 9,000 மற்றும் மாநில அரசு

பங்குத் தொகையாக ரூ. 3,000 வழங்கப்படுகிறது. மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் கட்டப்படும் அனைத்து புதிய வீடுகளிலும் சுகாதார வசதி உள்ளடக்கியதாக அமைக்கப்பட வேண்டும்.

2013–14 மற்றும் 2014–15ம் ஆண்டுகளில், 6,91,564 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. தூய்மை பாரத இயக்க (ஊரகம்)–த்தின் கீழ் 2015–16ம் ஆண்டில், ரூ. 926.14 கோடி நிதி ஒதுக்கீட்டில், 7,71,781 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட, அலகுத் தொகை ரூ. 12,000 ஆகும்.

2015–16ம் ஆண்டில் 7.5 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

**(ஆ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை**

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், திட மற்றும் திரவக் கழிவுக் மேலாண்மை திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த தனிநபர் இல்ல எண்ணிக்கைக்கு ஏற்ப, கணக்கிடப்படும்.



**(இ) சமூக சுகாதார வளாகங்கள்**

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள் கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் அமைத்திடலாம். ஒவ்வொரு சமூக சுகாதார வளாகத்திற்கும் அதிகபட்சமாக ரூ. 2 லட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும். மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**4.7 நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்**

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014ல் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, மாதிரி கிராமங்களில் செயல்படுத்தி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில் 3000–5000 வரையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் 1000–3000 மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு

நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின் / கணவனின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும் என்பதும், அதில் ஒன்று 2016 க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024–க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.



அரசு தலைமை செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி 2) துறை நாள் 13.02.2015ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும் புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளின் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும் வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள் / மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

## 4.8. தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம்

இயற்கைக் கழிவுகளை சக்தியாக மாற்றம் செய்து முழுமையாக பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. பொதுப் பிரிவினருக்கு ஒரு கன மீட்டருக்கு ரூ.5,500 மற்றும், 2–6 கன மீட்டருக்கு ரூ.9,000 வீதம் மானியம் வழங்கப்படுகிறது, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு ஒரு கன மீட்டருக்கு ரூ.7,000 மற்றும் 2–6 கன மீட்டருக்கு ரூ.11,000 என மானியம் வழங்கப்படுகிறது. மேலும் கழிவறைகளுடன் கூடிய கரிம வாயுக் கலன்களுக்கு கூடுதலாக ரூ.1,200 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

2014–15–ம் நிதி ஆண்டில் **500** கரிம வாயு கலன்கள் அமைத்திட செயல்திறன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, **342** கலன்கள் முடிக்கப்பட்டுள்ளது.

## 4.9. சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பு

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் மூலமாக 2011–ஆம் ஆண்டு சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பினை தேசிய அளவில் துவக்கியுள்ளது. ஊரக மற்றும் நகர்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் குடும்பங்களை கண்டறிய இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. சாதி மற்றும் மதம் தொடர்பான அனைத்து புள்ளி விவரங்களும் இக்கணக்கெடுப்பில்



சேகரிக்கப்பட்டாலும் சாதி, மதம் தொடர்பான விவரங்கள் மற்ற விவரங்களைப் போல பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்படாமல் இந்திய அரசின் பொது பதிவாளரால் சமூக பொருளாதார புள்ளி விவரங்களை தொகுப்பதற்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படும்.

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் நிதியினைக் கொண்டு மாநில நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இக்கணக்கெடுப்பு பணியானது, விவரங்கள் எழுத்துப்பூர்வமாக பதியப்படாமல் பெங்களூரிலுள்ள மத்திய அரசின் நிறுவனமான பாரத மின்னணு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கைக்கணினியில் நேரடியாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்ககம் உதவி உடன், தேசிய மக்கள் தொகை பதிவேட்டில் சேகரிக்கப்பட்டுள்ள வீட்டு விவரப் பட்டியல் கைக்கணினிகளில் கணக்கெடுப்பு தொடங்குவதற்கு முன் பதிவு செய்யப்பட்டன. மாநில அரசால் நியமிக்கப்பட்ட கணக்கெடுப்பாளர் மற்றும் பாரத மின்னணு நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட புள்ளி விவரப் பதிவாளர் (Data Entry Operator) ஆகியோர் இக்கணக்கெடுப்பு பணியினை களத்தில் ஒருங்கிணைந்து மேற்கொண்டனர். இக்கணக்கெடுப்புப் பணிக்கு மாவட்டம் முழுமைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், முதன்மை சமூக பொருளாதார சாதிக்கணக்கெடுப்பு அலுவலராவார். இவரது கண்காணிப்பின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

தனிநபர் மற்றும் வீடுகளில் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட விவரங்களில், தொழில், கல்வி, உடல் ஊனம், மதம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவரம், சாதி / பழங்குடியினரின் பெயர், வேலை வாய்ப்பு, வருமானம் மற்றும் வருமான ஆதாரம், சொத்துக்கள், வீட்டு வசதி, நீண்ட / குறுகிய நாட்கள் பயன்படும் நுகர்வோர் பொருட்கள் மற்றும் நிலம் ஆகியவை அடங்கும். மேலும், மேற்படி கணக்கெடுப்பானது வீட்டு வசதி குறித்த விவரங்கள், பணி விவரங்கள், கல்வி நிலை, வீட்டு உறுப்பினர்களின் மாற்றுத்திறன் மற்றும் நில உடமை அளவு விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாட்டில் இப்பணியினை மேற்கொள்ள மத்திய அரசு ரூ.89.82 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. கணக்கெடுப்பு, மேற்பார்வையாளரின் சரிபார்ப்பு மற்றும் புள்ளி விவரங்களில் திருத்தங்கள் செய்தல் ஆகிய பணிகள் முடிவடைந்துவிட்டன. வரைவுப் பட்டியல் வெளியிடப்பட்டு, கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் தொடர்பான பணிகளும் முடிக்கப்பட்டு, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரால் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. சமூக, பொருளாதார புள்ளி விவரங்களின் அடிப்படையில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களைக் கண்டறிவதற்கான வரைமுறைகளை வகுக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



## 5. மனித வள மேம்பாடு

## 5. மனித வள மேம்பாடு

மனித வளம் என்பது ஒவ்வொரு துறைக்கும் மிகவும் இன்றியமையாத அமைப்பாகும். துறையின் பணியாளர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு அவர்களது நலனுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அதிக முன்னுரிமை அளிக்கிறது. அவர்களது உரிமைகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வது பணியாளர்களின் ஆற்றலை மேம்படுத்தி துறை திறம்பட செயல்பட வழிவகுக்கும்.

### 5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மொத்தம் 1,492 அரசிதழ் பதிவு பெற்ற பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 5.1.**

**வகைவாரியான பணியாளர்கள் விவரம்**

அரசுப் பணியாளர்கள் – அரசிதழ் பதிவு பெற்றவர்கள்

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் | 21 | ரூ.37400-67000+8800 தர ஊதியம் |
| 2. | இணை இயக்குநர் | 88 | ரூ.15600-39100+7600 தர ஊதியம் |
| 3. | உதவி இயக்குநர் | 407 | ரூ.15600-39100+5400 தர ஊதியம் |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 976 | ரூ.9300-34800+5100 தர ஊதியம் + 1000 சிறப்பு படி |
| மொத்தம் | | 1,492 | |



காலியாக உள்ள கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு உத்தரவிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களின் உரிமைகள், பதவி உயர்வு உள்பட, உரிய காலத்தில் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 17 கூடுதல் இயக்குநர்களும் இதர துறைகளில் 4 கூடுதல் இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இணை இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 74 இணை இயக்குநர்களும் இதர துறைகளில் 14 இணை இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- உதவி இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 362 உதவி இயக்குநர்களும் இதர துறைகளில் 2 உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

500 ஊராட்சிகளுக்கு மேல் உள்ள விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கூடுதலாக 5 உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் 5 உதவி இயக்குநர் (தணிக்கை) பணியிடங்கள் தோற்றுவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அலுவலகங்களுக்கு உதவி இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.2. பொறியியல் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பிரிவில் மொத்தம் 5,314 பொறியியல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**அட்டவணை 5.2.**

**வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப் பட்ட பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 1 | ரூ.37400-67000+ தர ஊதியம் ரூ. 8700 |
| 2. | செயற்பொறியாளர் | 47 | ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.6600 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 203 | ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.5400 |
| 4. | உதவிப் பொறியாளர் | 956 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100 |
| 5. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 34 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100 |
| 6. | இளநிலைப் பொறியாளர் | 320 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4400 |
| 7. | பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 2604 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4200 |
| 8. | சாலை ஆய்வாளர் | 1149 | ரூ.5200-20200+ தர ஊதியம் ரூ.2400 |
| **மொத்தம்** | | **5,314** | |

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் இதர துறைகளில் இருந்து மாற்றுப் பணியில் பணியமர்த்தப்பட்டு வந்துள்ளது. முதன்முறையாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையை சேர்ந்த ஒரு



செயற்பொறியாளருக்கு கண்காணிப்புப் பொறியாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 39 செயற்பொறியாளர்களும் இதர துறைகளில் 7 செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- உதவி செயற்பொறியாளர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 183 உதவி செயற்பொறியாளர்களும், இதர துறைகளில் 18 உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 794 உதவி பொறியாளர்களும், 174 இளநிலை பொறியாளர்களும், 34 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 1,775 பணிப்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், அரசாணை (நிலை) எண். 49 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை (இ3) நாள் 31.3.2015ல் சாலை ஆய்வாளர் நிலை–2 மற்றும் சாலை ஆய்வாளர் நிலை–1 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சாலை ஆய்வாளர் என ஆணையிடப்பட்டுள்ளது. தற்பொழுது 673 சாலை ஆய்வாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணி புரிந்து வருகின்றனர்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2014-15ம் ஆண்டில் 40 உதவிப்

பொறியாளர்களை (நேரடி நியமனம்) நிரப்ப உத்தரவிட்டு அதன்படி 40 உதவிப் பொறியாளர்கள் பல்வேறு மாவட்டங்களில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- கட்டட மையங்களில் பணிபுரிந்த 10 திட்டப் பொறியாளர்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவிப் பொறியாளர்களாக ஈர்த்துக் கொள்ள அரசு உத்தரவிட்டு, அதன்படி 10 கட்டட மைய திட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்களாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பல்வேறு மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**5.3. முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்**

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், மாநில திட்டக்குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்



(TAHDCO), தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகம் (TANUVAS) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), பேரூராட்சிகள் இயக்ககம், மாநில நலவாழ்வு சங்கம் (TNHSP), தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை (NRRDA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இது இத்துறையில் அவரது பணிகளை திறம்பட செய்ய அனுபவம் மற்றும் பட்டறிவை வழங்குகிறது.

**5.4. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு**

**5.4.1. பதவியின் விவரம்**

அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் அப்பணியிடங்களின் ஊதிய விகிதம் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.3.**

**வகைவாரியான அரசுப் பணியாளர்களின் விவரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| அ. அரசுப் பணியாளர்கள் | | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3911 | ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4800+ PP ரூ.500 |
| 2 | உதவியாளர் | 5563 | ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2800 |
| 3 | இளநிலை உதவியாளர் | 3137 | ரூ5200-20200 + தர ஊதியம் ரூ.2400 |

| | | | |
|---|---|---|---|
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 182 | ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2800 |
| 5 | தட்டச்சர் | 1042 | ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2400 |
| 6 | ஊர்தி ஓட்டுநர் | 899 | ரூ.5200-20200 + தர ஊதியம் ரூ.2400 |
| 7 | பதிவறை எழுத்தர் | 137 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ.1400 |
| 8 | அலுவலக உதவியாளர் | 716 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ.1300 |
| 9 | இரவு காவலர் | 128 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ.1300 |
| 10 | மசால்ஜி | 14 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ.1300 |
| ஆ) உள்ளாட்சிப் பணியாளர்கள் | | | |
| ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் | | | |
| 1 | ஊர்தி ஓட்டுநர் | 770 | ரூ5200-20200 + தர ஊதியம் ரூ.2400 |
| 2 | பதிவறை எழுத்தர் | 387 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ1400 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1521 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ.1300 |
| 4 | இரவு காவலர் | 377 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ.1300 |
| 5 | மசால்ஜி | 9 | ரூ.4800-10000+ தர ஊதியம் ரூ.1300 |
| இ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள் | | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12524 | ரூ.2500-5000 தர ஊதியம் ரூ.500 |
| 2 | துப்புரவு பணியாளர்கள் | 25155 | ரூ.1300-3000 தர ஊதியம் ரூ.300 (3 ஆண்டுகள் பணிமுடித்தவர்கள்) ரூ.2000 தொகுப்பூதியம் + அகவிலைப்படி ரூ.40/- ஒவ்வொரு அரையாண்டிற்கும் (இதரர்) |
| 3 | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் | 35548 | ரூ.2000 தொகுப்பூதியம் + அகவிலைப்படி ரூ.40/- ஒவ்வொரு அரையாண்டிற்கும் |



**5.5. காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்ட விவரம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நேரடி நியமனம் மூலம் 2011–12 முதல் 2014–15 வரை மொத்தம் 4,375 பணியிடங்கள் கீழ்வருமாறு நிரப்பப்பட்டுள்ளன.

- உதவியாளர்கள் – 1540
- இளநிலை உதவியாளர்கள் – 1782
- தட்டச்சர்கள்/சுருக்கெழுத்து தட்டச்சர்கள்– 1053

பல்வேறு பதவிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குறித்த நேரத்தில் அடுத்த கட்ட பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 2011–12 முதல் 2014–15 வரை, 700 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், 770 உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், 1230 இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் உதவியாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். மேலும் கருணை அடிப்படையில் நியமனம் மூலம் 406 நபர்கள் இளநிலை உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். 105 பதிவறை எழுத்தர் / அலுவலக உதவியாளர் / இரவுக் காவலர் பணியிலிருந்தவர்கள் 10% ஒதுக்கீட்டின் கீழும் 483 ஊராட்சி செயலர்கள் 20% ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

## 5.6. ஊராட்சி செயலர்கள் மற்றும் ஊராட்சியின் இதர ஊழியர்களுக்கான சலுகைகள்

- பெண் ஊராட்சி செயலர்களுக்கு மகப்பேறு விடுப்பு 180 நாட்கள் வரை நீட்டித்து அரசாணை எண். 148 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள். 27.11.2014—ல் ஆணையிடப்பட்டுள்ளது
- கிராம ஊராட்சி செயலர்கள், துப்புரவுப் பணியாளர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மின்னணு பரிமாற்ற முறைமூலம் ஊதியம் வழங்குவது ஜூன் 2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதனைக் கண்காணிப்பதற்கென தனிப்பட்ட இணையவழி மென்பொருள் உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.
- மேலும் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்கள் குறித்த விவரங்கள் tnrd.gov.in என்ற வலைதளத்தில் பதியப்பட்டு விவரங்கள் உறுதி செய்யப்படுகிறது.
- அரசாணை எண் 42, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (இ5) துறை நாள் 24.3.2015—ன் படி கிராம ஊராட்சி செயலர்கள் ஓய்வு பெறும்போது பெறும் சிறப்பு ஓய்வு ஊதியம் ரூ.700 லிருந்து ரூ.1000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



## 5.7. திறன் மேம்பாடு

பயிற்சியானது செயலாக்கம் அல்லது திட்டத்தின் முதுகெலும்பு போன்றதாகும். அரசின் திட்டமானது வெற்றி பெற திறன் மேம்படுத்துவதிலும் மற்றும் சிறப்பாக செயல்படுத்துவதிலும் சார்ந்துள்ளது. பயிற்சி என்பது, தொடர்ச்சியாக பயிற்சி பெறுபவருடைய தனிதிறன், அறிவு, திறமை, பயிற்சி பெறுபவருடைய திறமை, சக்தி, செயல்படும் திறனை மேம்படுத்துதல் ஆகியவை பயிற்சி மூலமாக மேம்படுகிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையினைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தத்தம் கடமைகளையும், பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றிடவும், ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களை செவ்வனே செயல்படுத்திடவும் திறன் மேம்பாடானது ஒரு முக்கிய கருவியாகும். மாநில அளவில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்தியவிஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய 5 மண்டலங்களில் அமைந்துள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 5.4.
## மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் அடிப்படை விவரம்

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவக்க ஆண்டு | நிறுவனத்தின் பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|
| 1. | ச.வி.நகரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர்,கடலூார், திருவண்ணாமலை | 1956 | 34.59 |
| 2. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம்,தர்மபுரி,வேலுார் | 1958 | 55.05 |
| 3. | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை | 1954 | 20.92 |
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்துார், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலுார், அரியலுார், திருப்பூர் | 1972 | 71.89 |
| 5. | டி.கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி | 1948 | 49.00 |

### 5.7.1. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் பயிற்சி பங்கேற்பாளர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் சார்பு துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



### 5.7.2. பயிற்சி திட்டங்கள்

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் மற்றும் தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் திட்டங்கள், ஊரக சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, கணினி மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகிய பொருள்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை தவிர தொழில்நுட்பப் பணிகளான சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் முதலான பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனமும் குறைந்தபட்சம் 5,000–லிருந்து அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு பயிற்சி அளித்திடும் திறன்மிக்கது.

### 5.7.3. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கூடுதல் இயக்குநர்/ இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்களால் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### 5.7.4. நிதி

ஊதியம் மற்றும் ஊதியம் சாராத வழக்கமான செலவினங்களுக்கு தமிழ்நாடு அரசு, ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்குகிறது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஒவ்வொரு மண்டல

ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது.

**அட்டவணை 5.5.**

**2014–15ஆம் ஆண்டில் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் எய்தப்பட்ட பயிற்சி சாதனைகள்**

| வ. எண். | பயிற்சியின் பெயர் | அணிகள் | | | பயிற்சியாளர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | % | இலக்கு | சாதனை | % |
| 1. | வழுமையான பயிற்சி | 290 | 300 | 103 | 8700 | 8289 | 95 |
| 2. | கணினி பயிற்சி | 230 | 209 | 91 | 5750 | 4677 | 81 |
| 3. | சமூக தணிக்கை | 490 | 455 | 93 | 102262 | 85737 | 84 |
| 4. | தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 17 | 17 | 100 | 517 | 558 | 108 |
| 5. | இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் | 9 | 8 | 89 | 300 | 259 | 86 |
| 6. | ராஜீவ் காந்தி சஷக்திகரன் அபியான் | 26 | 15 | 58 | 1228 | 428 | 35 |
| 7. | ஒன்றியமேற்பார்வையாளருக்கு பாரத் நிர்மல் அபியான் சம்பந்தமான தொழில்நுட்ப பயிற்சி | 1 | 1 | 100 | 30 | 32 | 107 |
| 8. | தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின ஊராட்சி தலைவர்களுக்கு பயிற்சி | 36 | 34 | 94 | 2074 | 1825 | 88 |
| 9. | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களுக்கான பயிற்சி | 18 | 18 | 100 | 602 | 567 | 94 |
| மொத்தம் | | 1,117 | 1,057 | 95 | 1,21,463 | 1,02,372 | 84 |

**2015–16**ம் ஆண்டில் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் **25,000** நபர்களுக்கு ரூ.**605.54** இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.7.5. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனமானது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக **1990–**ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில்



தனது சொந்த இடத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது.

### 5.7.6. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் குறிக்கோள்கள்

பல்வேறு நிலையிலான பயிற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதும், அவர்களின் தனிநபர் திறமையை உயர்த்துவதும் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை மாற்றுவதின் மூலம் அரசின் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த வைப்பதே இந்நிறுவனத்தின் முதன்மை குறிக்கோளாகும்.

### 5.7.7. ஆசிரியர்கள் / விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்கள்

இந்நிறுவனத்தில் பயிற்சிகள் நடத்துதல் மற்றும் அது சார்ந்த பணிகளை செய்திட விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஐந்து விரிவுரையாளர்கள் / ஆலோசகர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒழுங்கு மேலாண்மை / வாழ்வாதாரம், தகவல் தொழில்நுட்பம் (கணினி வல்லுநர்), ஒருங்கிணைத்தல் மற்றும் விரிவாக்க கல்வி பயிற்சிகள் எடுக்க பயன்படுத்திக் கொள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### 5.7.8. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

இந்நிறுவனம் பல்வேறு வகையான பயிற்சிகளை நடத்துவதற்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், தேசிய ஊரக

வளர்ச்சி நிறுவனம், ஹைதராபாத் மற்றும் மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித்துறை ஆகியவற்றிடமிருந்து நிதியினை பெறுகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்கு நிதி உதவியினை (Grants-in-aids) பெறுகின்றது. தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசு பங்குத் தொகையாக 50:50 அடிப்படையில் பெறுகின்றது. பயிற்சி தொடர்பான அடிப்படை ஆதார வசதிகளான பயிலரங்கு கூடங்கள், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 100 விழுக்காடு நிதி உதவி வழங்குகிறது.

### 5.7.9. பயிற்சி பங்கேற்பாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு, கூட்டமைப்பு உறுப்பினர்கள், சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

### 5.7.10. பயிற்சி முறைகள்

இந்நிறுவனத்தில் நடத்தப்படும் பயிற்சிகளில் ‘விரிவுரை மற்றும் கலந்துரையாடல் அடிப்படையிலான பயிற்சி முறை’ மற்றும் பயிற்சி சார்ந்த விளையாட்டுகள், தனி



நடிப்பு, புத்துணர்வு நடவடிக்கைகள், பங்கேற்பு அணுகுமுறைகள், குழு விவாதங்கள், களப்பணி வெற்றி கதைகளை கூறுதல், அனுபவ பகிர்வு, பட்டறிவுப் பயணங்கள், பயிற்சி அட்டைகள் (Charts Preparation) தயாரித்தல் செயல்முறை பயிற்சி ஆகியவற்றோடு குழு அடிப்படையிலான பணிகள் ஆகிய பல்வேறு விதமான பயிற்சி முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

### 5.7.11. பயிற்சிகள் நடத்துதல்

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலைநகரில் உள்ள நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. பிற பயிற்சிகளை வெளி வளாக பயிற்சிகளாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது

### 5.7.12. பயிற்றுநர்கள்

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத், தேசிய தகவல் தொழில்நுட்ப மையம், சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை, அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை போன்ற நிறுவனங்களிலிருந்து சிறப்பு விரிவுரையாளர்கள் பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித்தலைவர்கள், பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள், மகளிர் திட்டத்தின் மாவட்ட முதன்மை

பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

### 5.7.13. உள்கட்டமைப்பு வசதிகள்

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான குளிரூட்டப்பட்ட பயிற்சி அறைகள், பயிற்சி உபகரணங்கள், ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், படிப்பகத்துடன் கூடிய நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி கூடங்கள், பயிற்சியாளர்கள் தங்கி உணவருந்தக் கூடிய வகையில் விடுதி வசதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் உள்ளன.

**அட்டவணை 5.6.**

**2014–15 –ஆம் ஆண்டின் பயிற்சிக்கான முன்னேற்ற அறிக்கை**

| வ எண் | திட்டங்கள் | அணி களின் எண்ணி க்கை | பயிற்சியாளர்களின் எண்ணி க்கை | அணி களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை | அலுவலர்கள் | உள்ளாட்சி அமைப்புகள் | சுய உதவிக்குழுக்கள் | தன்னார் வர்கள்/ ஊராட்சி செயலர்/ இதரா் | மொத்த பயிற்சி பெற்றவர் களின் எண்ணி க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தேசிய கிராம சுயாட்சி திட்டம் கணினி பயிற்சி | 52 | 2111 | 52 | 869 | 517 | 252 | | | 1638 |
| 2 | ஊரக தொழில் நுட்ப வள மையம் (RTRC) | 27 | 1080 | 25 | | | | 784 | | 784 |
| 3 | தேசிய கிராம சுயாட்சி திட்டம் | 25 | 600 | 104 | 5177 | 104 | | | | 5281 |
| 4 | பிற்படுத்தப் பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி –BRGF | 255 | 10120 | 842 | 47586 | 100 | | 59 | 80 | 47825 |
| 5 | மக்களை நோக்கி / கிராம தன்னார்வலர் திட்டம் | 400 | 20000 | 328 | | | | | 16474 | 16474 |
| 6 | சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் | 1676 | 125685 | 304 | 564 | 902 | 150 | | 25913 | 27529 |
| 7 | ராஜீவ்காந்தி ஊராட்சிகள் வலிமைப்படுத்தும் திட்டம் | 2107 | 86167 | 1028 | 8789 | 650 | 4007 4 | | | 49513 |
| 8 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் NBA | 5 | 200 | 12 | | 609 | 73 | | | 682 |
| 9 | ஊராட்சி நிறுவனங்கள் குறித்த பயிற்சி. | 31 | 3100 | 3 | | | 96 | | | 96 |
| 10 | ஒருங்கிணைந்த நீர்பிரி முகடு மேலாண்மை திட்டம் – IWDP | 2 | 80 | 2 | 72 | | | | | 72 |
| 11 | மத்திய பணியாளர் (ம) பயிற்சித்துறை – DoPT | 1 | 50 | 2 | | 129 | | | | 129 |
| 12 | பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் | 125 | 5000 | 27 | | 288 | | 1691 | | 1979 |
| 13 | தேசிய ஊரக வளர்ச்சி நிறுவன நிதியுதவி பயிற்சிகள் | | | 3 | | 80 | | | | 80 |
| 14 | சன்சாத் ஆதர்ஷ் கிராம யோஜனா SAGY) | 10 | 300 | 7 | 25 | 150 | | 90 | | 265 |
| 15 | பயிற்சி நிதி – TCF | 1 | 40 | 2 | | 70 | | | | 70 |
| 16 | பாலினம் சார்ந்த வரவு செலவு திட்டம் Gender Budgeting | 2 | 100 | 3 | | 32 | | 90 | | 122 |
| | **மொத்தம்:** | **4,719** | **2,55,223** | **2,744** | **63,082** | **3,631** | **40645** | **2,714** | **42,467** | **1,52,539** |



- தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSY) பயிற்சி திட்டத்தின் கீழ் கணினி தகவல் தொழில்நுட்பம் குறித்து கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலர்கள்

ஆகியோருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் 2111 நபர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

- ராஜீவ்காந்தி ஊராட்சிகள் வலிமைப்படுத்தும் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்தேக்கதொட்டி மற்றும் மின்விசை பம்பு இயக்குபவர்கள் 38,715 நபர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.
- புதிய விடுதிக் கட்டடம் ரூ.1436.13 இலட்சம் மதிப்பீட்டிலும் பல்நோக்கு கருத்தரங்கு கூடம் ரூ.814.31 இலட்சம் மதிப்பீட்டிலும் இந்நிறுவன வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.
- 2014-15ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மூலம் 1,52,539 பேருக்கு (தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் – 63082, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்–44276, சுய உதவிக் குழு, கூட்டமைப்பு உறுப்பினர்கள், சமுதாய பங்கேற்புடன் கூடிய பேரிடர் மேலாண்மைத் திட்ட பங்காளர்கள்– 45,181 பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**5.7.15. 2015-16ஆம் ஆண்டிற்கான பயிற்சித் திட்டங்கள்**

சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயிற்சி, நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, குடிநீர் வழங்கல் குறித்த பயிற்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி, தலைமைத்துவம் மற்றும் தொடர்பு திறன்கள்



குறித்த பயிற்சி, பஞ்சாயத்து ராஜ் நிர்வாகம் குறித்த பயிற்சி, ஊரக வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்துதல் குறித்த பயிற்சி, பெண் கிராம ஊராட்சி தலைவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப் படவுள்ளது. 2015–16ம் ஆண்டிற்கான பயிற்சி திட்டத்தில் 2,879 அணிகளாக 1,36,129 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

**5.7.16 சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை**

சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்பது கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். இத்திட்டத்தினை உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பாக உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் கால கட்டங்களில் கடலோர பகுதி வாழ் மக்களின் பாதிப்புகளைக் குறைக்க மற்றும் அவ்வாறான காலங்களில் ஏற்படும் இடையூறுகளை சமாளிக்க அவர்களுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்த ஆபத்து குறைப்பு திட்ட வரைவினை தயார் செய்தல் ஆகும். கடலோர பகுதிகளில் வசிக்கக் கூடிய பாதிப்புக்குள்ளாகும் சமுதாயத்தினர் இத்திட்டத்தின் முக்கிய பங்காளர்களாக உள்ளனர். மேலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ தொண்டு

நிறுவனங்கள், பயிற்றுநர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின் பங்காளர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் **12** கடலோர மாவட்டங்களில் உள்ள **564** கடலோர கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ.**15** கோடி ஆகும். ஜுன் 2013 முதல் ஜுலை 2018 வரையிலான காலகட்டத்திற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத்திட்டத்தின் கீழ் **304** பயிற்சிகள் நடத்தப்பட்டு **27,529** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மாநில அளவிலான கருத்தரங்குகள் | : | 8 பயிற்சிகள் |
| புத்தாக்க பயிற்சிகள் | : | 5 பயிற்சிகள் |
| பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி | : | 8 பயிற்சிகள் |
| மாவட்ட/வட்டார/ஊராட்சி அளவிலான பயிற்சிகள் | : | 282 பயிற்சிகள் |
| பட்டறிவு பயணம் | : | 1 பயிற்சி |

**2015–16**ம் ஆண்டில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் மூலம், **1,36,129** நபர்களுக்கு ரூ.**1,016.39** இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



## 6. புது வாழ்வு திட்டம்

## 6. புது வாழ்வு திட்டம்

**“தமிழ்நாடு அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை உள்ளடக்கிய உயரிய வளர்ச்சியை வெளிப்படுத்தும்– மிகவும் பின்தங்கிய, நலிவுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலனில் அக்கறை கொண்டு சமமான வாய்ப்புகளும், வசதிகளும் பெற்று, வேண்டுவோருக்கு வேலை கிடைக்கச்செய்து, வறுமை முற்றிலும் அகன்று தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக உருவாகும்.”**

**-மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை 2023 ஆவணம்**

### 6.1. அறிமுகம்

புதுவாழ்வு திட்டம் நவம்பர் 15 ஆம் நாள் 2005ம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. ஏழ்மையை களைவதற்கான முன்னோடித் திட்டமான இது உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

ஏழை, எளிய மக்களை உள்ளடக்கிய மக்கள் அமைப்புகளைத் தோற்றுவித்து, வங்கிகளின் மூலம் அவர்களுக்கு தேவைப்படும் நிதி ஆதாரத்தைப் பெற்றுத்தந்து, வாழ்வாதாரத்தையும் ஆற்றலையும் மேம்படுத்தி, மீண்டும் இவர்கள் ஏழ்மை நிலைக்கு உள்ளாவதை தவிர்க்கும் பொருட்டு, பிற சமூக பாதுகாப்பு திட்டங்களில் இருந்து உரிய உரிமைகள் மற்றும் பலன்களை அடைய செய்யும் பல்முனை வறுமை போக்கும் அணுகுமுறையை இத்திட்டம் பின்பற்றி வருகிறது.



இத்திட்டத்தின் கீழ் வறுமை ஒழிப்பு செயல்பாடுகள் அனைத்தும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்தத் தொழில் குழுக்கள்/ கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற மக்கள் அமைப்புகள் வாயிலாகவே செயல்படுத்தப்படுகின்றன.

ஏழைக் குடும்பங்கள் தங்களுக்கு தேவையான கடன் வசதி, சுயவேலை வாய்ப்புகள், திறன் பெற்று மாத வருவாயுடன் கூடிய வேலைவாய்ப்புகள், வாழ்வாதார மேம்பாட்டிற்கான தொழில் வாய்ப்புகள் போன்றவற்றை மக்களின் முழுப்பங்கேற்புடன் பெற்றுத்தந்து வறுமையை குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### 6.2. திட்ட பகுதிகள்

இத்திட்டம் 2005ம் ஆண்டில் 15 மாவட்டங்களில் துவங்கப்பட்டு, தற்போது 26 மாவட்டங்களில் உள்ள மிகவும் பின்தங்கிய 120 வட்டாரங்களில் உள்ள 4,174 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. ரூ.1,667 கோடி நிதி ஒதுக்கீடு மூலம் 9.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட இத்திட்டம் செப்டம்பர் 2016 வரை நடைமுறையில் இருக்கும்.

### 6.3. திட்ட செயலாக்க அமைப்பு

#### 6.3.1. மாநில அலகு

பதிவு செய்யப்பட்ட சங்கமான புது வாழ்வு திட்டத்தின் தலைவர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு செயலாளர் ஆவார். மாநில திட்ட மேலாண்மை அலகு, மாநில திட்ட இயக்குநரின் கீழ் செயல்படுகிறது. இவர்களுக்கு உதவிட கூடுதல் திட்ட இயக்குநர்கள் மற்றும் பல்திறன் கொண்ட 19 வல்லுநர்கள் அடங்கிய குழு உள்ளது.

#### 6.3.2. மாவட்ட அலகு

மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்ட மாவட்ட திட்ட மேலாண்மை அலகு ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கமாகும். மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் 7 உதவித் திட்ட மேலாளர்கள் அடங்கிய குழு மாவட்ட திட்ட மேலாண்மை அலகை நிர்வகிக்கிறது. இவ்வலகு மாவட்ட அளவில் திட்ட செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு பணிகளையும் மேற்கொள்கிறது.

#### 6.3.3. பகுதி அலகு

பகுதி அளவில் மக்கள் அமைப்புகளுக்கு உறுதுணையாக இருந்திட, 10 – 15 கிராம ஊராட்சிகள் அடங்கிய ஒவ்வொரு களப்பகுதிக்கும் 4 ஒருங்கிணைப்பாளர்களுடன் ஒரு அணித் தலைவரின் கீழ் இத்திட்ட ஒருங்கிணைப்பு அணி செயல்படுகிறது.

#### 6.3.4. கிராம அலகு

இலக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது அடித்தள அமைப்பான கிராம வறுமை ஒழிப்புச் சங்கமாகும்.



இலக்கு மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோர்களை அங்கத்தினராக கொண்டு ஜனநாயக முறையில் வெளிப்படையாக செயல்பட்டு தேவையான நிதி உதவி இச்சங்கம் மூலமாக பயனாளிகளிடம் சென்றடைகிறது.

### 6.4. திட்ட நோக்கங்கள்

வலுவான சமுதாய அமைப்புகள் மூலம், ஏழை எளிய மக்கள் மற்றும் நலிவுற்ற குடும்பங்களின் வறுமையைப் போக்கி ஆற்றல்படுத்துவது இதன் நோக்கமாகும். ஏழை எளிய, நலிவுற்ற மக்களின் திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தி அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு தேவையான நிதி மற்றும் இதர உதவிகளை அளித்து பிற துறைகளின் மூலம் உரிய பலன்களை பெற்று தருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### 6.5. திட்ட செயலாக்க முறை

இத்திட்டம் மக்களுக்காக மக்களே திட்டமிட்டு செயலாற்றும் அணுகு முறையை பின்பற்றுகிறது. மக்களின் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றை பூர்த்தி செய்வதற்கான செயல் திட்டங்களை அவர்களே உருவாக்கி, உயிர்மூச்சு கொள்கையை பின்பற்றி செவ்வனே செயல்படுத்துவதுடன் கண்காணிப்பு பணியும் அவர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது. கீழ்க்கண்ட வழிமுறைகள் இத்திட்டத்தில் பின்பற்றப்படுகின்றன.

- மக்கள் அமைப்புகளின் வாயிலாக சமுதாய ஒருங்கிணைப்பு.
- நிதி உதவி மற்றும் நலிவடைவு நீக்கம்.

- இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள்.
- வாழ்வாதார மேம்பாடு.

### 6.6. தொடக்க நிலை செயல்பாடுகள்

#### 6.6.1. தகவல் தொடர்பு

புது வாழ்வு திட்டத்தின் நோக்கங்கள், உயிர்மூச்சு கொள்கைகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த தகவல்கள் மக்களிடையே முனைப்புடன் தெருமுனை நாடகங்கள், கொள்கை பரப்பு ரதம், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவர் விளம்பரங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### 6.6.2. மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்

திட்டத்தின் இலக்கு மக்களாகிய ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுதிறனாளிகள் மக்கள் பங்கேற்புடன் அறிதல் முறையில் கண்டறியப்பட்டுள்ளனர். கிராமம் முழுவதையும் நடைபயணம் மூலம் அறிந்து, சமூக வரைபடம் வரைந்து மற்றும் பொருளாதார நிலை மதிப்பீட்டின் அடிப்படையில் இலக்கு மக்களை கண்டறியும் முறை பின்பற்றப்பட்டுள்ளது. இலக்கு மக்கள் பட்டியல் வெளிப்படை தன்மையுடன் தேர்வு செய்யப்பட்டு கிராம சபையில் ஒப்புதல் பெற்று அனைத்து தரப்பினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 6.7. மக்கள் அமைப்புகள்

#### 6.7.1. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

இலக்கு மக்கள் பிரதிநித்துவம் கொண்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஒரு சுய சார்புடைய அமைப்பாகும்.



இலக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூ.6 லட்சம் முதல் ரூ.12 லட்சம் வரை மைல் கற்களை அடைவதின் அடிப்படையில் 3 தவணைகளில் நிதி விடுவிக்கப்படுகிறது. இந்நிதியில் 40 விழுக்காடு ஆற்றல் வளர்ப்புக்கும், 40 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறப்பு கடன் உதவிக்கும், 20 விழுக்காடு இளைஞர்கள் திறன் மேம்பாட்டிற்காகவும் செலவிடப்படுகிறது.

**அட்டவணை 6.1.**

**கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதி செலவினம்**

| கட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் எண்ணிக்கை | கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கான நிதி செலவினம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2014–15 | | 31.07.2015 வரை சாதனை | |
| | | | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ.கோடியில்) | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ.கோடியில்) |
| முதல் கட்டம் (16 மாவட்டங்கள்) | 2509 | 2736 | – | – | 2736 | 282.61 |
| இரண்டாம் கட்டம் (10 மாவட்டங்கள்) | 1665 | 1729 | 750 | 51.43 | 1729 | 217.75 |
| மொத்தம் | 4,174 | 4,465 | 750 | 51.43 | 4,465 | 500.36 |

#### 6.7.2. சமூகத் தணிக்கை குழு

மக்கள் அமைப்புகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் உயிர் மூச்சு கொள்கைகளான அனைவரும் சேர்ந்து முடிவு எடுத்தல், நலிவுற்றோர்க்கு முன்னுரிமை அளித்தல், பொறுப்புணர்வுடன் நடத்தல் மற்றும்

வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை பின்பற்றி செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக சமூகத் தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்டப்பகுதியில் 5 முதல் 7 நபர்களைக் கொண்ட 4,465 சமூக தணிக்கை குழுக்கள் மூலம் திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது.

### 6.7.3. சுய உதவிக் குழு

விடுபட்ட இலக்கு மக்கள் 12 முதல் 20 பேர்களைக் கொண்டு சுய உதவிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு சுய உதவிக்குழுக்கள் 5 அங்கத்தினர்களைக் கொண்டதாகக் கூட இருக்கலாம் . உறுப்பினர்களின் திறன் வளர்ப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான கடன் வசதி இத்திட்டம் மூலம் செய்து தரப்படுகிறது.

**அட்டவணை 6.2.**

**புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக்குழுக்களின் விவரம்**

| விவரம் | முதல் கட்ட மாவட்டங்கள் | | | இரண்டாம் கட்ட மாவட்டங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | விழுக்காடு | இலக்கு | சாதனை | விழுக்காடு |
| பெண்களுக்கான சுய உதவிக்குழுக்கள் | 15,046 | 15,046 | 100 | 7,815 | 7,815 | 100 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான சுய உதவிக்குழுக்கள் | 7,996 | 7,996 | 100 | 5,290 | 5,290 | 100 |
| ஆதார நிதி விடுவிப்பு | 23,042 | 23,042 | 100 | 13,105 | 13,105 | 100 |



### 6.7.4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, குழுக்களுக்கான நிதி மற்றும் பிற சேவைகளை பெற்றுத்தரும் அமைப்பாக பணியாற்றுகிறது. நியாயமான வட்டி விகிதத்தில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நுகர்வு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் தேவையான கடன் உதவியை இவ்வமைப்பு வழங்குகிறது. ரூ.12 இலட்சம் முதல் 18 இலட்சம் வரை அமுத சுரபி திட்ட நிதி, மைல் கற்களை அடையும் அடிப்படையில் இரண்டு தவணைகளில் விடுவிக்கப் படுகிறது. இந்த அமைப்பின் சேவை மூலம் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார பணிகளுக்கான பணத்தேவைக்கு அதிக வட்டியில் தனிநபர் கடன் பெறுவது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**அட்டவணை 6.3.**

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான நிதிச் செலவினம்**

| கட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | கூட்டமைப்புகள் எண்ணிக்கை | அமுதசுரபி நிதி விடுவிப்பு 2014 –2015 | | அமுதசுரபி நிதி விடுவிப்பு 31.7.2015 வரை சாதனை | |
|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) |
| முதல் கட்டம் (16 மாவட்டங்கள்) | 2509 | 2735 | 1114 | 41.11 | 2735 | 343.88 |
| இரண்டாம் (10 மாவட்டங்கள்) | 1665 | 1729 | 409 | 17.88 | 1319 | 111.45 |
| **மொத்தம்** | **4,174** | **4,464** | **1,523** | **58.99** | **4,054** | **455.33** |

### 6.7.5. ஒத்த தொழில் குழு

ஒரே மாதிரியான வாழ்வாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோரை ஒருங்கிணைத்து அவர்களுக்கு தேவைப்படும் பொது உட்கட்டமைப்பு வசதி, கொள்முதல், சந்தைப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு ஆகிய தேவைகளை பெற்றுத்தருவதற்காக ஒத்த தொழில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் ஒவ்வொன்றும் ரூ.1 இலட்சம் வீதம் நிதியினை இத்திட்டத்தில் பெறுகின்றது.

**அட்டவணை 6.4.**

**ஒத்த தொழில் குழு நிதி செலவினம்**

| கட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை | குழுக்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2014 – 2015 | | 31.7.2015 வரை சாதனை | |
| | | | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) |
| முதல் கட்டம் (16 மாவட்டங்கள்) | 2,509 | 3,992 | 540 | 3.99 | 3608 | 32.29 |
| இரண்டாம் கட்டம் (10 மாவட்டங்கள் ) | 1,665 | 1665 | 134 | 1.34 | 861 | 5.62 |
| **மொத்தம்** | **4,174** | **5,657** | **674** | **5.33** | **4,469** | **37.91** |

### 6.7.6. மக்கள் கற்றல் மையம் (மகமை)

அடித்தள மக்கள் அமைப்புகள் நிலைத்து வேரூன்றி அதற்கு தேவையான உதவிகள் கிட்டும் வகையில் மக்கள் கற்றல் மையம் (மகமை) 16 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ள மகமை அமைப்பு திட்ட காலத்திற்கு பின்னரும் புது வாழ்வு



திட்ட செயல்பாடுகள் நீடித்து நிலைப்பதை கண்காணித்து உறுதி செய்யும் மேல் நிலை அமைப்பாக செயல்படும். இதுவரை ரூ.7 கோடி மகமை நிறுவன மேம்பாட்டு நிதியாக விடுவிக்கப்பட்டுள்ளது.

## 6.8. நிதி இணைப்பு மற்றும் நலிவுற்ற தன்மை குறைப்பு

### 6.8.1. நிதி இணைப்பு

சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் சேவையை மேம்படுத்தும் வகையில் வங்கி கடன் பெற்று தரப்படுகிறது. இதன் மூலம் உறுப்பினர்கள் தங்கள் நுகர்வு தேவையை பூர்த்தி செய்து கொள்வதுடன் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடிகிறது. மேலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளில் இருந்து பெருங்கடன்கள் பெற்று சுய உதவிக்குழுக்களுக்கு கூடுதலாக கடனுதவி செய்கின்றன.

**அட்டவணை 6.5.**

**சுய உதவிக்குழுக்கள் வங்கி கடன் இணைப்பு**

| விவரம் | 2014 – 2015 | | 31.7.2015 வரை சாதனை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| சுய உதவிக்குழுக்கள் பெற்ற வங்கி கடன் | 41,791 | 756.00 | 1,04,179 | 3,160.99 |
| ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பெருங்கடன் | 39 | 9.25 | 466 | 113.03 |

### 6.8.2. நலிவுற்ற தன்மை குறைப்பு

விளிம்பு நிலை மக்களாகிய மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர், மலை வாழ் மக்கள் ஆகியோர்களுக்கு திட்டம் புரிந்த சேவையின் காரணமாக சமுதாய பொது நீரோட்டத்தில் எளிதாக இணைந்துள்ளனர். வாழ்வாதாரத்தை பெருக்கி உடல் நலம் பேணுவதற்கு தேவையான நிதி ஆதாரமாக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு வழங்கும் நிதியில் இருந்து 40 விழுக்காடு செலவிடப்படுகிறது.

**அட்டவணை 6.6.**

**மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள்**

| விவரம் | 2014 – 2015 | | 31.7.2015 வரை சாதனை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| நிதி உதவி | 26,678 | 17.88 | 1,38,567 | 97.78 |
| உபகரணங்கள் | 3,916 | 2.59 | 35,105 | 11.12 |
| பராமரிப்பு நிதி | 921 | 0.95 | 16,331 | 1.63 |
| ஓய்வூதியம் | 1,478 | 0.14 | 47,942 | 4.79 |
| சிறப்பு சுய உதவிக்குழுக் – களுக்கான கடன் உதவி | 1,456 | 3.08 | 10,122 | 57.86 |

**அட்டவணை 6.7**

**நலிவுற்றோருக்கான உதவிகள்**

| விவரம் | 2014 – 2015 | | 31.7.2015 வரை சாதனை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| நிதி உதவி | 38,541 | 19.40 | 1,39,969 | 88.13 |
| ஓய்வூதியம் | 7,316 | 0.73 | 1,10,015 | 110.01 |



### 6.9. இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்பு பயிற்சி

வேலை வாய்ப்பு சந்தை தேவையின் அடிப்படையில் இளைஞர்களுக்கு வேண்டிய திறன் வளர்ப்பு பயிற்சிகள் தந்து அதன் மூலம் நிலையான வேலை வாய்ப்பு பெற்றிட செய்வது திட்டத்தின் ஒரு முக்கிய முயற்சியாகும். 18 முதல் 35 வயதுடைய வேலையில்லாத அல்லது தகுதி குறைவான வேலையிலுள்ள இளைஞர்களை ஊராட்சி வாரியாக கண்டறிந்து அவர்களின் ஆர்வம் மற்றும் தகுதிக்கு ஏற்ப வேலை வாய்ப்பு பெற்றிடும் வகையில் தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. திட்டத்தின் மூலம் நடத்தப்படும் வேலை வாய்ப்பு முகாம்களில் தொழில் நிறுவனங்களை பங்கேற்க செய்து தங்களுக்கு தேவைப்படும் பணியாளர்களை பெரும் அளவில் தேர்வு செய்து, பணியமர்த்தி, பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது.

**அட்டவணை 6.8.**

**இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சிக்கு பின் வேலை வாய்ப்பு**

| தொழில்திறன் | பயிற்சி பெற்றோர் | வேலை வாய்ப்பு பெற்றோர் | வேலை வாய்ப்பு பெற்றோர் விழுக்காடு |
|---|---|---|---|
| தொழில் நுட்பம் சார்ந்த பணி | 29,297 | 26,229 | 90 |
| மருத்துவம் சார்ந்த தொழில் | 10,802 | 9,740 | 90 |
| கைபேசி பழுதுபார்த்தல் | 5,895 | 5,295 | 90 |
| இலகு மற்றும் கனரக வாகன ஓட்டுநர் மற்றும் பழுதுபார்த்தல் | 1,37,778 | 1,20,838 | 88 |
| கட்டுமானத் தொழில் | 13,336 | 11,677 | 88 |

| | | | |
|---|---|---|---|
| ஆயத்த ஆடை தயாரித்தல் | 64,274 | 55,061 | 86 |
| தோல் பொருள் உற்பத்தி | 5,854 | 5,021 | 86 |
| கணினி பணி | 54,248 | 42,093 | 78 |
| பிற தொழில்கள் | 38,967 | 37,660 | 97 |
| **மொத்தம்** | **3,60,451** | **3,13,614** | **87** |

### 6.10. ஒத்த தொழில் கூட்டமைப்பு

ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபடுகிற ஒத்த தொழில் குழுக்களை பகுதி / வட்டார அளவில் ஒருங்கிணைத்து பதிவு செய்யப்பட்ட சங்கங்களாக அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தி பொருட்களின் மதிப்பு கூட்டுதல், உயர் சந்தைப்படுத்துதல் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் மூலம் நிலைத்து நீடித்திட தேவையான வசதிகளை பெற்று தர இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளன. 75 விழுக்காடு திட்ட நிதி, 20 விழுக்காடு வங்கி இணைப்பு மற்றும் 5 விழுக்காடு உறுப்பினர்கள் பங்களிப்பு ஆகியவை இக்கூட்டமைப்பின் நிதி ஆதாரமாகும். இதுவரை 15 கூட்டமைப்புகள் ரூ.3.56 கோடி திட்ட நிதி ஆதாரம் பெற்றுள்ளன.

### 6.11. புதுவாழ்வு மனநல திட்டம்

மனநலம் குறித்த பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஜப்பான் அரசின் கொள்கை மற்றும் மனித வள மேம்பாடு நிதி உதவியுடன், புதுவாழ்வு மனநல திட்டம் முன்னோடி திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. 15 மாவட்டங்களில் 578 கிராம ஊராட்சிகளில் உள்ள 609 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் வாயிலாக மக்கள் பங்கேற்பு அணுகு முறையின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்



படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மனநலம் காத்திடும் நல்வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் மனநலம் பேணுவதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து மருந்து உட்கொள்ளுதல் மற்றும் சிகிச்சையை பெறுதல் ஆகியவற்றிற்கு தேவையான முனைப்பான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முழுமையாக குணம் அடைந்தவர்கள் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆக்கப்படுகின்றனர். இவர்கள் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்ட செயல்பாடுகள் வாயிலாக பயன் பெற்று தங்களது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள முடிகிறது.

**அட்டவணை 6 .9.**
**மனநலம் பாதிக்கப்பட்டோர்களுக்கான உதவிகள்**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | கண்டறியப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோர்கள் | 2,597 | – |
| 2 | மனநல ஆலோசனை பெற்றவர்கள் | 2,532 | 97 |
| 3 | மருத்துவ உதவி பெற்றவர்கள் | 2,269 | 87 |
| 4 | வாழ்வாதார உதவி பெற்றவர்கள் | 1,861 | 71 |
| 5 | மருத்துவமனை சிகிச்சை பெற்றவர்கள் | 348 | – |
| **மொத்த நிதி செலவினம்** | | **ரூ.9.95 கோடி** | |

### 6.12. பிற முயற்சிகள்

#### 6.12.1. சுகாதார அட்டை

இலக்கு மக்கள் குடும்பங்களைச் சார்ந்த ஏழை பெண்களின் சுகாதாரத்தை கண்காணிப்பதற்காக அவர்களுக்கு சுகாதார அட்டை வழங்கும் பணியை திட்டம் மேற்கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட பெண்களின் உயரம்,

எடை, இரத்த வகை, இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை போன்ற முக்கிய தகவல்கள் காலாண்டு மருத்துவ சோதனைக்கு பிறகு பதிவு செய்யப்படுகிறது. உள்ளூர் கிராம சுகாதார செவிலியர்கள் இந்த பதிவுகளை மேற்கொள்ளவும் இவர்களின் நலன் பேணவும் உதவி புரிகின்றனர்.

**அட்டவணை 6.10**

**சுகாதார அட்டை விவரங்கள்**

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | பெண்களின் எண்ணிக்கை | பரிசோதிக்கப் பட்ட பெண்களின் எண்ணிக்கை | சுகாதார அட்டை வழங்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட பெண்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 4,174 | 16,07,406 | 16,07,406 | 16,07,406 | 2,22,983 |

### 6.12.2. தற்காப்பு கலை பயிற்சி

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த பெண்களுக்கு மக்கள் கற்றல் மையம் வாயிலாக தற்காப்பு கலை பயிற்சி தரப்படுகிறது. இதன் மூலம் தங்களுக்கு நேரிடும் வன்கொடுமைகள் தொடர்பான சவால்களை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ள ஏதுவாக இவர்களுக்கு ஒரு சிறப்பு முயற்சியை இத்திட்டம் செயல்படுத்தி வருகிறது.

**அட்டவணை 6.11.**

**பெண்களுக்கான தற்காப்பு கலைப் பயிற்சி**

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம வறுமை ஒழிப்பு மற்றும் ஊராட்சி கூட்டமைப்புகள் பெண் அங்கத்தினர்களின் எண்ணிக்கை | பயிற்சி தரப்பட்ட பெண்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 4,174 | 71,826 | 71,826 | 3.00 |



### 6.12.3. இளைஞர் தூதுவர்கள்

கிராமப்புற இளைஞர்களை ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுத்திடவும், சேவை மனப்பான்மையை வளர்த்திடவும் இளைஞர் தூதுவர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். எச்.ஐ.வி/எய்ட்ஸ், குடிப்பழக்கம், போதைப்பழக்கம், புகைப்பிடித்தல், பாலியல் குற்றங்கள் போன்ற சமுதாய சீர்கேடுகளை களைவது குறித்து இளைஞர் தூதுவர்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.12.**

**இளைஞர் தூதுவர்கள்**

| விவரம் | இலக்கு | | சாதனை | | % |
|---|---|---|---|---|---|
| | செயல் இலக்கு | நிதி இலக்கு (ரூ. கோடியில்) | எண்ணிக்கை குறியீடு | நிதி இலக்கு (ரூ. கோடியில்) | |
| பயிற்றுநருக்கான பயிற்றுநர் | 4,170 | 0.18 | 4,170 | 0.18 | 100 |
| இளைஞர்கள் | 1,50,000 | 2.03 | 1,66,960 | 2.03 | 100 |

### 6.12.4. கிராமக் கற்றல் மையம்

இணைய தள இணைப்பு மற்றும் இணைய படக் கருவி மூலம் தொலை தொடர்பு செய்தி பரிமாற்றம், கல்வி குறுந்தகடுகள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் மற்றும் பல்வேறு அரசு சார்ந்த சேவைகளுக்கான படிவங்கள் போன்ற வசதிகளை கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களில் ஏற்படுத்தி இச்சங்கங்கள் கிராம கற்றல் மையங்களாக செயல்பட்டு வருகின்றன. சந்தை நிலவரம், தொலை மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு செய்தி மற்றும் உயர்கல்வி சம்பந்தமான தகவல்கள் பெறுவதற்கான தகவல்

மையங்களாக இவை திகழ்கின்றன. திட்ட பகுதிகளில் 4,174 கிராம கற்றல் மையங்கள் அரசு மின் சேவை மையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

**அட்டவணை 6.13.**
**கிராமக் கற்றல் மையங்கள்**

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம கற்றல் மையங்களின் எண்ணிக்கை | இணையதள இணைப்புடன் கூடிய மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4,174 | 4,174 | 4,174 |

### 6.13. நிதி செயலாக்கம்

திட்ட ஆரம்ப காலத்திலிருந்து 31–07–2015 வரை ரூ. 1,572.24 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டில் ரூ. 263.83 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2015–16ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 255.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.14. திட்டத்தின் தாக்கம்

திட்டத்தின் செயலாக்கம் இலக்கு மக்களிடையே ஏற்படுத்திய தாக்கம் குறித்து வெளி நிறுவனம் மூலம் நடத்திய ஆய்வின்படி ஆரம்ப கட்ட முடிவுகள்.

- அதிக வட்டி சுமை புதுவாழ்வு திட்ட முயற்சியால் 29 விழுக்காடு குறைந்துள்ளது.
- தொழில்திறன் பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை 32 விழுக்காடு உயர்ந்துள்ளது.



- சொத்து குறியீடு 22.42 அலகுகள் உயர்ந்துள்ளதன் மூலம் இப்பகுதி மக்கள் கூடுதல் உடைமைகளை பெற்றுள்ளனர் எனக் கொள்ளலாம்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பங்கேற்போர் எண்ணிக்கை 15 விழுக்காடு உயர்ந்துள்ளது.
- கிராம சபைகளில் பங்கேற்கும் பெண்களின் எண்ணிக்கை 65 விழுக்காடு உயர்ந்துள்ளது.
- திட்ட பகுதிகளில் வாழ்வாதாரம் குறித்து பெண்கள் முடிவெடுப்பது 21 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய முயற்சியால் பெறப்பட்ட வாழ்வதாரத்திற்கான முன்னோடி திட்டமான **"தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமை குறைப்பு திட்டத்தில் உள்ள எனது நண்பர்கள் புரிந்துள்ள தலைசிறந்த பணிக்கு பாராட்டுக்கள்" என உலக வங்கித் தலைவர் முனைவர் ஜிம் யாங் கிம் 22–07–2014ல் வருகை தந்த பொழுது திட்ட முயற்சியை மேற்கண்டவாறு வாழ்த்தியுள்ளார்.**

# 7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்



## 7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

*“ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும் தன்னம்பிக்கையும் பெறவேண்டும்.”*

–மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு, பெண்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இரண்டு பெருந்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

I. **மகளிர் திட்டம்**, மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்.

II. **மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**, மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 75:25 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

### 7.1. மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 1991–92 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண்மை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரிடையே சுய உதவிக் குழுக்களை அமைத்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தியது. இத்திட்டம் சேலம், தென்னாற்காடு

(கடலூர் மற்றும் விழுப்புரம்), மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு 1994 ஆம் ஆண்டு வரை படிப்படியாக விரிவு படுத்தப்பட்டது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் இந்த வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு மகளிர் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசின் நிதியுதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் துவக்கியது. அதன் பிறகு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மாநிலத்தின் மகளிர் வளர்ச்சிக்காக சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் முக்கிய நிறுவனமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களின் திறன்களை மேம்படுத்தி, கூட்டமைப்புகள் மூலம் ஒருங்கிணைத்து, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகளை ஏற்படுத்தி அவர்களை சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையச் செய்ய ஆற்றல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**7.1.1. சுய உதவிக் குழுக்கள்**

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட, 12 முதல் 20 ஏழை மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.



**7.1.2. சுய உதவிக் குழுக்களின் முக்கிய அம்சங்கள்**

- குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டங்கள், தவறாத வருகை, முறையான பயிற்சி, தொடர் சேமிப்பு, உள்கடன், தவணை தவறாமல் திருப்பிச்செலுத்துதல் மற்றும் கணக்குப் பதிவேடுகள் பராமரிப்பு ஆகியவை சிறப்பு அம்சங்களாகும்.
- சுய உதவிக் குழு இயக்கமானது ஏழை மகளிரை கந்து வட்டிகாரர்களின் பிடியிலிருந்து விடுபட உதவுகிறது.
- ஒவ்வொரு குழுவிலும் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு ஊக்குநர் மற்றும் இரண்டு பிரதிநிதிகள் உள்ளனர்.
- ஊக்குநர், குழுவிற்கு தலைமை ஏற்று வழி நடத்துவதற்கு பொறுப்பாவார்.
- பிரதிநிதிகள், ஊக்குநருக்கு உதவுவதுடன் குழுவின் கணக்குப் பதிவேடுகளை பராமரிப்பர்.

**அட்டவணை 7.1.**
**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்**

| வ. எண் | விபரம் | சாதனை |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 6.08 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 92.09 இலட்சம் |

| வ. எண் | விபரம் | சாதனை |
|---|---|---|
| 2 | ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4.23 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 63.76 இலட்சம் |
| 3 | நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1.84 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 28.33 இலட்சம் |
| 4 | மொத்த சேமிப்பு | ரூ.5,991 கோடி |
| 5 | சுழல் நிதி/ஆதார நிதி பெற்ற சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | 5.14 இலட்சம் |
| 6 | சுய உதவிக்குழுக்கள் பெற்ற மொத்த கடன் இணைப்பு | ரூ.31,873.07 கோடி |

## 7.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற சிறப்புத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு 2012–13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஊரக பகுதிகளில் உள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மக்களுக்கான நீடித்த தன்மையுடைய வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கு இத்திட்டத்தின் மூலம் வழி வகை செய்யப்படுகிறது. ஊரக ஏழை மக்களுக்கான வலுவான மற்றும் துடிப்பான அமைப்புகளை உருவாக்கி வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து குடும்ப



வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

### 7.2.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

- விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.
- ஊரக ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை சமூக மேம்பாடு அடையச் செய்தல்.
- நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்பயிற்சி அளித்தல்.
- அரசுத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை முறையாகப் பெற்று திறம்பட பயன்படுத்திட வழி வகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்களை அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற தயார் செய்து அவர்களது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கச் செய்தல்.

### 7.2.2. திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், புதுவாழ்வுத் திட்டம் 120 வட்டாரங்களிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மீதமுள்ள 265 வட்டாரங்களிலும் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் 4 மாவட்டங்களில் உள்ள 16 வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய ஊரக வாழ்வாதாரத்திட்டம் (NRLP) செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**அட்டவணை 7.2.**
**திட்டம் வாரியாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்**

| வ. எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | பகுதிகள் | ஊராட்சி கள் |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் | 26 | 120 | 302 | 4,174 |
| 2 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 31 | 249 | 694 | 7,892 |
| 3 | தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 4 | 16 | 48 | 458 |
| **மொத்தம்** | | **31** | **385** | **1,044** | **12,524** |

**முதற் கட்டம் –** 2012–2013 ஆம் ஆண்டு முதல் 15 மாவட்டங்களில் 60 வட்டாரங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் 60 வட்டாரங்களில் மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள ஆண்டு செயலாக்கத் திட்டத்தின் அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

**இரண்டாம் கட்டம் –** 2013 -14 ஆம் ஆண்டு முதல் 27 மாவட்டங்களில் 110 வட்டாரங்களில் 3,458 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு

மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்தப்படும்.


**மூன்றாம் கட்டம் –** 2014 -15 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களில் 95 வட்டாரங்களில் 2,488 கிராம ஊராட்சிகளில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மக்கள் நிலை ஆய்வு வரை செயல்படுத்தப்படும். மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இதர செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

### 7.2.3. செயலாக்க அமைப்பு


தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தை மாநில இயக்க மேலாண்மை அலகாக மாநில அரசு நியமித்துள்ளது. மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் தனிப்பட்ட நிர்வாக பணியாளர்கள் அமைப்பின் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. அரசு செயலர், ஊரக



வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களை இந்த இயக்கத்தின் இயக்குநராகவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரை முதன்மைச் செயல் அலுவலராகவும் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து செயலாக்க அமைப்பின் விவரம் பின்வருமாறு:



#### 7.2.4. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்






## 7.3. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவனக் கட்டமைப்பு

### 7.3.1. தகவல், கல்வி, தொடர்பு பணிகள்

பேரணி, தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் ரதம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பற்றிய விழிப்புணர்வு பொது மக்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுவர் விளம்பரங்கள், சுவரொட்டிகள், ஒட்டுப்படங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் இயக்க தகவல் பலகைகள் வாயிலாகவும் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 7.3.2. அடிப்படை விவரக் கணக்கெடுப்பு

புது வாழ்வு திட்ட சமூக வல்லுநர்களைக் கொண்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்பாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்கள், பயன்பாட்டில் இல்லாத மற்றும் கலைந்துவிட்ட சுய உதவிக் குழுக்களின் விவரங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 8,269 கிராம ஊராட்சிகளில் இந்த அடிப்படை விவரக் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது. இதில் கண்டறியப்பட்ட, பயன்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் வளர்க்கும் பயிற்சிகள் மூலமாக மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 7.3.3. மக்கள் நிலை ஆய்வு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள குக்கிராமங்களில் குடியிருப்புகள் வாரியாக மிகவும் ஏழைகள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர்கள்,

பழங்குடியினர் மற்றும் விளிம்பு நிலைச் சமூகத்தினரை கண்டறிந்திட சமுதாய பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம், பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறை மற்றும் தொழில் யுக்திகளான நடைப்பயணம், சமுதாய வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு பகுதிகளில் அதனை சரிபார்த்தல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுகிறது. தேர்வு செய்யப்பட்ட மக்கள் நிலை பட்டியலை அனைத்து குக்கிராமத்திலுள்ள முக்கியமான இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, எதிர்ப்புகள் மற்றும் புதியதாக சேர்ப்பது போன்ற விவரங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றினைப் பெற்று இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்படுகிறது.

**2015–16**ம் ஆண்டில் மூன்றாம் கட்ட வட்டாரங்களில் இத்திட்டம் மக்கள் நிலை ஆய்வு வரை செயல்படுத்தப்படும்.



**அட்டவணை 7.3.**

**மக்கள் நிலை ஆய்வின் விவரம்**

| வட்டாரங்கள் – கட்டங்கள் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | | குடியிருப்பு எண்ணிக்கை | ஏழைகள் எண்ணிக்கை | மிகவும் ஏழைகள் எண்ணிக்கை | மொத்தம் இலக்கு மக்கள் குடியிருப்பு | மாற்றுத்திறனாளிகள் | நலிவுற் றோர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | முடிவுற்றது | (இலட்சத்தில்) – கலம் 7ல் உள்ளவாறு | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 (5+6) | 8 | 9 |
| முதல் கட்ட மாவட்டங்கள் | 2,323 | 2,323 | 19.85 | 3.58 | 2.5 | 6.08 | 0.51 | 0.91 |
| இரண்டாம் கட்ட மாவட்டங்கள் | 3,458 | 3,458 | 30.55 | 5.38 | 3 | 8.28 | 0.87 | 1.25 |
| மூன்றாம் கட்ட மாவட்டங்கள் | 2,485 | 2476 | 21 | 3.67 | 2.15 | 5.85 | 0.45 | 0.72 |
| **மொத்தம்** | **8,266** | **8,257** | **71.4** | **12.63** | **7.65** | **20.21** | **1.83** | **2.88** |

### 7.3.4. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சுய சார்பு அமைப்பாகும். கிராம அளவில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இயக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முழுப் பொறுப்பு ஏற்பதோடு கிராம சபைக்கும் விளக்கம் அளிக்கக்கூடிய அமைப்பாக திகழும். இந்த அமைப்புகள் சமுதாயத்திற்கும்,

திட்டத்திற்கும் இடையே மிக முக்கிய இணைப்பாக செயல்படும். ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திலும் 10 முதல் 20 உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கிராம சபை ஒப்புதலுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

1. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து ஒரு சுய உதவிக் குழு உறுப்பினர் தேர்வு செய்யப்பட வேண்டும்.
2. ஊராட்சி மன்ற தலைவரே கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் கௌரவத் தலைவராகவும் இருப்பார்.
3. மாற்றுத்திறனாளி மற்றும் இளைஞர் பிரதிநிதி ஒருவர்.
4. 30 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
5. 50 விழுக்காடு பெண்களாக இருத்தல் வேண்டும்.

முதல் மற்றும் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம்.



**அட்டவணை 7.4.**

**வறுமை ஒழிப்புச் சங்கங்களின் விவரங்கள்**

| வட்டாரங்கள் – கட்டங்கள் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | பொது கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் எண்ணிக்கை | பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் எண்ணிக்கை | மொத்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| முதல் கட்ட மாவட்டம் | 2,323 | 2,322 | 66 | 2,388 |
| இரண்டாம் கட்ட மாவட்டம் | 3,458 | 3,457 | 81 | 3,538 |
| **மொத்தம்** | **5,781** | **5,779** | **147** | **5,926** |

### 7.3.5 சமூகத் தணிக்கை குழு

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை குழுவில் 5 முதல் 7 உறுப்பினர்கள் கிராம சபை ஒப்புதலுடன் சமுதாயத்திலிருந்து தேர்வு செய்யப்படுகின்றனர். மாற்ற இயலாத கோட்பாடுகளை திட்டச் செயலாக்கத்தில் முறையாகப் பின்பற்றப்படுவதை சமூகத் தணிக்கை குழு கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

### 7.3.6. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு 2014–15–ஆம் ஆண்டு 10,013 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும்

பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழுச் செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தகப் பராமரிப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. இந்த குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, பொருளாதாரச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. இதே போன்று 2015–16ஆம் ஆண்டிலும் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**7.3.7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**

சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தி பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திட சமுதாயம் சார்ந்த அமைப்பாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு பெற்ற அமைப்பாகும். சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு கூட்டமைப்புகள் அடிப்படைத் தளமாக விளங்கும்.

**7.4. திறன் வளர்ப்பு**

**7.4.1. திட்டப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் உள்ள அனைத்து திட்ட பணியாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பயிற்சிகளை வழங்குகின்றது:



- **துவக்கப் பயிற்சி I –** கிராம அளவிலான ஆழ்ந்து கற்றல் பயிற்சி 7 நாட்களுக்கும், நிறுவன கட்டமைப்பு பயிற்சி 16 நாட்களுக்கும் மற்றும் 5 நாட்கள் களப்பணி பயிற்சியாகவும் வழங்கப்படுகிறது
- **துவக்கப் பயிற்சி II –** துவக்கப் பயிற்சி I க்குப் பின்னர், அனைத்து திட்டப் பணியாளர்களுக்கும் துவக்கப் பயிற்சி II - 12 நாட்களுக்கு வழங்கப்படும்
- **கருப்பொருள் சார்ந்த பயிற்சி –** துவக்கப் பயிற்சி I மற்றும் II க்குப் பின்னர், திட்டப் பணியாளர்களுக்கு அவர்களுடைய சிறப்புப் பணி சார்ந்த கருப்பொருள் பயிற்சி 6 நாட்களுக்கு வழங்கப்படும்
- **பிற பயிற்சிகள்**
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பற்றிய புத்தறிவுப் பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கும் மற்றும் தொடர்புடைய பிற அரசுத் துறை அலுவலர்களுக்கும் மாவட்டங்களில் வழங்கப்படுகிறது.

**7.4.2. சமுதாயம் சார்ந்த அமைப்புகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளை வழங்குகிறது.

- சமுதாய விளக்க கையேடு மற்றும் சமூகத் தணிக்கை குறித்து கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள் மற்றும் சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கு பயிற்சிகள்.
- புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுவின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி மற்றும் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு, நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சி மற்றும் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் குடியிருப்பு அளவிலான மன்ற நிர்வாகிகளுக்கான பயிற்சி, கூட்டமைப்பின் துணைக் குழுக்கள் மற்றும் சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.

**7.4.3. முதன்மைப் பயிற்றுநர்களை உருவாக்குதல்**

மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவிலான பயிற்சிகளுக்கான பயிற்றுநர்களை பயிற்றுவிக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் முதன்மைப் பயிற்றுநர்கள் பல்வேறு கருப்பொருள் குறித்த தலைப்புகளில் உருவாக்கப் படுகின்றனர்.

**7.4.4. சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குதல்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் **சமுதாய வளப் பயிற்றுநர்களை** உருவாக்குதில் கீழ்க்கண்டவாறு கவனம் செலுத்துகிறது.



- சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளித்திடவும் மற்றும் தொடர்ந்து கண்காணித்திடவும் 10 முதல் 15 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர் என்ற அளவில் பயிற்றுநர்கள் உருவாக்கப்படுகின்றனர்.
- கிராம அளவில் இளைஞர்கள் பற்றிய அடிப்படை விவரங்கள் சேகரிக்கவும் மற்றும் திறன் பயிற்சி திட்டங்களை கண்காணித்திடவும் ஒரு ஊராட்சிக்கு ஒரு சமுதாய வளப் பயிற்றுநர் (வேலைவாய்ப்பு) என்ற அளவில் பயிற்றுநர்கள் உருவாக்கப்படுகின்றனர்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு, சமுதாய விளக்க கையேடு குறித்த பயிற்சி அளிக்க சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு பயிற்றுனர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் பற்றிய புள்ளி விவரங்கள் பராமரிக்கவும், தேவையை கண்டறியவும் மற்றும் அரசுத்துறை நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும் ஒரு ஊராட்சிக்கு ஒரு சமுதாய மாற்றுத் திறனாளி வழிநடத்துனர் அடையாளம் காணப்பட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.
- வங்கி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்த, பகுதி அளவில் ஒரு பகுதிக்கு 4 நபர்கள் வீதம் சுய உதவிக் குழுக்களிலிருந்து சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு

அவர்களுக்கு கடன் திரும்ப செலுத்தல், கடன் பெற வழிகாட்டுதல், காப்பீடு மற்றும் நிதிக்கல்வி போன்ற இனங்களில் பயிற்சி வழங்கப்படுகிறது.

**7.4.5 வங்கியாளர்கள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, பல்வேறு நிலைகளிலும் நிதி உள்ளாக்கத்திற்கு கவனம் செலுத்தி வருகிறது. ஓய்வு பெற்ற வங்கியாளர்களை ஒருங்கிணைத்து வளப் பயிற்றுநர்களாக உருவாக்கி அவர்கள் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து வங்கிக் கிளை மேலாளர்களுக்கும் சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்க கருத்துக்கள் குறித்த பயிற்சி வழங்கப்படுகிறது.

**7.5. நிதி உள்ளாக்கம்**

**7.5.1. சுய உதவிக் குழுக்களுக்கான ஆதார நிதி**

விடுபட்ட ஏழை மகளிர், மக்கள் நிலை ஆய்வு மூலம் கண்டறியப்பட்டு சுய உதவிக் குழுக்களாக உருவாக்கப்படுகின்றனர். மூன்று மாத கால முடிவில் இந்த சுய உதவிக் குழுக்களை, நிர்ணயிக்கப்பட்ட காரணிகளைக் கொண்டு தரம் பிரித்து குழுவின் சேமிப்பினை பெருக்குவதற்கு ஏதுவாக ஆதார நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் தலா 15,000 ரூபாய் வழங்கப்பட்டு அதனைக் கொண்டு உறுப்பினர்களிடையே கடன் வழங்குவதற்கு இத்தொகை பயன்படுத்தப்படுகிறது.



**7.5.2. சுய உதவிக் குழு – வங்கி இணைப்பு**

தொடர்ந்து சேமித்தல், கணக்குப் புத்தகங்களை முறையாகப் பராமரித்தல், குழு உறுப்பினர்களிடையே கடன்கள் வழங்குதல் மற்றும் அவற்றைத் தவறாமல் திரும்பச் செலுத்துதல் ஆகியவை நமது மாநிலத்தில் உள்ள சுய உதவிக் குழுக்களிடையே நிலவி வரும் சிறந்த நடைமுறையாகும். சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பின்னரே வங்கிகள் மூலம் கடன் பெற தகுதி பெறுகின்றன. சுய உதவிக் குழு–வங்கி இணைப்பின் மூலம் மகளிரை பொருளாதார ரீதியாக அதிகாரப்படுத்தி வாழ்வாதார நடவடிக்கைகளில் முதலீடுகள் செய்ய ஊக்கப்படுத்தி கூடுதல் வருவாய் ஈட்டிடவும், கடன் சுமையிலிருந்து விடுபடவும் வழிவகை செய்யப்படுகிறது. சுய உதவிக் குழு – வங்கிகள் இணைப்பு திட்ட செயலாக்கத்தில் இந்தியாவில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 2014–15 ஆம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பு இலக்காக 6,000 கோடி ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டு அந்த இலக்கு எய்தப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 20,270 கோடி ரூபாய் கடனாக குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**7.5.3. சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

வட்டி மானிய திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளிடமிருந்து பெறப்படும் 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில்

அதிகபட்சமாக 5.5 விழுக்காடு மட்டும் வட்டி மானியமாக மீள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மத்திய அரசால் நேரடியாக செயல்படுத்தப்படும் 4 மாவட்டங்களான தர்மபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை தவிர இதர 27 மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி மகளிர் சுய உதவிக் குழுக்களால் ரூ 3 இலட்சம் வரை பொதுத் துறை வணிக வங்கிகள், மண்டல கிராம வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் பெற்ற கடன் தொகைக்கான வட்டி மானியத் திட்டத்தை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தி வருகிறது. இதுவரை 73,158 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானிய தொகையாக 21.93 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுக்கள் வட்டி மானியத் திட்டத்தில் பயன்பெற ஏதுவாக தனியார் வங்கிகளின் புள்ளி விவரங்களையும் பகிர்ந்து கொள்ள மாநில அரசால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### 7.5.4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று அதனை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் பொருளாதார தேவைகளுக்கான கடன்களாக வழங்குகின்றன. வங்கிகளிடமிருந்து சுய உதவிக்



குழுக்கள் பெற்றுவரும் கடன் அளவு போதுமானதாக இல்லாததால் பெருங்கடன், கூடுதல் நிதி ஆதாரமாகப் பயன்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் மாநிலத்தில் 500 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக 110.03 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## 7.6 வாழ்வாதார மேம்பாடு

### 7.6.1. ஒத்த தொழில் குழு

வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத ஒரே தொழிலின் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஒரு பகுதியில் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழு உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு தொழில் குழுவிற்கும் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், மூலப்பொருட்கள் வாங்குவதற்கும், சந்தை இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும், உறுப்பினர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் முனைவோர் பயிற்சிகளுக்கும் தொகுப்பு நிதி வழங்கப்படுகிறது. இந்த நிதியானது வடிவமைக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் ஒத்த தொழில் குழுக்களுக்கு விடுவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து வருவாயை பெருக்க வழிவகை செய்கிறது. 2013–14 மற்றும் 2014–15ஆம் ஆண்டுகளில் வேளாண் மற்றும் வேளாண் சாராத நடவடிக்கைகளில் 695 ஒத்த தொழில் குழுக்கள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன.

## 7.6.2. திறன் மற்றும் பணியமர்வு பயிற்சித் திட்டம்

### 1) பணியமர்வு தொடர்பான திறன் பயிற்சி

"தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா'' (இளைஞர்களுக்கான திறன் பயிற்சி திட்டம்) திட்டத்தின் மூலம் பணியமர்வுடன் கூடிய தொழில் பயிற்சி ஊரக பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இன்று மாநிலத்தில் ஏற்பட்டு வரும் பெரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தொழிற்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. திறன் பயிற்சியானது தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் ஒர் ஒருங்கிணைந்த பகுதியாக, 15 முதல் 35 வயது வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்களின் திறன்களை வளர்த்து பணியிலமர்த்தும் முக்கிய அடிப்படைப் பணிகளைச் செய்கின்றது.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 25 விழுக்காடு நிதியானது, திறன் மற்றும் பணியமர்வுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம், தகவல் தொழில்நுட்ப சேவை, ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஓட்டுநர், ஆட்டோமொபைல், விருந்தோம்பல், வெல்டிங், கட்டுமானம், போன்ற துறைகளில் பெரும்பான்மையான திறன் பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.



**இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- நிரந்தர பதிவெண்கள் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மட்டுமே பயிற்சி வழங்குவதற்கு தேர்வு செய்யப்படுகிறது.
- பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களில் 75 விழுக்காட்டினர் பணியமர்த்தப்பட வேண்டும்.
- பயிற்சிகளுக்கு ஏற்றவாறு பயிற்சிக் காலமானது 3 முதல் 12 மாதங்கள் வரை வேறுபடும்.
- மென்திறன் மற்றும் வேலையிடத்தில் பயிற்சி ஆகியவை பாடத்திட்டத்துடன் உள்ளடங்கியது.
- பயிற்சி பெற்ற இளைஞர்கள், பணியில் நீடித்திருப்பதை உறுதி செய்வதற்காக பணியமர்வுக்கு பின்னும் ஆதரவு அளிக்கப்படுகிறது.
- 2012–13 முதல் 2014–15 ஆண்டு வரை, பயிற்சி தொடர்பாக 40,255 இளைஞர்களில், 27,752 நபர்களுக்கு பயிற்சி முடிக்கப்பட்டு, அதில் 16,512 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் 12,503 இளைஞர்களுக்கு பயிற்சி நடைபெற்று வருகிறது.

# அட்டவணை 7.5.

## மாவட்ட வாரியாக கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு இலக்கு மற்றும் சாதனை

| வ. எண் | மாவட்டம் | இலக்கு | முடிவுற்றது | நடைபெற்றுக் கொண்டிருப்பது | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 285 | 212 | 73 | 149 |
| 2 | கோயம்புத்தூர் | 2245 | 795 | 1450 | 447 |
| 3 | கடலூர் | 1560 | 1410 | 150 | 671 |
| 4 | தர்மபுரி | 325 | 175 | 150 | 150 |
| 5 | திண்டுக்கல் | 1180 | 1180 | 0 | 816 |
| 6 | ஈரோடு | 1745 | 1450 | 295 | 780 |
| 7 | காஞ்சிபுரம் | 1914 | 1009 | 905 | 605 |
| 8 | கன்னியாக்குமரி | 620 | 360 | 260 | 146 |
| 9 | கரூர் | 510 | 510 | 0 | 271 |
| 10 | கிருஷ்ணகிரி | 960 | 678 | 282 | 330 |
| 11 | மதுரை | 660 | 600 | 60 | 106 |
| 12 | நாகப்பட்டினம் | 907 | 757 | 150 | 458 |
| 13 | நீலகிரி | 345 | 325 | 20 | 77 |
| 14 | நாமக்கல் | 1156 | 816 | 340 | 463 |
| 15 | பெரம்பலூர் | 492 | 432 | 60 | 215 |
| 16 | புதுக்கோட்டை | 1410 | 620 | 790 | 320 |
| 17 | இராமநாதபுரம் | 1200 | 630 | 570 | 483 |
| 18 | சேலம் | 1055 | 762 | 293 | 268 |
| 19 | சிவகங்கை | 840 | 560 | 280 | 444 |
| 20 | திருவண்ணாமலை | 1910 | 910 | 1000 | 823 |
| 21 | தஞ்சாவூர் | 1533 | 353 | 1180 | 100 |
| 22 | சூதனி | 613 | 613 | 0 | 428 |
| 23 | திருநெல்வேலி | 980 | 720 | 260 | 405 |
| 24 | திருப்பூர் | 2850 | 1920 | 930 | 1448 |
| 25 | திருவாரூர் | 745 | 420 | 325 | 149 |
| 26 | திருவள்ளூர் | 1720 | 880 | 840 | 307 |
| 27 | திருச்சி | 1060 | 745 | 315 | 342 |
| 28 | தூத்துக்குடி | 150 | 150 | 0 | 16 |
| 29 | வேலூர் | 2340 | 2010 | 330 | 1105 |
| 30 | விழுப்புரம் | 1775 | 945 | 830 | 495 |
| 31 | விருதுநகர் | 1570 | 1205 | 365 | 755 |
| 32 | புது வாழ்வுத்திட்டம் | 3600 | 3600 | 0 | 2940 |
| **மொத்தம்** | | **40,255** | **27,752** | **12,503** | **16,512** |



# அட்டவணை 7.6.

## திறன் மற்றும் பணியமர்வு திட்டத்தின் கீழ் துறை வாரியான இலக்கு மற்றும் சாதனை (2013–14 மற்றும் 2014–15)

| வ.எண் | தொழில் துறைகள் | பயிற்சி பெற்றவர்கள் | பணியமர்வு செய்யப்பட்டவர்கள் |
|---|---|---|---|
| 1 | இயந்திரத் தொழில்கள் | 3203 | 2511 |
| 2 | தகவல் தொழில் நுட்பம் | 7963 | 5185 |
| 3 | ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை | 6320 | 3272 |
| 4 | விருந்தோம்பல் | 2174 | 1587 |
| 5 | கட்டுமானம் | 251 | 359 |
| 6 | ஆட்டோ மொபைல் | 3938 | 2666 |
| 7 | அழகு கலை | 379 | 387 |
| 8 | தீ மற்றும் பாதுகாப்பு | 8 | 7 |
| 9 | சுகாதாரம் | 913 | 75 |
| 10 | சில்லறை வணிகம் | 2078 | 413 |
| 11 | ஓட்டுநர் | 525 | 50 |
| **மொத்தம்** | | **27,752** | **16,512** |

**2) வேலைவாய்ப்பு முகாமின் மூலம் நேரடி வேலை வாய்ப்பு**

வேலைவாய்ப்பு முகாமானது வேலை கொடுப்பவர் மற்றும் வேலை தேடுபவர்களை ஒரு குடையின் கீழ் இணைக்க தமிழக அரசால் துவக்கப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த முன்முயற்சியாகும். இம்முகாம்களில் இளைஞர்களின் தகுதி மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறு பணியமர்வு செய்யப்படுகின்றனர்.

இம்முகாம்களுக்கு மேற்கொள்ளப்பட்ட துவக்க நிலைச் செயல்பாடுகள்

- வேலைவாய்ப்பு முகாம் நடத்துவதற்கு நாள், இடம் மற்றும் தேதி பற்றி ஊரகப் பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- புகழ்பெற்ற தொழில் மற்றும் உற்பத்தி நிறுவனங்களை இம்முகாம்களில் பங்கேற்க அழைப்பு விடுத்தல்
- முறையான பதிவு, கலந்தாய்வு மற்றும் நிறுவனங்களின் தேவைக்கேற்ப இளைஞர்களை தேர்வு செய்தல்

**2014–15ம்** ஆண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் **67**வது பிறந்தநாளை முன்னிட்டு, **67,000** இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டப் பகுதிகளில் **272** வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் **2,525**



தனியார் தொழில் நிறுவனங்கள் பங்கேற்றன. இதில் திட்டமிடப்பட்ட இலக்கையும் தாண்டி மொத்தம் **83,686** இளைஞர்கள் **(52511**–வாழ்வாதாரத் திட்டத்திலும் **31,175–** புதுவாழ்வுத் திட்டத்திலும்**)** தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு தனியார் நிறுவனங்களில் குறைந்தது **5,000** ரூபாய் முதல் **12,000** ரூபாய் வரையிலான வருமானத்திற்கு பணியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 7.7.**

வேலைவாய்ப்பு முகாம்கள் 2014–15

| வ. எ ண் | மாவட்டம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | | புதுவாழ்வு திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
| 1 | அரியலூர் | 2 | 698 | 4 | 1463 | 6 | 2161 |
| 2 | கோயம்புத்தூர் | 5 | 2352 | 7 | 1283 | 12 | 3635 |
| 3 | கடலூர் | 4 | 458 | 6 | 960 | 10 | 1418 |
| 4 | தர்மபுரி | 2 | 896 | 6 | 1526 | 8 | 2422 |
| 5 | திண்டுக்கல் | 3 | 648 | 5 | 975 | 8 | 1623 |
| 6 | ஈரோடு | 5 | 1593 | | | 5 | 1593 |
| 7 | காஞ்சிபுரம் | 5 | 2970 | 7 | 1986 | 12 | 4956 |
| 8 | கன்னியாக்குமரி | 4 | 712 | | | 4 | 712 |
| 9 | கரூர் | 2 | 723 | 7 | 2189 | 9 | 2912 |
| 10 | கிருஷ்ணகிரி | 3 | 1592 | 6 | 1954 | 9 | 3546 |
| 11 | மதுரை | 5 | 1798 | 6 | 889 | 11 | 2687 |
| 12 | நாகப்பட்டினம் | 3 | 923 | 6 | 1316 | 9 | 2239 |
| 13 | நீலகிரி | 1 | 615 | | | 1 | 615 |
| 14 | நாமக்கல் | 4 | 1628 | 6 | 1378 | 10 | 3006 |
| 15 | பெரம்பலூர் | 2 | 865 | 6 | 1256 | 8 | 2121 |

| வ. எ ண் | மாவட்டம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | | புதுவாழ்வு திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
| 16 | புதுக்கோட்டை | 4 | 517 | 6 | 1179 | 10 | 1696 |
| 17 | இராமநாதபுரம் | 3 | 968 | 5 | 874 | 8 | 1842 |
| 18 | சேலம் | 7 | 3114 | 6 | 915 | 13 | 4029 |
| 19 | சிவகங்கை | 3 | 1143 | 6 | 1363 | 9 | 2506 |
| 20 | திருவண்ணாமலை | 7 | 3836 | 6 | 1326 | 13 | 5162 |
| 21 | தஞ்சாவூர் | 7 | 291 | | | 7 | 291 |
| 22 | தேனி | 2 | 2034 | 5 | 1029 | 7 | 3063 |
| 23 | திருநெல்வேலி | 5 | 2212 | 6 | 743 | 11 | 2955 |
| 24 | திருப்பூர் | 4 | 1122 | | | 4 | 1122 |
| 25 | திருவாரூர் | 3 | 717 | 6 | 907 | 9 | 1624 |
| 26 | திருவள்ளூர் | 5 | 1167 | 7 | 1260 | 12 | 2427 |
| 27 | திருச்சி | 2 | 3670 | | | 2 | 3670 |
| 28 | தூத்துக்குடி | 3 | 3604 | 5 | 783 | 8 | 4387 |
| 29 | வேலூர் | 6 | 2390 | 8 | 987 | 14 | 3377 |
| 30 | விழுப்புரம் | 6 | 3046 | 7 | 1464 | 13 | 4510 |
| 31 | விருதுநகர் | 3 | 4209 | 7 | 1170 | 10 | 5379 |
| | **மொத்தம்** | **120** | **52,511** | **152** | **31,175** | **272** | **83,686** |



## அட்டவணை 7.8.

## வேலைவாய்ப்பு முகாம் மூலம் வேலை வழங்கப்பட்ட துறைகள் வாரியான பட்டியல்

| வ. எண் | தொழிலின் பெயர் | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | புதுவாழ்வு திட்டம் | மொத்தம் |
| 1 | கைபேசி ஒருங்கிணைத்தல் | | 187 | 187 |
| 2 | கணினி | 6498 | 3457 | 9955 |
| 3 | கட்டிட பணி | 5108 | 890 | 5998 |
| 4 | ஆயத்த ஆடைகள் | 8401 | 8778 | 17179 |
| 5 | தொழில் நிறுவனங்கள் | 5530 | 2588 | 8118 |
| 6 | ஓட்டுநர் | 8691 | 12316 | 21007 |
| 7 | மருத்துவ பயன்பாடுகள் | 688 | 253 | 941 |
| 8 | அழகுக்கலை | 127 | 558 | 685 |
| 9 | கோழி வளர்ப்பு | 47 | 206 | 253 |
| 10 | சமையல் கலை | 1658 | 148 | 1806 |
| 11 | சில்லறை வர்த்தகம் | 6475 | 197 | 6672 |
| 12 | சேவை சார்பு | 6638 | | 6638 |
| 13 | இதர தொழில்கள் | 2650 | 1597 | 4247 |
| **மொத்தம்** | | **52,511** | **31,175** | **83,686** |

### 7.6.3. சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

**i) கண்காட்சி**

மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பிரபலப்படுத்தவும் ஆண்டுதோறும் மூன்று மாநில அளவிலான கண்காட்சிகளை பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி சமயங்களில் "மகளிர் மேளா" என்ற பெயரில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நடத்துகின்றது. கைவினைப் பொருட்கள், செயற்கை நகைகள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறு தானியப் பொருட்கள் ஆகியவை இந்த கண்காட்சிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. 2014–15 ஆம் ஆண்டு 466 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 131.39 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை இக்கண்காட்சிகளில் விற்பனை செய்துள்ளன.

தேசிய அளவில், தில்லியில் நடைபெறும் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி மற்றும் மற்ற மாநில தலைமையகத்தில் நடத்தப்படும் மண்டல அளவிலான "சாராஸ்" கண்காட்சிகள் ஆகியவற்றில் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்றுள்ளன. 2014–15 ஆம் ஆண்டில் 70 மகளிர் சுய உதவிக் குழுக்கள், தேசிய அளவில் நடத்தப்பட்ட 11 "சாராஸ்" கண்காட்சிகளில் பங்கேற்று 80.89 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.



**ii) மாநில / மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களின் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்**

மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கமானது தோற்றுவிக்கப்பட்டு அச்சங்கம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் இச்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் மாவட்ட அளவில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில, மாவட்ட, வட்டார அளவில் சிறப்பு விற்பனை கண்காட்சிகளை நடத்துவதுடன் மதிப்பு கூட்டுதல் மற்றும் கவர்ந்திழுக்கும் பேக்கேஜிங் மூலம் போட்டிச் சந்தையில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கின்றன.

**iii) மதி அங்காடி (Mathi KIOSK)**

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்காக நகர்ப்புற பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களான விமானநிலையம், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள்,

கோயில்கள், அரசு அலுவலகங்கள் / நிறுவனங்கள் போன்ற இடங்களிலும் குறிப்பாக சுற்றுலா தலங்கள், வர்த்தக மையங்கள் ஆகிய இடங்களிலும் மதி அங்காடிகள் மற்றும் விற்பனை மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பொம்மைகள், இயற்கை உணவுகள், மூலிகைப் பொருட்கள், கைவினைப்பொருட்கள், நவீன சணல் பொருட்கள் போன்ற சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நகர்ப்புறங்களில் சந்தை வாய்ப்பு அதிகமாக உள்ளது. நகர்ப்புற பகுதிகளிலுள்ள மக்கள் மத்தியில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்துவதற்காகவும், விற்பனை செய்வதற்கும் மதி அங்காடிகள் வாய்ப்பினை ஏற்படுத்துகின்றன.

**7.7. 2014–15ம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்**

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகள் 95 வட்டாரங்களில் உள்ள 2,488 கிராம ஊராட்சிகளில் விரிவாக்கப் பட்டுள்ளது.
- அடிப்படை தகவல் சேகரிப்பு மற்றும் தகவல் தொடர்பு பணிகள் 265 வட்டாரங்களில் முடிக்கப்பட்டுள்ளன.
- 8,257 கிராம ஊராட்சிகளில் மக்கள் நிலை ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.
- 110 வட்டாரங்களில் உள்ள 3,458 கிராம ஊராட்சிகளில் 3,538 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டு சமூக தணிக்கைக்குழு துவங்கப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சி துவக்க நிதியாக மக்கள் தொகைக்கு ஏற்ப ஒரு ஊராட்சிக்கு 25,000 ரூபாய் முதல் 45,000 ரூபாய் வரை 2,488 கிராம ஊராட்சிகளுக்கு 9.64 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.
- 21,085 இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் துவக்கப்பட்டு 8,582 நபர்கள் பயிற்சிகளை முடித்துள்ளனர். மீதமுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி நடைபெற்று வருகிறது.
- 1,131 சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு ஊரக வாழ்வாதார இயக்கத்தின், இயக்க வழிகாட்டி கையேடு குறித்து பயிற்றுநர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 3,42,440 கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களுக்கு 1 முதல் 4 கட்டங்களாக இயக்க வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 272 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 83,686 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.
- 3,491 ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய பிற அரசுத் துறை அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 11.13

இலட்சம் ரூபாய் செலவில் புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- 20,946 ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு 74.70 இலட்சம் ரூபாய் செலவில் பட்டறிவுப் பயணம் அளிக்கப்பட்டுள்ளது.
- சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் 4,000 பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- "ஒரு கிராமம் ஒரு உற்பத்திப் பொருள்" திட்டத்தின் கீழ் 695 ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 7.8. மாநில அரசின் இதர திட்டங்கள்

### 7.8.1. கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கவும், கூட்டு முயற்சியை ஏற்படுத்தவும் மற்றும் அவர்களது திறனை வெளிப்படுத்தும் விதமாகவும் விளையாட்டுப் போட்டிகளுடன் கூடிய கலாச்சாரப் போட்டிகள் வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன. 2014–15 ஆம் ஆண்டில் கலாச்சாரப் போட்டிகள் 160 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு



உறுப்பினர்களுக்கிடையே இக்கலாச்சார போட்டிகள் 2015–16 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

### 7.8.2. கல்லூரிச் சந்தைகள்

இளைஞர்கள் மத்தியில் மகளிர் சுய உதவிக் குழு பொருட்களை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளின் போது கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன. 2014–15 ஆம் ஆண்டில் 153 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 3,420 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று 230.20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 7.8.3. பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையம்

ஒரு புதுமையான முயற்சியாக சுற்றுச் சூழல் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஈடுபட ஊக்கப்படுத்தப்பட்டன. 30 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2014–15 ஆம் ஆண்டில் மேலும் 5 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யும் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, துகள்களாக்கப்பட்டு அந்த பிளாஸ்டிக் துகள்கள் தார்ச் சாலைகள் போடப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச்

செயல்பாடுகளுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை **169.14** இலட்சம் ரூபாய் மதிப்பிலான **576.59** டன் பிளாஸ்டிக் கழிவுகள் துகள்களாக்கப்பட்டு அவற்றைக் கொண்டு **998** கி.மீ தூரத்திற்கு தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

**7.9. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம்**

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் – **1975**ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஒரு அங்கமாக செயல்படுகிறது. பயிற்சிப் புத்தகங்கள் / வழிகாட்டி கையேடுகள் தயாரித்தல், திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குதல் போன்ற முக்கியப் பணிகளை இந்த மையம் மேற்கொள்கிறது. சுகாதாரத் துறை, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை போன்ற அரசுத்துறை நிறுவனங்களின் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சிகளையும் அந்நிறுவனங்களின் நிதி உதவியுடன் செயல்படுத்துகிறது. மேலும் இம்மையமானது, திறன் மற்றும் பணியமர்த்துதல் அலகாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது.



**7.10. முற்றம் – மாத இதழ்**

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் முற்றம் மாத இதழ் வெளிவருகிறது. இவ்விதழானது பயனுள்ள தகவல்களைப் பகிர்வதுடன் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளையும் பரவச் செய்கின்றது. மேலும் உடல் நலம், சுகாதாரம், கிராமப்புற வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, மகளிர் மேம்பாடு மற்றும் சமூக பிரச்சனைகளான பெண் சிசுக் கொலை, வரதட்சணை மற்றும் வன்கொடுமை போன்றவை குறித்த பல்வேறு தகவல்களை கிராமப்புற பெண்களுக்கு அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், முற்றம் மாத இதழ் மூலம் **61,000** மகளிர் சுய உதவிக் குழுக்களின் **12** இலட்சம் மகளிர் பயன் பெறுகின்றனர்.

**7.11. 2014–15 ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்**

- **6,171.74** கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- **84** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு **24.38** கோடி ரூபாய் பெருங்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- **32** மாவட்டங்களில் **153** கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டு **3,420** மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு **230.20** இலட்சம் ரூபாய்க்கு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

- 5 மாவட்டங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா 4 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.
- 2014–15 ஆம் ஆண்டு மூன்று மாநில அளவிலான விற்பனை கண்காட்சிகளில் 466 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 131.39 இலட்சம் ரூபாய்க்கு சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 11 தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சிகளில் 70 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 80.89 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- 1,515 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் 466 நபர்களுக்கு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பேங்கிங் அன்ட் பைனான்ஸ் (IIBF) மூலம் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.



## 8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய

## சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

## 8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

கடந்த 2004 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியை எதிர்பாராதவிதமாக தாக்கிய கொடூரமான ஆழிப் பேரலையால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் அழிந்ததுடன் வள ஆதாரங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. பன்னாட்டவராலும் பாராட்டப்பட்ட தமிழ்நாடு அரசின் துரிதமான நிவாரணம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மூலம், மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி குறைந்ததுடன் உட்கட்டமைப்புகளும் சீராக்கப்பட்டன. நிலைத்த வாழ்வாதாரத்தை மக்கள் அடைய வேண்டும் என்ற அரசின் தொலைநோக்குப் பார்வை, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயலாக்கம் பெற வழிவகுத்தது.

சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் உள்ள கடலோரப் பகுதி மக்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை மீட்கவும், அவற்றை மேம்படுத்துவதுமே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். மக்களின் திறன் மேம்பாடு மூலம் கடலோர வள ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்தலும், ஏற்கத்தகு நுண்தொழில்கள் மூலம் மேம்படுத்துதலும் பிற நோக்கங்களாகும்.



**திட்டத்தின் சிறப்பம்சங்கள் :**

| | | |
|---|---|---|
| செயல்படும் மாவட்டங்கள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி |
| திட்டப் பகுதி | : | 24 வட்டாரங்களிலுள்ள 109 ஊராட்சிகள் |
| பயனடைவோர் | : | 1.55 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர் |
| திட்ட மதிப்பீடு | | ரூ.283.69 கோடி |
| திட்டக் காலம் | : | 9 ஆண்டுகள் |

**திட்டப் பயனாளிகள் :**

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் வசிக்கும் கீழ்க்கண்ட பிரிவினர்:–

- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்

இத்திட்டம் ஐந்து கூறுகளைக் கொண்டுள்ளது. அ) கடலோர வள ஆதார மேலாண்மை ; ஆ) ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள் ; இ) வேலை வாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி ; ஈ) சமுதாய அடிப்படையிலான கடலோர பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை ; உ) திட்ட மேலாண்மை.

**அ. கடலோர வள ஆதார மேலாண்மை**

**1. சமுதாய ஆதரவு :**

கூட்டு வள மையங்களின் உதவியுடன் அடித்தட்டளவில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. ஒவ்வொரு கூட்டு வள மையமும் 5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகளைக் கொண்டுள்ளது. அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் திட்டப்பகுதியில் 28 கூட்டு வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர் (Cluster Coordinator), ஒரு திட்ட செயலாக்குநர் (Cluster Facilitator) மற்றும் இரண்டு வியாபார ஊக்குநர்கள் (Business Promoter) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கூட்டு வள மையங்களுக்கு கணினி, தொலைபேசி வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. சமுதாய மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கில் சிறந்த நுண்தொழில்கள் மற்றும் திறமையான நிர்வாகம் தொடர்பான நிறுவனங்களுக்கு பட்டறிவுப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.



**2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல் :**

திட்ட செயல்பாடுகள் ஆரம்பிக்குமுன், ஒரு அடிப்படை வள ஆதாரக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட நுண் திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன, இந்நுண்திட்டங்கள் வாழ்வாதார வாய்ப்புகள், சுற்றுச்சூழல் மற்றும் பாலினப் பிரச்சினைகளை பிரதிபலிக்கக் கூடியவை ஆகும். வாழ்வாதாரம் தொடர்பான பல்வேறு உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திட்டப் பகுதியிலுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கணினிகள் மற்றும் தளவாடப் பொருட்களுடன் கூடிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**3. மீன் வள ஆதார மேலாண்மை :**

இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், மீன் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு கடலில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்கப்பட்டுள்ளன. நண்டு கொழுப்பேற்றல், கடல்பாசி வளர்த்தல் ஆகியவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மீன் வள மேலாண்மை தொடர்பான பிரச்சினைகளை கண்டறிந்திட மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. கண்டறியப்படும் பிரச்சினைகளுக்கு தக்க வல்லுநர்களின் உதவியுடன் தீர்வு காணப்படுகின்றன.

### ஆ. ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள்

**1. சுய உதவிக் குழுக்களுக்கு நுண் கடனுதவி :**

தேவைப்படும் நேரத்தில் கிடைக்கும் கடனுதவி, சுயஉதவிக் குழுக்களின் நிலைத்த தன்மைக்கு முக்கிய காரணியாகும். மாவட்ட மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகள் மூலம் திட்டப் பகுதியிலுள்ள திறன்மிகு சுயஉதவிக் குழுக்கள் வங்கியாளர்களுக்கு அறிமுகப்படுத்தப் படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சிறப்பு வளமைகள் மற்றும் சீரிய நுண்தொழில்களை நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு வங்கியாளர்களுக்கு பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கியிலிருந்து நேரடி வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தருவதோடு, ICICI வங்கி, NABFINS, NABKISSAN போன்ற நிறுவனங்களின் வியாபார மேம்பாடு முகவர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நியமனம் செய்யப்பட்டு கடனுதவி பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**2. இடர்பாடு மேலாண்மை :**

- **துயர் குறைப்பு நிதி :** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் துயர் குறைப்பு நிதி நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் வாழ்வாதார இழப்பை ஈடுசெய்ய குறைந்த வட்டியில் இந்நிதி மக்களுக்கு கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் 4/5



அளவு பங்கு திட்ட நிதியாகவும், 1/5 அளவு பங்கு பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் உள்ளது. கடன் தொகை ரூ.1000 முதல் ரூ.5000 வரை ஆகும். 10 மாதத் தவணையில் இக்கடன் திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

**அட்டவணை 8.1.**

**துயர் குறைப்பு நிதியின் பயன்பாடு விவரம்**

| வருடம் வாரியாக | பயனடைந்த பயனாளிகள் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2011 – 12 | 1598 | 64.00 |
| 2012 – 13 | 3385 | 152.47 |
| 2013 – 14 | 3708 | 207.71 |
| 2014 – 15 | 5421 | 240.59 |
| **மொத்தம்** | **14,112** | **664.77** |

- **நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திக்கான நிதி :** கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்து வீடுகளில் சமையல் கழிவுகளிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் அமைக்கப்பட்டு, அவை கண்காணிக்கப்பட்டதில், பயனாளிகளுக்கு இக்கலன்கள் மிகவும் பயனளிப்பவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. பயனாளிகளின் கருத்துப்படி, அவர்களின் வருடாந்திர சேமிப்பு, நிகர வருமானம் மற்றும் மாதாந்திர தவணைத் தொகை ஆகியவற்றின் அடிப்படையிலான நிதித் திட்டம் ஒன்று எரிவாயு கலன்கள் அமைக்க உதவிட

உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதித் திட்டம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து பெறப்படும் கடன் தொகை, பயனாளிகளின் பங்குத் தொகை மற்றும் திட்ட மானியம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

- **நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி :** இத்திட்டம் செயல்படும் ஆறு மாவட்டங்களிலும் அதிக அளவில் நுண்தொழில்கள் ஏற்படுத்திட, நாபின்ஸ் நிறுவனத்துடன் 19.06.2013 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஒரு தொழிலின் மொத்த திட்டத் தொகை மதிப்பீட்டில் நாபின்ஸ் நிறுவனத்தின் கடன் தொகை 70 சதவீதமும், பயனாளிகளின் பங்குத் தொகை 5 சதவீதமும், நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி 25 சதவீதமும் ஆகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி 2013 – 14 ஆம் ஆண்டு துவங்கி ஆறு ஆண்டுகளில் 750 நுண் தொழில்கள் ஏற்படுத்தப்படும்.

**இ. வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி**

**1. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு :**

வலுவற்ற குழுக்களை கண்டறிந்து அவற்றிற்கு திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதே போல, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை தொடர்பான பயிற்சிகள்



வழங்கப்படுகின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் அனைத்து விபரங்களையும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பராமரிக்கும் வகையில் மென்பொருள் (Software) உருவாக்கப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள புத்தக பராமரிப்பாளர்கள் மூலம் தமிழில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது. சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து சுமார் 200 சமுதாய வள பணியாளர்களுக்கு திட்டக் காலம் முடிவடைந்த பின்னர் திட்டச் செயல்பாடுகளைத் தொடர்ந்திட தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**2. மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்குதல் :**

தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்து, சிறு படகுகள், கட்டுமரம் மற்றும் வள்ளம் மூலம் மீன் பிடிப்போர் ஆகியோரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட 50 மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சங்க உறுப்பினர்களை கடனிலிருந்து மீட்க, தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்புக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மீன் விற்பனை சங்கங்களுக்கு அலுவலகக் கட்டிடங்களும் இதர உட்கட்டமைப்பு வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் மூன்று மீனவர்கள் சங்கங்களின் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு நடைமுறை மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட

வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மற்றும் படகு கட்டும் தளங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் கையாள்வதற்காக மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**3. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி :**

மக்களிடையே, குறிப்பாக, சுயஉதவிக் குழு உறுப்பினர்களிடையே நுண் தொழில்கள் தொடங்குவதற்கு தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், தொழில் துவங்கிட கிடைக்கும் வசதி வாய்ப்புகளை தெரிவித்தலுமே வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கை பயிற்சியின் நோக்கமாகும்.

**4. நுண் தொழில் மேம்பாடு :**

உற்பத்திக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ளோர் நுண் தொழில்களை துவங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வெற்றிகரமாக நுண்தொழில்களை ஏற்படுத்திட வல்லுநர்கள் / ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளிலிருந்து நகர்ந்து மரபு சார்ந்த மற்றும் புதுமையான உத்திகளின் அடிப்படையிலான நுண்தொழில்களை பயனாளிகள் மேற்கொள்ளச் செய்வது இத்திட்டத்தின் எண்ணமாகும்.



காய்கறி, மூலிகை மற்றும் மா விவசாயம், கருவாடு, மீன் விற்பனை , மலர்த் தோட்டம் அமைத்தல், கொப்பரை உருவாக்குதல், சணல் கயிறு தயாரித்தல், தென்னை ஓலை பின்னுதல், பாக்கு மட்டை தட்டு தயாரித்தல், பொம்மை செய்தல், கடற்சிப்பி பொருட்கள் தயாரித்தல், முந்திரி பருப்பு பதனிடுதல் போன்ற தொழில்களுக்கு இத்திட்டம் நிதி உதவி அளிக்கிறது.

**5. வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சி :**

திட்டப் பகுதிகளில் வாழும் வேலையற்ற இளைஞர்களுக்கு மூன்று மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான காலத்திற்கு வேலை வாய்ப்புடன் கூடிய தகுந்த தொழில் பிரிவுகளில் தொழில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஈ. சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை**

மீனவர்களுக்கு கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து (தகவல் உபகரணங்கள், உயிர் பாதுகாப்பிற்கான வழிமுறைகள் ஆகியவை) பயிற்சிகள் மற்றும் கருத்துப் பட்டறைகள் துறை சார்ந்த வல்லுநர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தொலைநோக்கு அடிப்படையில் கடலோர பள்ளிக் குழந்தைகளுக்கு பேரிடர் மேலாண்மை குறித்த கல்வியறிவு அவசியம் ஆகும். எனவே, சுற்றுசூழல் கல்வி மற்றும் ஆதார கையேடுகள் உருவாக்குதல் தொடர்பாக கருத்துப் பட்டறைகள் நடத்தப்படுகின்றன. இத்தகைய கையேடுகள் குறித்து ஆசிரியர்களுக்கும் விளக்கம்

அளிக்கப்படுகிறது. ஆதார கையேடுகள் தயாரித்தல், அச்சிடுதல், விநியோகித்தல், ஆய்வுகள் மற்றும் மாதிரி பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல் ஆகியவை இத்திட்டக் கூறின் அம்சங்களாகும். கடலோரப் பள்ளிக் குழந்தைகளுக்கு நிதிக் கல்வி அறிவை அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது. கடலோர பள்ளி மாணவர்கள் பட்டறிவுப் பயணம் அழைத்து செல்லப்படுகின்றனர். படக்காட்சிகளோடு மாவட்ட அளவில் கண்காட்சிகளும் மாணவர்களுக்காக நடத்தப்படுகின்றன.

**உ. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு :**

மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் வெளிப்பாடு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. மாதாந்திர ஆய்வுக் கூட்டங்கள் மூலமாக, திட்ட செயல்பாடுகள் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**ஊ. அறிவுசார் மேலாண்மை :**

சமுதாய அளவிலும் கூட்டு வள மைய அளவிலும் அறிவுசார் தேவை மதிப்பீடு நடத்தப்படுகின்றது. இது தொடர்பாக திட்ட அறிவுசார் மேலாண்மை யுக்தி உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து முக்கிய நடவடிக்கைகளும் குறிப்பாக, கூட்டங்கள், பயணங்கள், சிறந்த செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் போன்றவை



தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்படும் “முற்றம்” மாத இதழில் கட்டுரைகளாக வெளியிடப்படுகின்றன. துண்டுப் பிரசுரங்கள், குறும்படங்கள் ஆகியவையும் தயாரிக்கப் படுகின்றன.

**எ. குறிக்கோளை அடைதல் :**

ஒவ்வொரு திட்ட நடவடிக்கையாலும் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை, குடும்பங்களின் செல்வவள தர அடிப்படையில் துல்லியமாகக் கணக்கிடப்படுவதன் மூலம், ஒரு செயல்திறன் மிக்க, இலக்கு எய்தும் வழிமுறையை இத்திட்டம் கொண்டுள்ளது.

# 9. வரவு செலவுத் திட்டம் 2015–16



## 9. வரவு செலவுத் திட்டம்   2015–16

**2015–16**ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. **18,465.98** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், வருவாய் செலவினங்களுக்காக ரூ. **16,612.42** கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ. **1,853.56** கோடியும், அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.**0.25** கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முடிவுரை



## முடிவுரை

தொலை நோக்குச் சிந்தனையுடைய நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ், ஊரகப் பகுதிகளை மேம்படுத்துவதும், ஊரகப் பகுதி மக்களை வளமான வாழ்விற்கு இட்டுச் செல்வதுமே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அடிப்படைக் கொள்கையாகும் .

ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து குக்கிராமங்களிலும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்படும், வளர்ச்சிக்கான திட்டமிடுதலில் ஒரு மைல்கல் ஆகத்திகழும் "தாய் திட்டம்", தன்னிகரற்ற வெற்றியைப் பெற்றுள்ளது. **முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்**, குடியிருப்பு உட்கட்டமைப்புடன் மரபு சாரா எரிசக்தியின் பயனையும் இணைத்து வழங்கும் இந்த அரசின் ஒரு முன்னோடித் திட்டமாகும்.

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வருமானத்தை உயர்த்தும் வகையிலும், ஆதி திராவிடர்/பழங்குடி மக்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோர் நேரடியாக பயன்பெறும் வகையிலும், நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் உட்பட பணிகளின் வகைகளை விரிவுபடுத்தி, மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கிராமப்புற கட்டமைப்புகளை வலுப்படுத்த

அங்கன்வாடி கட்டடங்களும், கிராம, வட்டார சேவை மையங்களும் கட்டப்படுகின்றன.

ஊராட்சி அமைப்புகள் மற்றும் சுயஉதவிக் குழு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து, தமிழகத்தினை முற்றிலும் திறந்தவெளியில் மலம் கழிக்காத மாநிலமாக மாற்றிட முன்னோடி முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்துறையின் நிர்வாக இயந்திரத்தினை வலுப்படுத்தும் நோக்கத்தோடு பல்வேறு தீர்க்கமான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சிகள் **2015–16** ம்ஆண்டிலும் தொடரும். தமிழகத்தில் உள்ள ஊராட்சி அமைப்பின் செயல்பாடுகளை நெறிப்படுத்துவதிலும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்படும் PRIA Soft எனப்படும் மாதிரிக் கணக்கீட்டு முறையும் இதில் அடங்கும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உதவி மற்றும் பங்கேற்பின்றி ஊரக வளர்ச்சித் திட்டங்களின் பலன்களை அடைய இயலாது. எனவே, ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்தவும், அதனுடைய தன்னாட்சியை ஒவ்வொரு அடுக்கிலும் பாதுகாக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வறுமையை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் வலுப்படுத்தி நிலைப்படுத்துதலை மேலும் உறுதிப்படுத்திடும் முயற்சிகளை ஊரக வாழ்வாதார



இயக்கமும், புதுவாழ்வுத் திட்டமும் மேற்கொள்ளும். மகளிர் மற்றும் நலிவடைந்த குடும்பங்களுக்கு நிலைத்த வாழ்வாதார வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் துடிப்பான சமுதாய அமைப்புகள் மூலம் இது உறுதி செய்யப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், மகளிர் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டினை உறுதிப்படுத்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்ந்து செயலாற்றும். அனைத்து பங்கேற்பாளர்களின் ஒருங்கிணைந்த முயற்சியுடன் ஊரகப் பகுதிகளில், கட்டமைப்பு வசதி மேம்பாடு மற்றும் தரமான சேவை வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வை தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுத்தப்படும்.

ஒவ்வொரு குடிமகனும், நல வாழ்வு, கல்வி, குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றிட, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அர்ப்பணிப்பு உணர்வோடு தனது முயற்சியினைத் தொடர்ந்து செயலாக்க உறுதி பூண்டுள்ளது.


**எஸ். பி. வேலுமணி**

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,**


**நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் பயனாளிக்கு சாவி வழங்குதல்





**மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை**





**மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை**





**மாவட்ட வாரியாக குக்கிராமங்களின் எண்ணிக்கை**





**2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு**




**வருவாய் வரம்பின் அடிப்படையில் ஊராட்சிகளின் வகைப்பாடு**




**மாவட்ட வாரியாக ஊரக பரப்பளவு (ச.கி.மீ)**




## தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

### ஆண்டுவாரியாக திட்ட செயலாக்கம்



முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு



தெரு விளக்கு



சிமெண்ட் கான்கிரீட் சாலை



குடிநீர் விநியோகம்



சுடு காடு


தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்



தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பூங்கா அமைத்தல்




சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய அங்கன்வாடி கட்டடம்


36,423
7,226
9,394
88,860
2,798
2,842
தார் சாலை
சிமெண்ட் சாலை
ஈரடுக்கு கப்பிசாலை
ஓரடுக்கு கப்பிசாலை
சரளைக்கல் சாலை
மண்சாலை

ஊரக சாலைகள் (கி.மீ)



புதிய தார் சாலை அமைத்தல்



புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம்




புதிய கிராம ஊராட்சி மன்ற அலுவலகம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் புதிய பண்ணைக் குட்டை அமைத்தல்





மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் புதிய கிராம ஊராட்சி சேவை மையம் அமைத்தல்



மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 67வது பிறந்த நாளை முன்னிட்டு 11.03.2015 அன்று மதுரையில் நடைபெற்ற இளைஞர்களுக்கான தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. இராஜூ அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மதுரை மாநகர மேயர் திரு. வே. இராஜன் செல்லப்பா அவர்களும், அரசு செயலர், மகளிர் திட்ட நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.




## தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம்



**சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**
**மகளிர் மீன் வணிக கூட்டுப் பொறுப்புக் குழு**



சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
ஹாலோ பிளாக் உற்பத்தி அலகு